

கல்கி

KALKI
24.1.1971
40 காசு



இந்த வாரம் அன்பளிப்பு கேட்டு வாங்குங்கள்


she is the bearer of tradition...
IN
CENTURY SAREES
THE CENTURY
SPG. & MFG. CO., LTD.
CENTURY BHAVAN,
WORLI, BOMBAY-25 DD.
Century—For 100% cotton textiles
Adroit(CM) 43

பளிச்சிடும் மேன்மையைப் பாருங்கள் கண்ணார

ஹிந்தாலியம்®

உங்கள் இல்லத்திற்கு வழங்கும் நல்லொளி

வெள்ளியின் பளபளப்பு,
தோற்றத்திலே மதிப்பு,
எளிமையின் வனப்பு...
இதுதான் நீங்கள் பெறுவது,
ஹிந்தாலியம் பாத்திரங்களை
வாங்கும்போது.

ஹிந்தாலியம்
பாத்திரங்களிலே
சமைப்பதும் இன்பம்.
சாப்பிடுவதும்
இன்பம்.

ஹிந்துஸ்தான் அலுமினியம் கார்ப்பன் லிட்.



Sobhagya HAC-370 TM

வெல்டிங் ஒரு மூன்றெழுத்து வார்த்தை

அதற்குச் சிறிது விளக்கம் தேவை

அந்த மூன்று எழுத்துக்கள் ஐஓஎல் என்பது தெளிவு. ஏனெனில் ஐஓஎல் (இந்தியன் ஆக்ஸிஜன் லிமிடெட்) வெல்டிங் தொழில் நுட்பத்தில் முன்னேற்றத்துக்கு எப்போதும் முன்னோடியாக இருந்து, இந்த நாட்டில் புதிய வெல்டிங் உத்திகளை புகுத்தியுள்ளது. அதே சமயத்தில் ஐஓஎல் நம் நாட்டிலேயே பலவகை வெல்டிங் சாதனங்களையும் அதற்குச் சம்பந்தமுள்ள வேறு பொருள்களையும் செய்துள்ளதோடு வேறு எங்கும் உள்ள சிறந்த தொழில் நுட்பவாதிகளுக்குச் சமமான வெல்டிங் தொழில் நுட்பவாதிகள் பலரையும் பயிற்றுவித்துள்ளது.

இன்று நாட்டின் ஒவ்வொரு பெரிய தொழில் பிரதேசத்திலும் 60-க்கும் அதிகமான தொழிற்கூடங்கள், அலுவலகங்கள், டிப்போக்கள், கம்பிரஸிங் நிலையங்களை நிறுவி செயல்பட்டு வருகிறது. ஒரு விரிவான விநியோகிப்புப் டணியையும் அது செய்து வருகிறது. வெல்டிங் சம்பந்தமாக எழக்கூடிய எந்த ஒரு பிரச்னையையும் தீர்த்து வைக்க இந்தியா முழுதும் ஐஓஎல் தொழில் நுட்ப நிபுணர்களும், சர்வீஸ் இன்ஜினியர்களும் பணியாற்றுகின்றனர்.

வெல்டிங் துறையில் முதல்வர்கள் :

IOL


IOC-178R TAM

கல்கி பொருளடக்கம்

சாதாரண, தை 11 * ஜனவரி 24, 1971


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம் :	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பர்ஸோனல் ஆபீஸர் திரு என். கோபாலனுடைய புதல்வி சௌபாக்கியவதி **ஜி. பத்மினி**, B.Sc.,க்கும், பம்பாய் எஸ்.ஐ.இ.எஸ். கல்லூரி பௌதிக விஞ்ஞான பேராசிரியர் திரு **டி. எஸ். வெங்கடராமன்**, M.Sc.,க்கும் திருமணம் சமீபத்தில் சென்னை, தியாகராயநகர், ஸர்வமங்களா கல்யாண மண்டபத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. காலை திருமணத்துக்கும், மாலையில் நடைபெற்ற வரவேற்புக்கும் ஏராளமான நண்பர்களும் பிரமுகர்களும் திரளாக வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்துக் கௌரவித்தனர்.

வாழ்க, மணமக்கள் !



நீங்கள்
எங்கிருந்தாலும்
நம்பகமான
மோட்டார்
உறுப்புகளை
டிவிஎஸ்ஸின்
17 ஆபீஸ்கள்
1000க்கு
மேற்பட்ட
விநியோக
ஸ்தலங்கள்
மூலமாகப்
பெறலாம்

தரமான மோட்டார் உறுப்புகள் நடைமுறைச் செலவைக் குறைக்கின்றன என்பதை டிவிஎஸ் உணருகிறது. அதனால்தான் முதல்தரமான மோட்டார் உறுப்புகளைத் தயாரிக்கும் பெரிய நிறுவனங்களின் சாமான்களை, தென்னாடெங்கும் நான்கு மாநிலங்களில் எங்கள் 17 ஆபீஸ்கள், 1000க்கு மேற்பட்ட விநியோக ஸ்தலங்கள் மூலம் விநியோகிக்கிறோம். இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மோட்டார் உறுப்புகள் எப்பொழுதும் கைவசம் உள்ளன.


டி. வி. சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்-எர்ணாகுளம்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பங்களூர்-செகந்திராபாத்-விசாகபட்டணம்

மெட்ராஸ் ஆட்டோ சர்விஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பங்களூர்-விஜயவாடா-கள்ளிக்கோட்டை

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & அக்ஸஸெரீஸ் லிமிடெட் மதராஸ்

டிவிஎஸ் உங்கள்
நம்பிக்கைக்கு உரியது



TVS

MAS/6088

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்



மலர் 30

இதழ் 26

ஜனநாயகத்தைக் காப்பதே முதல் கடமை

நடக்கவிருக்கும் இடைத் தேர்தல் இந்திரா காந்தி கட்சிக்கும் நிஜலிங்கப்பா கட்சிக்கும் நடக்கிற போட்டா போட்டி அல்ல. நமது அரசியல் சட்ட சாசனத்தை அழித்துவிட வேண்டும் என்று திட்டமிடுபவர்களுக்கும், அவ்வாறு செய்யாமல் சாஸனத்தைக் காத்து தேசத்தை ரட்சிக்க வேண்டும் என்று விரும்புபவர்களுக்கும் இடையே நடக்கும் பலப் பரீட்சையாகும் இத்தேர்தல்.

ஹிட்லர் இங்கிலாந்தின் மீது படை எடுத்தபோது, அத்தேசத்தில் கட்சி வேறுபாடுகளை மறந்து சகலரும் சர்ச்சிலை ஆதரித்து நாஜிகளை எதிர்ப்பதில் ஈடுபட்டனர். ஹிட்லரின் அபாயம் ஏற்பட்ட போது மற்ற கட்சிக்காரர்கள் எவரும் சர்ச்சிலிடம் ''ஹிட்லரை வென்ற பின் நீங்கள் பின்பற்றப் போகும் பொருளாதாரக் கொள்கை என்ன?'' என்று கேட்கவில்லை. உடனடியாக ஏற்பட்ட ஆபத்தைத் தவிர்ப்பதற்காக அனைவரும் ஒன்று சேர்ந்திருந்தனர். அவ்வாறே இப்போது இந்தியாவில் சர்வாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயகத்தை நிலை நிறுத்துவது ஒன்றே அத்தியாவசியப் பிரச்னை. கொள்கை விஷயங்களால் மக்கள் மனம் குழம்பும்படி செய்ய இது தருணம் அல்ல.

நம் நாட்டில் அரசியல் விஷய ஞானமே இல்லாத மக்களும்கூடச் சட்ட சாஸனத்தைக் கிழித்தெறிவதற்கு ஒப்ப மாட்டார்கள்; ஜனநாயகத்தின் இடத்தில் சர்வாதிகாரத்தை அமர்த்துவதை ஏற்க மாட்டார்கள். கம்யூனிஸம் மறைமுகமாக ஆளுகைக்குவருவதை நம்தேசத்தில் எவருமே விரும்ப மாட்டார்கள்.

மனம் போன போக்கில் பிரதமர் திடுமென ஓர் இடைக்காலத் தேர்தலை உண்டாக்கியிருப்பதே, இத்தேர்தலில் வென்றால் அதன்பின் அவர் எப்படி யதேச்சாதிகாரம் புரிவார் என்பதற்கு முன் மாதிரியாகும்.

பொருளாதாரப் பிரச்னைகளாகட்டும், மற்றப் பிரச்னைகள் ஆகட்டும், எதையுமே இன்றைய ஆட்சி பீடத்தினரால் தீர்த்துவைக்க முடியவில்லை. நாட்டில் சட்டமும் சமூக ஒழுங்குப்பாடும் அடிமட்டத்துக்குச் சென்றுவிட்டன. கம்யூனிஸம் என்ற பெயரில் வங்காளத்தில் நடக்கும் பயங்கர வன்முறை நாடு முழுவதும் பரவக் கூடும் என்பதை மக்கள் மறக்கலாகாது. இத்தகைய பிரச்னைகள் யாவற்றிலும் இன்றைய சர்க்கார், தனக்கு ஆள்கிற தகுதி அடியோடு இல்லை என்பதை நன்கு வெளிப்படுத்திவிட்டது. எனவே ஸ்ரீமதி இந்திரா காந்தியிடமே நாட்டு நிர்வாகம் தொடர்ந்து இருப்பதற்கு அனுமதிப்போமாயின் அது பெருத்த விபரீதமாகும்.

கம்யூனிஸ்ட்களுடன் நாம் கூட்டுச் சேரப் போவதில்லை என்று பிரதமர் கூறுவதை ஏற்பதற்கில்லை. ஏனெனில் அவர் இன்று பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பதற்குக் காரணமே கம்யூனிஸ்ட் ஆதரவுதான். வங்காளத்திலும் கேரளத்திலும் மற்ற இடங்களிலும் நடக்கும் வன்முறையைத் தடுக்க ஸ்ரீமதி இந்திரா காந்திக்குத் திறமை இல்லை; அல்லது விருப்பம் இல்லை; அல்லது இரண்டுமே இல்லை என்பதை நாம் காண்கிறோம். எனவே ஸ்ரீமதி இந்திராவின் மறைமுக கம்யூனிஸத்துக்கு மக்களின் ஆதரவு ஒருகாலும் இல்லை என்பதைத் தேர்தலில் நாம் நிரூபிக்க வேண்டும்.

(அடிப்படை: ராஜாஜி ''ஸ்வராஜ்யா''வில் எழுதியது.)

ராஜாஜியின் கருத்துக்கள்

ஸ்ரீ ஏ. டி. கோர்வாலாவின் 'ஒபீனியன்' பத்திரிகை கூறுகிறது:

உலகத்தில் எந்தப் பகுதியிலுமே இப்போது இந்தியாவில் நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலைப் போன்ற முக்கியத்துவம் படைத்த தேர்தல் நடந்ததில்லை. இந்தியா தொடர்ந்து சுதந்திர நாடாக வாழப் போகிறதா என்பதைக் குறித்தே ஏற்பட்டுள்ள தேர்தல் இது. இந்திரா காங்கிரஸ் தனியாகவோ, அல்லது கம்யூனிஸ — வகுப்புவாத சகாக்களுடன் சேர்ந்தோ மீண்டும் ஆட்சியதிகாரம் பெற்றுவிட்டால் இந்தியாவும் அதன் மக்களும் அடியோடு சுதந்திரத்தை இழக்க வேண்டியதுதான்.

சோஷலிஸம் — முதலாளித்துவம் இவை ஏதும் இத்தேர்தலில் பிரச்னை அல்ல. இந்திரா வெற்றி பெற்று விட்டால், சோஷலிஸ்டுகள், முதலாளிகள், பெரிய நிலச்சுவான்கள், சிறிய குடியானவர்கள், சில்லறை வியாபாரிகள், தொழிலக நிர்வாகிகள், தொழிற்சாலை சிப்பந்திகள், கிராமப்புறப் பாட்டாளிகள், நகர்ப்புற ஊழியர்கள் — அனைவருமே அடிமைகளாகவேண்டியதுதான். எனவே இப்போது ஏதோ ஒரு பிரிவுக்குத் தரப்படும் வாக்குறுதிகளால் மக்களின் தீர்ப்புப் பாதிக்கப்படலாகாது. நீங்களும் உங்கள் நாடும் சுதந்திரமாக இருக்கவேண்டுமா அல்லது அதிகாரவர்க்கத்துக்கு அடிமைப்படவேண்டுமா என்ற அடிப்படைக் கேள்வி தவிர வேறெதிலும் கவனத்தைத் திருப்பாதீர்கள். இதை மறவாதீர்கள்! பிற்பாடு காலம் கடந்த பின் வருந்திப் பயனே இல்லை.

இந்திராவுக்குப் போடுகிற வோட்டு, அடிமை வாழ்வுக்குப் போடும் அஸ்திவாரமாகும்.

போலந்திலும், ஹங்கேரியிலும் செக்கோஸ்லவேகியாவிலும் உள்ள மக்களைப் போல் எதேச்சாதிகாரத்துக்கு நாம் ஆளாகக் கூடாது; அந் நாடுகளைப் போல் நம் நாடும் ருஷியாவின் காலடியில் பணிந்து கிடக்கக் கூடாது என்று கருதுவீர்களாயின் இந்திராவையும், அவரது கோஷ்டியையும், கூட்டாளிகளையும் தோல்வியுறச் செய்க!

★

இந்தியாவில் வாழும் முஸ்லீம் பெருமக்கள் — இளைஞர்கள் முதியோர்கள் யாவருக்கும் என் வேண்டுகோள்:

நான் எடுக்கும் முடிவில் உங்களுக்கு நம்பிக்கை இருக்குமாயின்,

என்னுடைய நியாய உணர்வில் உங்களுக்கு நம்பிக்கை இருக்குமாயின்,

கடந்த அரை நூற்றாண்டு காலமாக நான் எவ்வளவு தப்பபிப்பிராயத்துக்கு ஆளாயினும், பொதுஜன ஆதரவை எவ்வளவு இழந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல், இடைவிடாமல் உங்களது நியாயமான உரிமைகளையெல்லாம் மதித்து வாதித்து வந்திருக்கிறேன் என்பதை நீங்கள் கருதுவீர்களாயின்,

உங்களுக்கு நான் அந்தரங்கசுத்தமாகக் கூறும் நல்லுரை இதுவே: வருகிற தேர்தலில் சுயநல சுடுபாட்டை முக்கியமாகக் கொண்ட எவரிடமும் நம்பிக்கை வைக்காதீர்கள். எந்த ராஜ்யமாயினும், எந்தத் தொகுதியாயினும், வேட்பாளரின் சாதி, சமயத்தைப் பாராமல் சுதந்திரக் கட்சி அல்லது ஸ்தாபன காங்கிரஸ் வேட்பாளருக்கே உங்கள் வோட்டைப் போடுங்கள்.

★

பழைய காங்கிரஸின் இரட்டை மாட்டுச் சின்னத்தைப் புதிய காங்கிரஸுக்கு அளித்திருக்கிறார், பிரதம தேர்தல் கமிஷனர். புதிய காங்கிரஸுக்குப் பல்வேறு சட்டசபைகளில் உள்ள பெரும்பான்மை பலத்தின் அடிப்படையில் இந்த உரிமை அதற்கு

வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது சட்டத்தையும் நீதியையும் புறக்கணித்து எடுக்கப்பட்ட முடிவாகும். இவ்விஷயம் சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்குள்ளாகும். ஏற்கனவே பிரிட்டனில் இம்மாதிரியான ஒரு நிலை ஏற்பட்ட போது என்ன முடிவு வழங்கப்பட்டதோ அதே தர்ம நியாய அடிப்படையில் இதற்கும் தீர்வு காணப் பழைய காங்கிரஸ் முயலும்.

பெரும்பான்மையினராக உள்ள படிப்பறிவில்லாத வாக்காளர்கள் கடந்த இருபது ஆண்டுகளாகச் சின்னத்தையே தேர்தலின்போது தங்களுக்கு வழிகாட்டியாகக் கொண்டுள்ளனர். இந்தச் சூழலில் சின்னம் ஒரு சொத்து என்றே கருதப்பட வேண்டும். இந்தச் சொத்து செங்கல்லாலும் சிமிண்ட்டினாலும் கட்டப்பட்ட கட்டடத்தைவிட, பணத்தைவிட முக்கியமானதாகும். இந்தச் சொத்து பழைய காங்கிரஸிடம்தான் இருக்க வேண்டும். தன்னைத் தானே புதிய காங்கிரஸ் என்றும் ஆளும் காங்கிரஸ் என்றும் அழைத்துக் கொள்ளும் ஒரு ஸ்தாபனத்துக்கு இது மாற்றப்படக் கூடாது.

★

காந்தி ஸ்மாரக நிறுவனத்தின் வெளியீடுகளில் கிராமப்புறங்களில் காணப்படும் பழங்காலக் கைராட்டையின் படம் போடப்பட்டிருக்கும். இந்தக் கைராட்டைச் சின்னமும் இரட்டை மாட்டுச் சின்னத்தைப் போலவே நல்லதொரு சின்னமாகும். பழைய காங்கிரஸுக்கும் புதிய காங்கிரஸுக்கும் இடையே இரட்டை மாட்டுச் சின்னம் பற்றி சச்சரவு இருந்து வருகிறது. தேர்தல் கமிஷனின் தீர்ப்புடன் முடிந்து போகிற விஷயமல்ல இது. பழைய காங்கிரஸ் இவ்விவகாரத்தை சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றிருக்கிறது. நான் கூறுகிற யோசனை என்னவென்றால், இரட்டை மாட்டுச் சின்னம், கைராட்டைச் சின்னம் இரண்டையும் திருவுளச் சீட்டுப் போட்டு இரண்டு காங்கிரஸ் கட்சிகளுக்கும் ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்துவிடலாம். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வெளியாகிற வரையில் இடைக்காலத்தில் இவ்விஷயத்தில் இந்தவிதமாக அமைதியான முறையில் முடிவெடுக்கலாம்.

★

தேர்தல் கமிஷனர் இரு காங்கிரஸ் அமைப்புக்களும் வெவ்வேறு பெயர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று கூறியிருப்பது சரியே. ஆனால் மக்கள் மட்டுமின்றிப் பத்திரிகைகளும் ஏற்கனவே இரண்டு கட்சிகளுக்கும் வெவ்வேறு பெயர்களைக் கொடுத்திருக்கின்றன. ஒன்று புதிய காங்கிரஸ்; மற்றொன்று பழைய காங்கிரஸ். மக்களிடையே புழங்கியும், பத்திரிகைகளில் அடிபட்டும் இப்பெயர்கள் நிலைத்து விட்டன. இவற்றிடையே வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளப் புதிய நாமகரணம் ஏதும் தேவையில்லை. அத்துடன் தேர்தல் கமிஷன் பழைய சின்னத்தைப் புதிய காங்கிரஸுக்குக் கொடுத்து விட்டு, பழைய காங்கிரஸை வேறு புதிய சின்னத்தைத் தேடிக் கொள்ளுமாறு சொல்வதும் ரொம்ப அநீதியாகும்.


★

பணத்தின் மதிப்பு அமெரிக்காவிலும் இந்தியாவிலும் வெகுவாக வித்தியாசப்படுகிறது. ஆனால் அரசியலுக்கு ஆகும் ஏராளச் செலவு என்று பார்க்கையில் பிரச்னை அமெரிக்காவானாலும் இந்தியாவானாலும் ஒன்றே.

தேர்தலின் போது வேட்பாளர்களும் கட்சிகளும் ஏற்க வேண்டிய செலவு மிக அதிகமாக இருக்கிறதென்று நான் அடிக்கடி எழுதியிருக்கிறேன். மேலும் இந்த ஏராளச் செலவுகள் ரொம்பவும் அநாவசியமானவையும்கூட. அரசியல் கட்சிகளையும் வேட்பாளர்களையும் இந்த அபரிமிதமான செலவுகளிலிருந்து மீட்கலாம். ஒவ்வொரு வாக்காளருக்கும் தான் ஒரு வாக்காளர் என்பதையும் வாக்காளர் பட்டியலில் தமது எண் என்ன என்பதையும் அறிய அரசாங்கம் வசதி செய்ய வேண்டும். ஒவ்வொரு வாக்காளருக்கும் அவர் எங்கே, எப்போது வாக்குப் பதிவு செய்வது என்பதைச் சொல்ல வேண்டும். இப்போது இந்த விவரங்களையெல்லாம் வேட்பாளர்கள் வாக்காளர்களுக்குத் தெரியப்படுத்துகின்றனர். அல்லது கட்சிகள் தேர்தல் பிரசாரத்தின் ஓர் அங்கமாக இதைச் செய்கின்றன. இதற்கு ஏராளச் செலவு ஆகிறது. மேலும் ஒரு கட்சி செய்த காரியத்தையே இன்னொரு கட்சியும் செய்வதில் உழைப்பும் பணமும் விரயமாகின்றன. அரசு இந்தக் காரியங்களை மேற்கொண்டு அதன் மூலம் வற்புறுத்தல், பயமுறுத்தல், லஞ்சம் ஆகியவை குறைய வழி செய்ய வேண்டும்.

முன்னரே கூறியது போல் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் பணத்தின் மதிப்பைப் பொறுத்து ரொம்பவும் வித்தியாசம் உண்டு. ஆனால் நம் முன்னுள்ள பிரச்னையும் அதைத் தீர்க்க வழியும் ஒன்றே. கட்சிகளும் வேட்பாளர்களும் கட்டாயமாகச் செய்ய வேண்டியிருக்கும் காரியங்களில் பெரும் பகுதியை அரசு மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடில் இந்தியாவில் ஜனநாயகம் அர்த்தமற்றுப் போகும். தேர்தல்களைச் சரியாக நடத்துவது அரசின் கடமை; அதை ஏதோ தனியார் துறை வியாபாரம்போல் வேட்பாளர்களின் பொறுப்பாக்கக் கூடாது.


சென்னை
வெலிங்டன் · ஸ்ரீ கிருஷ்ணா
மேகலா · கிருஷ்ணாவேணி
ஜோஸ் பிலிம்ஸ் அளிக்கும்
P.S.V. பிக்சர்ஸ்
இருதுருவம்
ஈஸ்ட்மென் கலர்-ஜெமினி
M.K.ராமு · வின்சென்ட் · M.S.விஸ்வநாதன் · கண்ணதாசன்
கங்கா · பால்துரைசிங்கம் · பத்மனாபன்
MARS
டைரக்ஷன்
S.ராமனாதன்
தயாரிப்பு
P.S.வீரப்பா
உலக உரிமையாளர் · ஜோஸ் பிலிம்ஸ்



ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

60

ராம நாமத்தைச் சரியாக ஜபம் செய்தும் சுத்த வாழ்க்கை நடத்தியும் வருகிறவர்கள் ஏன் சில சமயம் நோய்க்கு ஆளாகிறார்கள் என்பது சரியான கேள்வியே. யாருமே பூரண சுத்தமடையவில்லை. அடையவும் முடியாது. அசாத்தியம். முயற்சிதான் செய்ய முடியும். அதுவே கடமை. வரம்பை அறிந்து வாழ்க்கை நடத்த வேண்டும். வரம்பு மீறினால் நோய் வந்து தாக்கும். வரம்பு மீறிய உணவும் வரம்பு மீறிய மற்றவையும் நோய்க்குக் காரணம். உணவிலும் மற்ற விஷயங்களிலும் அவனவன் வரம்பை அவனவனே உணர்ந்து வாழ்க்கை நடத்த வேண்டும். இப்படி வாழ்பவன் நீண்ட ஆயுள் பெற்று வாழ்வான்.

(ஹரிஜன் 19-5-1946)

இயற்கை முறையையும் ஆயுர்வேத முறைகளையும் நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆயினும் மேல் நாட்டு வைத்தியம் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். மேல்நாட்டு வைத்தியம் உன்னத நிலை அடைந்திருப்பது உண்மையாயினும் அந்த உன்னத நிலை அடைவதற்காகக் கையாண்டு வரும் முறைகளை நான் கண்டிக்கிறேன். உயிரும் உணர்வும் கொண்ட பிராணிகளை ஹிம்ஸை செய்தும் இன்னும் பல அக்கிரமங்களைச் செய்தும் மனிதனுடைய சரீர நலத்தையே மேலாகக் கருதி மனித உடலைத் தாக்கும் நோய்களுக்கு மருந்து தேடி வருகிறார்கள். பாப காரியங்கள் செய்து மனிதனுடைய உடலைக் காப்பாற்றுவது தருமம் அல்ல. இதனாலேதான் இயற்கை முறையில் எவ்வளவு குறைகள் இருந்த போதிலும், இயற்கை முறை வைத்தியர்களில் அநேகம் பேர் பொய்யர்களாயினும் முயற்சியும் சாமர்த்தியமுமின்றித் தங்கள் தொழிலை நடத்தி வருபவர்களாயினும், இயற்கை வைத்திய முறையை நான் பாராட்டி வருகிறேன். மற்ற வைத்திய முறைகளில் வைத்தியர்களின் உதவியில்லாமல் முடியாது. இயற்கை முறையில் ஒருவன் வைத்தியனைத் தேடாமல் தனக்குத் தானே வைத்தியனாக அமையலாம். இதுவே ஒரு பெரிய லாபம்.

(ஹரிஜன் 11-8-1946)

இயற்கையிலுள்ள பல வேகங்களில் ஆன்ம சக்தியும் ஒரு வேகம். ஆன்ம சக்தியை மறந்துவிடுதல் பெருந்தவறாகும். நம்முடைய முன்னோர்கள் பலர் அதைக் கொண்டே தங்களுடைய வியாதிகளைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். உடலுக்கு வரும் நோய்களில் பலவற்றை வெற்றிகரமாகவே ஆன்ம சக்தியைக் கொண்டு சொஸ்தப்படுத்திக் கொள்ள முடியும். பூத உடலில் ஆன்ம சக்தியும் கலந்தே இருக்கிறது. ஆன்ம சக்தி சிலருக்குத்தான் உண்டு, சிலர்தான் கையாளலாம் என்கிற ஆட்சேபணை சரியல்ல. மேல் நாட்டு மருந்துகளும்கூட எல்லாருக்கும் கிடைப்பது அரிது. பலர் குளிப்பதில்லை என்பதற்காக நாம் குளிக்காமல் இருப்போமோ? பலர் உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாமலிருந்தாலும் நாம் சிலராவது குளித்துச் சுத்தமாக வாழ்க்கை நடத்தினால்தான் பிறருக்குப் பணி செய்ய முடியும். சமூகத்துக்குப் பயன்பட முடியும். தேகத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வது போலவே உள்ளத்தையும் சுத்தமாக வைத்துக் கொண்டு ஆன்ம சக்தி அடையவேண்டும். சமூகத்தில் பலருக்கு இது முடியாது என்று நாமும் அந்த முயற்சி செய்யாமல் விட்டுவிடக் கூடாது.

எல்லா விதத்திலும், அதாவது உடலும் உள்ளமும் பரிசுத்தமாக நோய் இன்றியிருப்பதே தர்ம மார்க்கமாகும். நாம் அந்த மார்க்கத்தில் நின்று மற்றவர்களுக்கும் வழிகாட்ட வேண்டும். வழி காட்டுவதோடு ஆரோக்கிய நிலையில் உடலையும் உள்ளத்தையும் வைத்துக் கொண்டு மற்றவர்களுக்காக நன்றாகப் பாடுபடலாம்.

(ஹரிஜன் 1-9-1946)

மோகினித் தீவு

இரண்டாம் அத்தியாயம்

அந்த ஸ்திரீ புருஷர்கள் சதிபதிகளாய்த்தான் இருக்க வேண்டும்; அல்லது கலியாணமாகாத காதலர்களாகவும் இருக்கலாம். அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டபோது அவர்களுடைய கண்களில் கரைகாணாத காதல் வெள்ளம் பொங்கியது.

அந்த யுவன் பேசிய மொழியிலிருந்து அவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் யூகிக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் இங்கே எப்போது வந்தார்கள்? நான் வந்த கப்பலில் இவர்கள் வரவில்லை என்பது நிச்சயம். பின்னர் எப்படி வந்திருப்பார்கள்? இம்மாதிரி நாட்டியமாடும் தம்பதியைப் போல் இவர்கள் விசித்திரமான ஆடை ஆபரணங்களைத் தரித்திருப்பதன் காரணம் என்ன? ஏதாவது ஒரு நடனக் கோஷ்டியில் இவர்கள் சேர்ந்தவர்களாயிருந்து, ஒருவரோடொருவர் தகுதியில்லாத காதல் கொண்டு உலக அபவாதத்துக்கு அஞ்சி இவ்விடம் ஓடி வந்திருப்பார்களோ? இன்னொரு யோசனையும் என் மனத்தில் உதயமாயிற்று. ஒரு வேளை சினிமாப் படம் பிடிக்கும் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் யாராவது இந்தப் பழைய பாழடைந்த சிற்பக் காட்சிகளுக்கு மத்தியில் படம் பிடிப்பதற்காக வந்திருப்பார்களோ? அப்படியானால், கப்பலோ, படகோ, இத்தீவையொட்டி நிற்க வேண்டுமே? அப்படியொன்றும் நாம் பார்க்கவில்லையே? இவ்விதம் மனத்துக்குள் பற்பல எண்ணங்கள் மின்னல் வேகத்தில் தோன்றி மறைந்தன.

நான் மௌனம் சாதித்தது அந்த இளைஞனுக்குக் கொஞ்சம் வியப்பளித்திருக்க வேண்டும். இன்னொரு தடவை என்னை உற்றுப் பார்த்துவிட்டு, ''தங்களுடையமுகத்தைப் பார்த்தால் தமிழர் என்று தோன்றுகிறது. என் ஊகம் உண்மைதானா?'' என்றான்.

அதற்குமேல் நான் பேசாமல் இருப்பதற்கு நியாயம் ஒன்றுமில்லை. பேசும் சக்தியையும் இதற்குள்ளே என் நா பெற்றுவிட்டது:

''ஆம், ஐயா! நான் தமிழன்தான். நீங்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று காணப்படுகிறது! அப்படித்தானே?'' என்றேன்.

''ஆம்; நாங்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களே. ஆனால் நாங்கள் தமிழ் நாட்டைப் பற்றிய செய்தி கேட்டு வெகு காலம் ஆயிற்று. ஆகையால் தங்களைப் பார்த்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.''

''நீங்கள் எப்போது இந்தத் தீவுக்கு வந்தீர்களோ?''

''நாங்கள் வந்து எத்தனையோ காலம் ஆயிற்று. ஒரு யுகம் மாதிரி தோன்றுகிறது. ஒரு நிமிஷம் என்றும் தோன்றுகிறது. தாங்கள் இன்றைக்குத்தான் வந்தீர்கள் போலிருக்கிறது. அதோ தெரிகிறதே, அந்தக் கப்பலில் வந்தீர்களோ? அடே அப்பா! எத்தனை பெரிய கப்பல்!''

''ஆம். அந்தக் கப்பலில்தான் வந்தேன். ஆனால் இந்தக் கப்பலை அவ்வளவு பெரிய கப்பல் என்று நான் சொல்லமாட்டேன்...''

''அழகாய்த்தான் இருக்கிறது. இது பெரிய கப்பல் இல்லையென்று சொன்னால் எப்படி நம்புவது? எனக்குத் தெரியும்: தமிழர்கள் எப்போதும் தாங்கள் செய்யும் காரியத்தைக் குறைத்துச் சொல்வது வழக்கம்...''


அந்தக் கப்பல் அப்படியொன்றும் தமிழர்கள் சாதித்த காரியம் அல்ல என்றும் யாரோ, வெள்ளைக்கா





ரர்கள் செய்து அனுப்பியது என்றும் சொல்ல விரும்பினேன். ஆனால் அந்த யுவன் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

''இந்தக் கப்பல் எங்கேயிருந்து புறப்பட்டது? எங்கே போகிறது? இதில் யார் யார் இருக்கிறார்கள்? இங்கே எத்தனை காலம் தங்கியிருக்க உத்தேசம்?'' என்று மளமளவென்று கேள்விகளைப் பொழிந்தான்.



''பர்மாவிலிருந்து தமிழ் நாட்டுக்குப் போகிற கப்பல் இது. சுமார் ஆயிரம் பேர் இதில் இருக்கிறார்கள். யுத்தம் பர்மாவை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது அல்லவா? அதனால் பர்மாவிலிருந்து தமிழர்கள் எல்லோரும் திரும்பித் தமிழ் நாட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்...''

''என்ன? பர்மாவை நெருங்கி யுத்தம் வந்தால் அதற்காகத் தமிழர்கள் பர்மாவிலிருந்து கிளம்புவானேன்? தமிழ் நாட்டின் நிலை இப்போது அப்படி ஆகிவிட்டதா என்ன? யுத்தத்தைக் கண்டு தமிழர்கள் பயப்படும் காலம் வந்து விட்டதா?''

அந்த யௌவன புருஷனின் கேள்வி என்னைக் கொஞ்சம் திகைக்க வைத்து விட்டது. என்ன பதில் சொல்வது என்று யோசிப்பதற்குள் இத்தனை நேரமும் மௌனமாயிருந்த அந்த நங்கை குறுக்கிட்டு வீணை கானத்தையும் விட இனிமையான குரலில்,

''அப்படியானால் தமிழ் நாட்டவர் புத்திசாலிகளாகி விட்டார்கள் என்று சொல்ல வேண்டும். யுத்தம் என்ற பெயரால் ஒருவரையொருவர் கொன்று மடிவதில் என்ன பெருமை இருக்



கிறது? அல்லது அதில் சந்தோஷம்தான் என்ன இருக்க முடியும்?'' என்றாள்.

அந்த யுவன் புன்னகை பொங்கிய முகத்தோடும் அன்பு ததும்பிய கண்களோடும் தன் காதலியைப் பார்த்து, ''ஓகோ! உன்னுடைய விதண்டாவாதத்தை அதற்குள்ளே தொடங்கிவிட்டாயா?'' என்றான்.

''சரி, நான் பேசுவது உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் வாயை மூடிக்கொண்டிருக்கிறேன்'' என்று சொன்னாள் அந்தப் பெண்.

''என் கண்மணி! உன் பேச்சு எனக்குப் பிடிக்காமற் போகுமா? உன் பவழ வாயிலிருந்து வரும் அமுத மொழிகளைப் பருகியே யல்லவா நான் இத்தனை காலமும் காலட்சேபம் நடத்தி வருகிறேன்?'' என்று அந்த யுவன் கூறிய சொற்கள் உண்மை உள்ளத்திலிருந்து வந்தவை என்பது நன்கு தெரிந்தது. ஆனால் இவர்கள் என்ன இப்படி நாடக பாத்திரங்கள் பேசுவதைப் போலப் பேசுகிறார்கள்? இவர்கள் யாரா யிருக்கும்?—இதை அறிந்து கொள்வதற்கு என்னுடைய ஆர்வம் வளர்ந்தது.

''நீங்கள் யார், இங்கே எப்போது வந்தீர்கள் என்று இன்னும் நீங்கள் சொல்லவில்லையே?'' என்றேன்.

''அது பெரிய கதை!'' என்றான் அந்த இளைஞன்.

''பெரிய கதையா யிருந்தால் இருக்கட்டுமே! எனக்கு வேண்டிய அவகாசம் இருக்கிறது. இனிமேல் நாளைக் காலையிலேதான் கப்பலுக்குப் போக வேண்டும். இராத்திரியில் எனக்குச் சீக்கிரம் தூக்கம் வராது. உங்களுடைய கதையை விவரமாகச் சொல்லுங்கள், கேட்கிறேன். அதைக் காட்டிலும் எனக்குச் சந்தோஷமளிப்பது வேறொன்றுமில்லை.''

அந்த நங்கை குறுக்கிட்டு, ''அவர்தான் கேட்கிறார், சொல்லுங்களேன்! நமக்கும் ஓர் இரவு பொழுது போனதாகும். இந்த மோகன வெண்ணிலவை ஏன் வீணாக்க வேண்டும்? எல்லாரும் இந்தப் பாறையில் உட்கார்ந்துகொள்ளலாம். உட்கார்ந்தபடி கதை சொல்லுவதும் கதை கேட்பதும் சௌகரியமல்லவா?'' என்றாள்.

''எல்லாம் சௌகரியம்தான். ஆனால் நீ என்னைக் கதை சொல்லும்படி விட்டால்தானே? இடையிடையே நீ குறுக்கிட்டுச் சொல்ல ஆரம்பித்து விடுவாய்.''

''ஒன்றும் குறுக்கிட மாட்டேன். நீங்கள் ஏதாவது ஞாபக மறதியாக விட்டு விட்டால் மறந்ததை எடுத்துக் கொடுப்பேன். அதுகூட ஒரு பிசகா?'' என்றாள் அந்தப் பெண்.

''பிசகா? ஒரு நாளும் இல்லை. உன்னுடைய காரியத்தைப் பிசகு என்று சொல்வதற்கு நான் என்ன பிரம்மதேவரிடம் வரம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேனா? நீ எது செய்தாலும் அதுதான் சரி. இருந்தாலும் அடிக்கடி குறுக்கிட்டுப் பேசாமல் என் போக்கில் கதை சொல்ல விட்டாயானால் நன்றாயிருக்கும்.''

இப்படிச் சொல்லிக் கொண்டே அந்த யுவன் பாறையில் உட்கார, யுவதியும் அவன் அருகில் உட்கார்ந்து, அவனுடைய ஒரு தோளின் மேல் தன்னுடைய கை ஒன்றைப் போட்டுக் கொண்டாள். அந்தச் சிறு செயலில் அவர்களுடைய அன்யோன்ய தாம்பத்தியவாழ்க்கையின் பெருமை முழுதும் நன்குவெளியாயிற்று.

அவர்களுக்கு அருகில் நானும் உட்கார்ந்தேன். ஏதோ ஓர் அதிசயமான


அபூர்வமான வரலாற்றைக் கேட்கப் போகிறோம் என்ற எண்ணத்திலுல் என் உள்ளம் பரபரப்பை அடைந்திருந்தது. கடல் ஓடையில் காத்திருந்த கப்பலையும் அதற்கு வந்த அபாயத்தையும் பர்மா யுத்தத்தையும் அதிலிருந்து தப்பி வந்ததையும் அடியோடு மறந்து விட்டேன். அழகே உருக்கொண்ட இந்தக் காதலர்களின் கதையைக் கேட்க அளவில்லாத ஆவல் கொண்டேன்.

காற்று முன்னைக் காட்டிலும் கொஞ்சம் வேகத்தை அடைந்து 'விர்'என்று வீசிற்று. தீவிலிருந்த மரங்களெல்லாம் அசைந்தபடி 'மர்மர' சப்தத்தை உண்டாக்கின. இப்போது கடலிலும் கொஞ்சம் ஆரவாரம் அதிகமா யிருந்தது. கடல் அலைகளின் குமுறல் தூரத்தில் எங்கோ சிம்ம கர்ஜனை செய்வது போன்ற ஓசையை எழுப்பியது.

(தொடரும்)

பெண்களைப் பற்றி 007

பெண்கள் கருத்துள்ள, பத்திரமான காரோட்டிகள் தாம். ஆனால் 'பஸ்ட் கிளாஸ்' என்று சொல்லி விட முடியாது. அவர்களிடம் உஷாராக இருப்பது ஜேம்ஸ் பாண்ட் வழக்கம். ஒரு காரில் நாலு பெண்கள் இருந்து விட்டால் அதுபோல ஆபத்துக்கு இடம் வேறு இல்லை. இரண்டு பெண்கள் சேர்ந்து வண்டியில் இருந்தாலும் விபத்து நேரலாம். காரணம்: பெண்களால் வண்டியில் பேசாமல் இருக்க முடியாது. ஒருவர் முகத்தை ஒருவர் பாராமல் அவர்களால் பேசவும் முடியாது. காதிலே பேச்சு விழுந்தால் மட்டும் போதுமா? எதிராளியின் முகத்தைப் பார்த்தபடி இருக்கவேண்டும்,




அவர்களுக்கு. சொல்லுக்கும் பின்னால் தொனியில் ஒலிக்கும் பொருள் அப்போதுதான் புரியுமோ என்னவோ? அல்லது தாம் பேசும்போது கேட்பவர் எப்படி எடுத்துக் கொள்கிறார் என்பதைக் காண ஆவலோ? எப்படியோ, ஓடும் காரில் இரண்டு பெண்கள் இருந்தாலே சாலையில் தொடர்ந்து பார்வை இராது. நாலு பேர்கள் இருந்துவிட்டாலோ போச்சு! ஓட்டும் பெண், தனக்குப் பக்கத்தில் உள்ளவளிடம் பேசுவதோடு, பின்னால் இருப்பவரையும் கவனித்தாக வேண்டுமே!

''தண்டர்பால்'' நாவலில் ஐயான் ஃப்ளெமிங்
- தம்பி சீனிவாசன்

★

மேற்கு ஜெர்மனியில் சினிமா தொழில் மோசமான நிலையில் இருந்து வருகிறது. 1959 முதல் 1969 வரை 7085 திரைப்படக் கொட்டகைகள் இருந்தன. இப்போது அவற்றின் எண்ணிக்கை 3739 ஆகக் குறைந்து விட்டது. திரைப் படங்களைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்து விட்டது. 1959ம் ஆண்டில் 81·7 கோடி ரசிகர்கள், சினிமா பார்த்தார்கள் என்றால், 1969ல் இத்தொகை 18 கோடியாகக் குறைந்துவிட்டது. சினிமா தொழிலில் ஏற்பட்டுள்ள இறங்குமுகம் இன்னும் தொடர்ந்து நீடிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.



ஜெர்மன் சினிமா தொழிலில் ஏற்பட்டுள்ள இந் நிலைக்குக் காரணங்கள் என்ன? சினிமா படங்களின் தரமே இதற்கு முக்கிய காரணம். ''சினிமாவும் மக்களின் போக்கும்'' குறித்து, பெர்லின் சினிமா முன்னேற்றச் சங்கம் ஒரு ஆய்வுகள் நடத்தியது. மக்களில் 40 சத விகிதத்தினர், சினிமாவுக்கே போவதில்லை. மற்றவர்களில் 43 சத விகிதம்பேர், சினிமாவுக்குப் போகிறார்கள்; ஆனால் எப்போதாவதுதான்! எனவே மக்களின் தேவைக்கும் விருப்பத்துக்கும் ஏற்ப, திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதில்லை என்பது தெளிவாகிறது. ஆபாசக் காட்சிகளும், ''மலிவான ஸ்டண்ட்'' காட்சிகளும் அடங்கிய திரைப்படங்கள் தயாரித்ததின் மூலம், திரைப்படத் தயாரிப்பாளர்கள், தங்கள் தலையில் மண்ணைத் தூக்கிப் போட்டுக் கொண்டனர். ''செக்ஸ்'' படங்களும் கிளுகிளுப்பு உணர்ச்சியைத் தூண்டும் திரைப்படங்களும் மக்களின் ஆதரவைப் பெறுவதில்லை. — யூ. பி. எஸ்.

★

விமானத்துக்குள் 600 மைல்!

மேற்கு ஜெர்மனியில் அண்மையில் நடந்த ஒரு விசாரணையில் தெரிய வந்தது இது:



ஓர் ஏர்ஹோஸ்டஸ் சராசரி 2 வருடம், 8 மாதம், 12 நாட்கள் மட்டுமே அந்த வேலையில் இருக்கிறாள். அதற்குப் பின் அவள் திருமணம் செய்து கொண்டு விடுவதால் அந்த வேலையில் நீடிக்க முடிவதில்லை. தன் பதவி காலத்தில் அவள் ஜெட் விமானங்களில் மட்டுமே பறந்து கொண்டிருந்தால் மொத்தம் 12 லட்சம் மைல்கள் பறக்கிறாள்! விமானத்துக்குள் நடக்கும் மொத்த தூரம்: 600 மைல்!

ஆதாரம்: பெமினா தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

★

இந்திரா காந்தி
பிறருடைய
புத்திமதிகளைக்
கவனமாகக்
கேட்டுக்கொள்வார்;—
பிறகு
தம் இஷ்டம்போல
நடப்பார்
என்கிறது ''டைம்.''

— முத்து





ஹாக்கி — மாணவர்களும் நிபுணர்களும்

சென்னை நகரசபையின் எழும்பூர் மைதானம். தெற்கத்தியப் பிரிவு சர்வகலா சாலைகள் ஹாக்கிப் போட்டிக்காக இறுதியில் சென்னை சர்வகலாசாலை கோஷ்டியும் மைசூர் சர்வகலாசாலை கோஷ்டியும் போட்டியிட்டன.

சென்னை சர்வகலாசாலை கோஷ்டியினர் 'டீம் ஸ்பிரிட்'டோடு ஆடவே மைசூர் கோஷ்டியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. சென்னை சர்வகலாசாலை கோஷ்டியைச் சேர்ந்த கணேசன் ஒரு கோல் போட்டுச் சென்னைக்கு வெற்றியைத் தேடித் தந்தார். இந்தப் போட்டியை அமைதியாகவும் உற்சாகத்தோடும் மாணவர்கள் திரளாக வந்து கண்டு களித்தனர். ஆட்ட முடிவில், சென்னை சர்வகலாசாலை துணைவேந்தர் திரு சுந்தர வடிவேலு மாணவர்கள் இருந்த திசை நோக்கிக் கைகூப்பி வணங்கினார். "இத்தனை திரளாக நீங்கள் ஹாக்கி ஆட்டத்தைக் காண வந்திருப்பதில் திருப்தி!" என்றார்.

மாணவர்கள் கோரஸாக, "எங்களுக்குக் கல்லூரி கிடையாது. இங்கே வந்து விட்டோம் !" என்றனர், பனிச்சென்று.



சென்னை சர்வகலா சாலை கோஷ்டி 'கோச்'

"அப்படியா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் துணை வேந்தர்.

"எங்களுக்குக் கல்லூரிகள் திறக்க வேண்டும்" என்று துணைவேந்தரிடம் மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஜயித்தவர்களைப் பார்த்து, "நீங்க ஜயித்தீர்களென்று குதிக்காதீர்கள்" என்ற துணை வேந்தர், தோற்றவர்களைப் பார்த்து, "நீங்க தோற்றோமுன்னு வருத்தப்படாதீங்க. உங்களுக்குச் சமாதானம் சொல்றதுக்கு நான் இருக்கேன்" என்றார். இவ்வாறு 'ஸ்போர்ட்ஸ்மென்ஷிப்' வேண்டும் என்று அறிவுரை வழங்கினார் துணைவேந்தர். ரொம்ப சரி ! கல்வித் துறையிலும் மாணவர்கள் 'ஸ்போர்ட்ஸ்மென்ஷிப்'பை எதிர்பார்ப்பதில் தவறில்லைதானே ?

ஹாக்கியில் இந்திய கோஷ்டியினர் உலகுக்கே முடிசூடா மன்னர்களாக விளங்கி வந்தனர். இவர்களது பட்டத்தைப் பாங்காக்கில் நடைபெற்ற ஆசியப் போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டி பறித்துவிட்டது. ஹாக்கியில் சூரர்களான இந்திய ஹாக்கி ஆட்டக்காரர்கள் இந்தப் பட்டத்தைத் துறக்க வேண்டிய காரணம் என்ன?

இப்படி எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் போது பாங்காக்கில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நேரில் கண்டுவந்த திரு எஸ். பத்மநாபன் அதற்கு விளக்கம் கொடுத்தார்:


"பாங்காக்கில் இந்திய கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்கும் நடைபெற்ற இறுதியாட்டத்தைப் பார்த்தேன். இந்திய ஹாக்கி முன்னணி ஆட்டக்காரர்கள் இரண்டு தடவை 'கோலு'க்கு அருகில் பந்தைக் கொண்டு போயும்கூடக் கோல் போடும் சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டனர். பாங்காக்கில் ஹாக்கிப் போட்டி நடைபெற்ற மைதானம் ஒரே மண் குவியலடங்கிய மைதானம். எப்படி இந்த மைதானத்தில் ஆசியப் போட்டியை நடத்த முன்வந்தார்களோ தெரியவில்லை. ஆனால் இந்தக் கஷ்டம் இரண்டு பேருக்கும் பொதுவாக உள்ளதுதானே? ஆகவே, இந்தக் குறை இந்தியக் கோஷ்டிக்குச் 'சால்ஜாப்பு' ஆகாது! இந்தப் பந்தயத்தைக் காணத் திரளாக வந்திருந்த இந்தியர்களும் இந்திய கோஷ்டிக்கு உற்சாகம் ஊட்டினர். கடைசியில் பாகிஸ்தான் கோஷ்டி ஒரு கோல் போட்டு வெற்றியைத் தட்டிக் கொண்டது. மைதானத்தைப் பாகிஸ்தான் ஆட்டக்காரர்கள் தொட்டுத் தொட்டு வணங்கி, 'அல்லா ! அல்லா!' என்று குதாகலத்துடன் கோஷமிட்டது என் நினைவில் அப்படியே இருக்கிறது !"



வெற்றி தேடிக் கொடுத்த கணேசன்

இப்பொழுது பாங்காக்கில் இழந்த முடிசூடா மன்னர் பதவியைத் திரும்பப் பெற இந்திய கோஷ்டியினர் லாகூருக்கு விமானமேற விருக்கிறார்கள். பாகிஸ்தான் மண்ணில் என்ன ஆகிறதோ, பார்க்கலாம்!

— குண்டுமணி



மலைகளை வென்ற ரயில்கள்!

1860ல் கலிஃபோர்னியா மாநிலத்தில் ஒரு மனிதனைப் பார்த்து மக்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ''பித்துக்குளி'' ஜுடா என்று அவனுக்குப் பட்டப் பெயர் சூட்டினார்கள். ஏனெனில், அவன் நிவாடா மலைத் தொடரில் ஓர் இருப்புப்பாதையை அமைக்கத் திட்டம் வகுத்துக் கொண்டிருந்தான். இந்தப் பாதையை அமைத்து விட்டால் அதற்கு முன்னும் பின்னும் ஏற்கனவே உள்ள இருப்புப் பாதைகளுடன் இணைப்பு ஏற்பட்டு விடும்; பின்னர் அமெரிக்கக் கண்டத்தின் கிழக்குக் கோடியிலிருந்து மேற்குக் கோடி வரை ரயில் பிரயாணம் செய்வது சாத்தியமாகும் என்பது அவன் கருத்து.

1865 முதல் 1869 வரை பாடுபட்டதில் தியோடோர் ஜுடாவின் கனவு நனவாயிற்று. மத்திய பஸிபிக் ரயில்வே கம்பெனிக்காக ஆயிரக்கணக்கான சீனத் தொழிலாளர்கள் பாடுபட்டு இதனைச் சாதித்தார்கள். இன்றைக்கும் யோசித்துப் பார்க்கையில் நம்ப முடியாத காரியமாகப் படுகிறது இந்த மாபெரும் பணி. ஏனெனில், உலகிலுள்ள, மிக மிக ஆபத்தான செங்குத்து சரிவுகளும் கொண்ட மலைத்தொடர்களுள் ஒன்று நிவாடா மலைத் தொடர். இந்நாட்களில் உள்ளதுபோல் அக்காலத்தில் மின்சக்தியால் இயங்கும் ஆயுதங்கள் ஏதும் கிடையாது. புல்டோஸர், கிரேன் போன்ற உபகரணங்களும் ஏதும் இல்லை. 'டைனமைட்' எனப்படும் முன்னேற்றகரமான வெடிப் பொருள் அன்று இல்லை. மண்வெட்டியையும் கடப்பாறையையுமே துணை கொண்டு தொழிலாளர்கள் படிப் படியாக முன்னேறினார்கள்.

பாறைகளைத் தகர்க்க நைட்ரோ கிளிஸிரின் என்ற வெடிமருந்தை அப்படியே பக்குவப்படுத்தாமல் உபயோகித்தார்கள். இதனால் நிலச் சரிவு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகுதியாக இருந்தன.



இவ்வாறெல்லாம் இருப்பினும் இருப்புப் பாதையைச் சமைத்துக் கொண்டே வந்த மத்திய பஸிபிக் ரயில்வே ஊழியர்கள் 1869ம் ஆண்டில் யூனியன் பஸிபிக் ரயில்வே ஊழியர்களை புரோமான்டரி என்ற ஊரில் சந்தித்தார்கள். இருப்புப் பாதைகள் இணைந்தன. நடவாதது நடந்து விட்டது!

*　　　*　　　*

பல்சக்கர அமைப்புடன் மலைமேலே ஏறும் ரயிலுக்கு இருப்புப் பாதை உலகில் முதன் முதலாக அமைக்கப்பட்டது வாஷிங்டன் மலை மீதுதான். 1852ல் ஸில்வெஸ்டர் இது பற்றிப் பேசியபோது எல்லாரும் சொன்னார்கள்: ''முப்பத்தெட்டு சதவீதம் சரிவான அமைப்புக் கொண்ட மலையில், மக்கள் அமர்ந்திருக்கும் ரயில் வண்டிகளை, கனக் குறைவான ரயில் இஞ்சின் எதனாலும் தள்ளிக் கொண்டோ, இழுத்துக்கொண்டோ செல்ல முடியாது !''

இப்படித் தம் பேச்சுக்கு மறுப்புத் தொடங்கியதும் ஸில்வெஸ்டர், ''பேசுவானேன் ? செய்து காட்டுகிறேன்'' என்று சவால் விட்டார். 1869ல் வேலைகள் தொடங்கின. அப்போது ரயில் போக்குவரத்து அமெரிக்காவில் ஆரம்பமாகிச் சரியாக இருபது ஆண்டுகளே ஆகியிருந்தன. அன்று வாஷிங்டன் மலை மீது மக்களை ஏற்றிச் சென்ற அதே ரயில் இன்றைக்கும் உல்லாசப் பயணிகளை அழைத்துச் செல்கிறது.

எந்தப் பருவமானாலும் சரி, வாஷிங்டன் மலை மீது ரயில் பிரயாணம் செய்வது ஓர் இனிய அநுபவம்தான். எனினும் அக்டோபரில் — இலையுதிர் காலத்தில் — மரங்களின் இலைகளெல்லாம் பசுமை மாறிச் சிவப்பும், மஞ்சளுமாய்த் தோன்றி உதிர ஆரம்பிக்கும் கட்டத்தில் அங்கே செல்ல நேர்ந்தால் அது அதியற்புதமான காட்சியாகத்தான் விளங்கும்.

அத்தியாயம் ஏழு

மக்கள் குதூகலம்

ஓடக்கார முருகய்யன் தன் மனைவி போட்ட கூக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திகைத்தான். மறுபடியும் அவளைப் பார்த்துக் கையினால் சமிக்ஞைகள் செய்து கொண்டே, ''பெண்ணே! என்ன உளறுகிறாய்? உனக்குப் பைத்தியமா?'' என்றான்.

''எனக்கு ஒன்றும் பைத்தியமில்லை. உனக்குப் பைத்தியம்; உன் அப்பனுக்குப் பைத்தியம்; உன் பாட்டனுக்குப் பைத்தியம். உனக்கு இவரை அடையாளம் தெரியவில்லையா? ஈழத்தை வெற்றி கொண்டு மன்னன் மகிந்தனை மலை நாட்டுக்குத் துரத்திய வீராதி வீரரை உனக்கு இன்னாரென்று தெரியவில்லையா? சக்கரவர்த்தியின் திருக்குமாரரை, சோழ நாட்டு மக்களின் கண்ணின் மணியானவரை, காவேரித் தாய் காப்பாற்றிக் கொடுத்த தவப் புதல்வரை உன்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையா? அப்படியானால், இவரோடு எதற்காக நீ புறப்பட்டாய்? எங்கே போகப் புறப்பட்டாய்?'' என்றாள் ராக்கம்மாள்.

இளவரசர் இப்போது குறுக்கிட்டு, ''பெண்ணே! நீ என்னை யார் என்றோ தவறாக நினைத்துக் கொண்டாய்! நான் ஈழ நாட்டிலிருந்து வந்த வியாபாரி. நான்தான் இவனை என்னுடன் வழி காட்டுவதற்காக அழைத்துக் கொண்டு புறப்பட்டேன்! இவன் யார்? உன் கணவனா? வேணுமானால் இவனை உன்னோடு அழைத்துக் கொண்டு போ! வீண் கூச்சல் போடாதே!'' என்றார்.

இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த போதே அவர்களைச் சுற்றிலும் ஜனங்கள் கூடி விட்டார்கள். கூட்டம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டிருந்தது. வந்தவர்கள் எல்லாரும் இளவரசரை உற்றுப் பார்க்கலானார்கள்.



பொன்னியின் செல்வன்

அப்போது ராக்கம்மாள் இன்னும் உரத்த குரலில், ''ஆ! தெய்வமே! இது என்ன? பொன்னியின் செல்வருக்குச் சித்தப் பிரமையா? கடலில் மூழ்கிய போது நினைவை இழந்து விட்டீர்களா? அல்லது அந்தப் பாவி புத்த பிக்ஷுக்கள் இப்படித் தங்களை மந்திரம் போட்டு மயக்கி வேறொருவர் என்று எண்ணச் செய்து விட்டார்களா? அல்லது, — ஐயையோ! — அப்படியும் இருக்குமா? தாங்கள் இறந்து போய், தங்கள் திருமேனியில் வேறு எவனேனும், கூடு விட்டுக் கூடு பாயும் வித்தை தெரிந்தவன், வந்து புகுந்திருக்கிறானா? அப்படியெல்லாம் இருக்க முடியாது! கோமகனே! நன்றாக யோசித்துப் பாருங்கள். தாங்கள் வியாபாரி அல்ல. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருப்புதல்வர். உலகத்தை ஒரு குடை நிழலில் ஆளப் பிறந்தவர். சந்தேகமிருந்தால் தங்கள் உள்ளங் கைகளைக் கவனமாகப் பாருங்கள். சங்கு சக்கர

ரேகைகள் இருக்கும்!'' என்று கத்தினாள்.

உடனே இளவரசர் அருள்மொழி வர்மர் தம் இரு கைகளையும் இறுக மூடிக் கொண்டார்.

'' பெண்ணே ! வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்க மாட்டாயா !'' என்று சொல்லி விட்டு, முருகய்யனைப் பார்த்து, ''இது என்ன தொல்லை ? இவளுடைய கூச்சலை நிறுத்த உன்னால் முடியாதா ?'' என்று கேட்டார்.

முருகய்யன் தன் மனைவியின் அருகில் வந்து காதோடு, ''ராக்கம்மா! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும்! பேசாமலிரு ! இளவரசர் யாருக்கும் தெரியாமல் வியாபாரி வேஷத்தில் தஞ்சாவூர் போக விரும்புகிறார்!'' என்றான்.

''அடபாவி மகனே! இதை முன்னாடியே சொல்லியிருக்கக் கூடாதா? புத்த மடத்தில் இளவரசர் இருக்கவே மாட்டார் என்று சொன்னாயே? அந்தப் புத்தியோடுதான் இப்போதும் இருந்திருக்கிறாய்? ஐயையோ! என்ன குற்றம் செய்து விட்டேன்! ஆசை மிகுதியால் உளறி விட்டேனே? பாவிப் பழுவேட்டரையர்கள் தங்களைச் சிறைப்படுத்திப் பழி வாங்கச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே! அது தெரிந்திருந்தும் இப்படித் தங்களைப் பகிரங்கப்படுத்தி விட்டேனே ? இளவரசே ! ஆனாலும் நீங்கள் அஞ்ச வேண்டாம். பழுவேட்டரையர்கள் தங்கள் திருமேனியில் ஓர் அணுவுக்கும் தீங்கு செய்ய முடியாது. என்னைப் போலும் என் கணவனைப் போலும் லட்சோபலட்சம் பேர்கள் தங்கள் கட்சியில் நின்று தங்களைப் பாதுகாக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்!'' என்றாள். உடனே தன்னைச் சுற்றிலும் நின்ற பெருங் கூட்டத்தைப் பார்த்து, ''நான்



சொன்னதை நீங்கள் எல்லாரும் ஆமோதிக்கிறீர்கள் அல்லவா? உங்களில் யாரேனும் பழுவேட்டரையர் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்டா ? அப்படியானால், அவர்கள் இப்படி முன்னால் வாருங்கள் ! என்னை முதலில் கொன்றுவிட்டுப் பிறகு இளவரசருக்குத் தீங்கு செய்ய எண்ணுங்கள் !'' என்று அலறினான்.

அது வரையில் அடங்காத வியப்புடன் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள், உடனே, ''பொன்னியின் செல்வர் வாழ்க! ஈழங் கொண்ட வீராதி வீரர் வாழ்க!'' என்று ஒரு பெரிய கோஷத்தைக் கிளப்பினார்கள். அதைக் கேட்டுவிட்டு மேலும் பல மக்கள் திரண்டு வந்து அங்கே கூடினார்கள். அப்படி வந்தவர்களிலே நாகைப்பட்டினம் நகரத்தின் எண்பேராயத் தலைவர் ஒருவரும் இருந்தார். அவர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் வந்து, ''கோமகனே! தாங்கள் இந்த நகரின் சூடாமணி விஹாரத்தில் இருந்து வருவதாகக் கேள்விப்பட்டோம். அந்த வதந்தியை நாங்கள் நம்பவில்லை. இப்போது உண்மை அறிந்தோம். நேற்று அடித்த பெரும் புயல் இந்த நகரத்தில் எத்தனையோ நாசங்களை விளைத்திருக்கிறது. ஆனாலும், தங்களைப் புத்த விஹாரத்திலிருந்து பத்திரமாய் வெளிக் கொணர்ந்ததே, அதை முன்னிட்டுப் புயலின் கொடுமைகளையெல்லாம் மறந்து விடுகிறோம். இந்த நகரில் தங்களுடைய பாதம் பட்டது இந்நகரின் பாக்கியம்!'' என்று கூறினார்.

இளவரசர் இனிமேல் தம்மை மறைத்துக் கொள்ளப் பார்ப்பதில் பயனில்லை என்று கண்டு கொண்டார்.

''ஐயா ! தங்களுடைய அன்புக்கு மிக்க நன்றி. இந்த நகர மாந்தரின் அன்பு என்னைப் பரவசப்படுத்துகிறது. ஆனால் வெகு முக்கியமான காரியமாக நான் தஞ்சாவூருக்கு அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. பிரயாணம் தடைப்படக் கூடாது என்பதற்காகத்தான் இப்படி வியாபாரியின் வேடம் பூண்டு புறப்பட்டேன். எனக்கு விடை கொடுங்கள் !'' என்றார்.

அப்போது கூட்டத்திலிருந்து ஒரு குரல் கிளம்பியது. ''கூடாது, கூடாது! இளவரசர் இங்கே ஒரு நாளாவது தங்கி ஏழைகளாகிய எங்களின் உபசாரத்தைப் பெற்றுக் கொண்டுதான் புறப்பட வேண்டும்'' என்று உரக்கச் சத்தமிட்டுக் கூறியது அக்குரல்.

அதைப் பின்பற்றி இன்னும் ஆயிரமாயிரம் குரல்கள், ''கூடவே கூடாது ! இளவரசர் இங்கே ஒரு நாளாவது தங்கி ஏழைகளாகிய எங்களின் உபசாரத்தைப் பெற்றுக் கொண்டுதான் புறப்பட வேண்டும்'' என்று கூச்சலிட்டனர்.

எண்பேராயத்தின் தலைவர் அப்போது, ''கோமகனே! என் நகர மக்களின் அன்பையும் உற்சாகத்தையும் பார்த்தீர்களா? எங்கள் உபசாரத்தைத் தாங்கள் ஏற்றுக் கொண்டு ஒரு வேளையாவது எங்கள் விருந்தாளியாக இருந்துவிட்டுத்தான் போக வேண்டும். புத்த பிக்ஷுக்கள் செய்த பாக்கியம் நாங்கள் செய்யவில்லையா ? நேற்று இந்நகர மாந்தர் தங்களைப் புத்த பிக்ஷுக்கள் மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று சந்தேகப்பட்டுச் சூடாமணி விஹாரத்தையே தகர்த்து மண்ணோடு மண்ணாக்கிவிடப் பார்த்தார்கள். அந்தச் சமயத்தில் புயல் வந்துவிட்டது! நாங்கள் செய்யத் தவறியதைப் புயல் செய்து விட்டது. விஹாரம் இடிந்து மண்ணோடு மண்ணாகி விட்டது !'' என்று சொன்னார்.

அதைக் கேட்ட இளவரசர், ''ஐயா! தாங்கள் புத்த பிக்ஷுக்கள்மீது குற்றம் சுமத்தியது சரியல்ல. என்னுடைய வேண்டுகோளுக்காகவே பிக்ஷுக்கள் புத்த விஹாரத்தில் என்னை வைத்திருந்தார்கள். நோய்வாய்ப்பட்டு உயிருக்கு மன்றாடிய என்னை யமனுடைய பாசக் கயிற்றிலிருந்து காப்பாற்றினார்கள். சூடாமணி விஹாரம் விழுந்துவிட்டது என்று கேட்டு என் மனம் வேதனைப்படுகிறது. அதைத் திருப்பிக் கட்டிக்கொடுப்பது என்னுடைய கடமை!'' என்றார்.

'' ஆகா ! இதெல்லாம் முன்னரே எங்களுக்குத் தெரியாமல் போயிற்றே ! இப்போது தெரிந்து விட்டபடியால் சூடாமணி விஹாரத்தை நாங்களே புதுப்பித்துக் கட்டிக் கொடுத்து விடுவோம். இளவரசே ! தாங்கள் ஒரு வேளை எங்கள் விருந்தாளியாக மட்டும் இருந்து விட்டுப் போக வேண்டும் !'' என்றார் எண்பேராயத்தின் தலைவர்.

''ஆமாம், ஆமாம்!'' என்று பதினாயிரக்கணக்கான மக்களின் குரல்கள் எதிரொலி செய்தன.

''இளவரசே! இங்கே தங்குவதினால் ஏற்படும் தாமதத்தைச் சரிப்படுத்திக் கொள்ளலாம். தாங்களோ கால்நடையாகப் புறப்பட்டிருக்கிறீர்கள். புயல் மழை காரணமாகச் சோழ நாட்டுச் சாலைகள் எல்லாம் தடைப்பட்டுக் கிடக்கின்றன. நதிகளிலெல்லாம் பூரண வெள்ளம் போகிறது. கால் நடையாகச் சென்று எப்போது போய்ச் சேர்வீர்கள்? தங்களை யானை மீது வைத்து

ஊர்வலமாக அனுப்புகிறோம். தங்களுடன் நாங்கள் அனைவரும் வந்து தஞ்சாவூருக்கே கொண்டு விட்டு வருகிறோம்'' என்றார் எண்பேராயத்தின் தலைவர்.

அவர் பேசிக் கொண்டிருக்கையில், ஜனங்களின் கூட்டம் மேலும் அதிகமாகிக் கொண்டிருந்தது.

இளவரசர் யோசித்தார். காரியம் என்னவோ கெட்டுப் போய் விட்டது. இரகசியம் வெளியாகிவிட்டது. ராக்கம்மாள் மூடத்தனமாகக் கூச்சலிட்டு வெளிப்படுத்தி விட்டாள். மூடத்தனத்தினால்தான் வெளிப்படுத்தினாளா ....? அல்லது வேறு ஏதேனும் நோக்கம் இருக்குமா?.... எப்படியிருந்தாலும் இந்த நகர மக்களின் அன்பை மீறிக் கொண்டு உடனே புறப்படுவது இயலாத காரியம். அதனால் இவர்கள் மனக் கஷ்டம் அடைவார்கள். அதோடு உத்தேசத்திலுள்ள நோக்கம் மேலும் தவறினாலும் தவறிவிடும். மத்தியானம் வரையிலேனும் இருந்து இவர்களைச் சமாதானப்படுத்திவிட்டுத்தான் போக வேண்டும். புயலினால் கஷ்ட நஷ்டங்களை அடைந்தவர்களுக்குச் சிறிது ஆறுதல் கூறிவிட்டுப் போக வசதியாகவும் இருக்கும். ஆகா! நான் இச்சமயம் என்னை வெளிப்படுத்திக் கொள்வதால் நாட்டில் குழப்பம் விளையும் என்று இளையபிராட்டி குந்தவை கூறினாரே? அது எவ்வளவு உண்மையான வார்த்தை ? — என் தமக்கையைப் போன்ற அறிவாளி இந்த உலகிலேயே யாரும் இல்லைதான் ! — தனைச் சிங்காதன உரிமையைப் பற்றிப் பேசுகிறார்களோ? உண்மையில், குந்தவை தேவியை அல்லவா சிம்மாதனத்தில் அமர்த்த வேண்டும்?....

இவ்வாறு பொன்னியின் செல்வர் சிந்தித்துக் கொண்டிருந்த போது ஜனக் கூட்டம் மேலும் அதிகமாகி வருவதைக் கண்டார். அவர்களுடைய குதூகலமும் வளர்ந்து வருவதை அறிந்தார். புயலின் கொடுமைகளையும், புயலினால் விளைந்த சேதங்களையும் மக்கள் அடியோடு மறந்து விட்டதாகத் தோன்றியது. எங்கிருந்தோ யானைகள் — குதிரைகள், சிவிகைகள், திருச்சின்னங்கள், கொடிகள், பேரிகை, எக்காளம் முதலிய வாத்தியங்கள், — எல்லாம் வந்து சேர்ந்து விட்டன.

அரைப் பகல் நேரமாவது இங்கே தங்கிவிட்டுத்தான் போக வேண்டும் என்று இளவரசர் முடிவு செய்தார்.

எண் பேராயத்தின் தலைவரைப் பார்த்து, ''ஐயா ! இவ்வளவு மக்களின் அன்பையும் புறக்கணித்துவிட்டு நான் போக விரும்பவில்லை. பிற்பகல் வரையில் இங்கேயே இருந்து விட்டு மாலையில் புறப்படுகிறேன். அதற்காவது அனுமதி கொடுப்பீர்கள் அல்லவா?'' என்றார்.

இளவரசர் தங்கிச் செல்லச் சம்மதித்து விட்டார் என்ற செய்தி பரவியதும் ஜனக்கூட்டத்தின் உற்சாகம் எல்லை கடந்துவிட்டது. குதூகலத்தை வெளிப்படுத்தும் வழிகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். வாத்தியங்கள் முழங்கத் தொடங்கின. ஆங்காங்கே

முடியாது. முடியவே முடியாது!



சிக்கனத்தைக் கடைப்பிடிக்காமல் சுபிட்சத்தைக் கொணர முடியாது:

சக்தி மிக்கோரைப் பலவீனப்படுத்துவதன் மூலம் பலவீனர்களைச் சக்தி மிக்கோராக்க முடியாது:

சம்பளம் கொடுப்பவரை மூடமாக்குவதன் மூலம் சம்பளம் வாங்குவோருக்கு உதவ முடியாது:

பணக்காரர்களை அழிப்பதன் மூலம் ஏழைகளுக்கு உதவ முடியாது:

கடன் வாங்கிய பணத்தைக் கொண்டு பொருளாதார ஸ்திரத்தன்மை பெற முடியாது:

வருவாய்க்கு அதிகமாகச் செலவு செய்தால் சங்கடமான பின் விளைவுகளிலிருந்து தப்ப முடியாது:

தனிமனிதனின் சுதந்திரத்தைப் பறிப்பதன்மூலம் நன்னடத்தையையும் தைரியத்தையும் வளர்க்க முடியாது:

மக்கள் தாங்களே செய்துகொள்ள வேண்டியனவற்றை அரசு அவர்களுக்குச் செய்து கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு நிரந்தரமான உதவி அளித்துவிட முடியாது.

--- ஆப்ரஹாம் லிங்கன்.

(மஹீந்திரா அண்டு மஹீந்திரா லிமிடெட் வெளியிட்டுள்ள ஒரு விளம்பரத்திலிருந்து

வீதிகளில் கத்தி விளையாட்டு, கழி விளையாட்டு, குரவைக் கூத்து முதலியவை ஆரம்பமாயின. ஜனங்களையும் அவர்களுடைய குதூகல விளையாட்டுக்களையும் கடந்து கொண்டு நாகைப் பட்டினத்துச் சோழ மாளிகைக்குச் செல்வது பெரிதும் கஷ்டமாயிற்று. எப்படியோ கடைசியில் அவர்கள் போய்ச் சேர்ந்தார்கள்.

மாளிகைக்குள் இளவரசர் சிறிது நேரங்கூடத் தங்கி இளைப்பாற முடியவில்லை. ஏனெனில், அவர் வெளிப்பட்ட செய்தி அக்கம்பக்கத்துக் கிராமங்களுக்கெல்லாம் பரவி விட்டது. ஜனங்கள் திரள் திரளாக வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். இளவரசரைப் பார்க்க வேண்டும் என்ற தங்கள் ஆவலைத் தெரியப்படுத்திக் கொண்டார்கள்.

இளவரசரும் அடிக்கடி வெளியில் வந்து ஜனக் கூட்டத்தினிடையே சென்று அவர்களுடைய க்ஷேம லாபங்களைப் பற்றிக் கேட்டார். புயலினால் விளைந்த கஷ்ட நஷ்டங்களைப் பற்றி அநுதாபத்துடன் விசாரித்தார். தாம் தஞ்சாவூருக்குப் போனவுடனே ஜனங்கள் அடைந்த கஷ்டங்களுக்குப் பரிகாரம் கிடைக்க ஏற்பாடு செய்வதாகக் கூறினார். அதைப் பற்றி ஜனங்கள் அவ்வளவு உற்சாகம் அடையவில்லை என்பதையும் கண்டு கொண்டார். ஜனங்கள் ஒருவரோடொருவர், ''பழுவேட்டரையர்களின் அதிகாரத்துக்கு முடிவு ஏற்படுமா?'' என்று பேசிக் கொண்டதும் அவர் காதில் விழுந்தது. சக்கரவர்த்தியின் உடல் நிலையைப் பற்றியும் அடுத்தபடி சிம்மாதனத்துக்கு வரக்கூடியவரைப் பற்றியும் அடக்கமான குரலில், ஆனால் இளவரசர் காதில் விழும்படியாகப் பலரும் பேசினார்கள் !

இதற்கிடையில் நாகைப்பட்டினம் நகரின் ஐம்பெருங் குழுவின் அதிகாரிகளும், எண்பேராயத்தின் தலைவர்கள் அனைவரும் வந்து சேர்ந்துவிட்டார்கள். இளவரசருக்கு விருந்து அளிக்கப் பெருந்தர ஏற்பாடுகள் நடந்தன. இளவரசரைப் பார்க்க வந்த ஜனத்திரளுக்கு உணவளிக்கும் ஏற்பாடுகளும் நடந்தன. புயலினால் நஷ்டமானது போக நகரில் எஞ்சியிருந்த தானியங்கள் எல்லாம் வந்து குவிந்தன. கறிகாய்களைப் பற்றியோ கவலையே இல்லை. விழுந்த வாழை மரங்களின் வாழைக்காய்க் குலைகளையும், விழுந்த தென்னை மரங்களின் தென்னங் குலைகளையும் கொண்டு ஒரு லட்சம் பேருக்கு விருந்து தயாரித்து விடலாமே ?

விருந்துகள் முடிந்து, புறப்பட வேண்டிய சமயம் நெருங்கிற்று. இளவரசர் சோழ மாளிகையின் மேன்மாடத்து முகப்பில் வந்து கைகூப்பிக் கொண்டு நின்றார். வீதியில் ஒரு பெரிய கோலாகலமான ஊர்வலம் புறப்படுவதற்கு எல்லாம் ஆயத்தமா யிருந்தன. இளவரசர் ஏறிச் செல்வதற்கு அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று வந்து நின்றது. முன்னாலும் பின்னாலும் குதிரைகள், ரிஷபங்கள் முதலியவை நின்றன. திருச்சின்னங்களும் கொடிகளும் ஏந்தியவர்களும் பலவித வாத்தியக்காரர்களும் அணிவகுத்து நின்றார்கள். மக்களோ நேற்று மாலை பொங்கி எழுந்த கடலைப் போல ஆரவாரித்துக் கொண்டு கண்ணுக்கெட்டிய தூரம் நின்றார்கள்.

இளவரசர் வெளித் தோற்றத்துக்குப் புன்னகை பூத்த முகத்துடன் பொலிந்தார். அவர் உள்ளத்திலோ பெருங் கவலை குடிகொண்டிருந்தது. பெற்ற தாயைக் காட்டிலும் பதின்மடங்கு அவருடைய அன்பைக் கவர்ந்திருந்த ஊமைத்து ராணியின் கதியைப் பற்றி அறிந்துகொள்ள அவர் உள்ளம் துடிதுடித்தது. முருகய்யன் மனைவியிடம் இன்னும் சிறிது விவரம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணியிருந்தார். அவளோ ஜனக் கூட்டத்தில் மறைந்து விட்டாள். முருகய்யன் மட்டும் முண்டியடித்துக் கொண்டு இளவரசரைத் தொடர்ந்து சோழ மாளிகைக்கு வந்து சேர்ந்தான். அவன் மனைவி ராக்கம்மாள் என்ன ஆனாள் என்பது அவனுக்கும் தெரியவில்லை.

மற்றொரு பக்கத்தில் இளவரசரை வேறொரு கவலை பற்றிக் கொண்டிருந்தது. சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு விரோதமாகத் தான் இராஜ்யத்தைக் கைப்பற்ற விரும்புவதாய் முன்னமேயே பழுவேட்டரையர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்த ஜனங்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக அவர்கள் கூற்று உண்மை என்று ஏற்பட்டு விடலாம் அல்லவா ?

எப்படியாவது இந்த நகர மாந்தர்களின் அன்புச் சூழலிலிருந்து தப்பித்துப் போனால் போதும் என்று இளவரசருக்குத் தோன்றி விட்டது.

இந்த நிலைமையில் அவர் சற்றும் எதிர்பாராத இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது.

ஜனங்களிடம் விடைபெற்றுக் கொள்ளும் பாவனையில் இளவரசர் கும்பிட்டுக் கொண்டு நின்றபோது, ஜனக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஐம்பெருங் குழுவின் அதிகாரிகளும் எண்பேராயத்தின் தலைவர்களும் மாளிகையின் வாசலில் வந்து நின்றார்கள்.

முன்னேற்பாட்டின்படி நிகழ்ந்தது போல், சில நிமிட நேரம் பேரிகை, முரசு, எக்காளம் முதலிய நூறு நூறு வாத்தியங்கள் கடலொலியையும் அடக்கிக் கொண்டு ஒலித்தன. சட்டென்று அவ்வளவு வாத்தியங்களும் நின்றபோது அப்பெருங் கூட்டத்தில் நிசப்தம் நிலவியது. அச்சமயத்தில் நகரத் தலைவர்களில் முதியவராகக் காணப்பட்ட ஒருவர் மாளிகை முன் வாசலில் இருந்த நிலா மேடை மீது ஏறி நின்று கொண்டு கம்பீரமான குரலில் கூறினார்:

''பொன்னியின் செல்வ! ஒரு விண்ணப்பம். நாகை நகரையும் அக்கம் பக்கத்துக் கிராமங்களையும் சேர்ந்த ஜனங்களின் சார்பாக ஒரு கோரிக்கை. சக்கரவர்த்தியின் உடல் நிலையைப்பற்றி நாங்கள் அனைவரும் கவலை கொண்டிருக்கிறோம். அதைப் போலவே நாங்கள் கேள்விப்படும் இன்னொரு செய்தியும் எங்களுக்குக் கவலை தருகிறது. பழுவேட்டரையர்களும் பல சிற்றரசர்களும் சேர்ந்து சக்கரவர்த்திக்குப் பிறகு மதுராந்தகத் தேவருக்கு முடிசூட்டத் தீர்மானித்திருப்பதாக அறிகிறோம். மதுராந்தகத் தேவர் இன்று வரையில் போர்க்களம் சென்று அறியாதவர். அவர் பட்டத்துக்கு வந்தால் உண்மையில் பழுவேட்டரையர்கள்தாம் இராஜ்யம் ஆளுவார்கள். சிற்றரசர்கள் வைத்ததே சட்டமாயிருக்கும். இளவரசர் ஆதித்த கரிகாலர் மூன்று ஆண்டு காலமாகச் சோழ நாட்டுக்கு வரவேயில்லை. அதற்கு ஏதேதோ காரணங்கள் சொல்கிறார்கள். அவருக்கு மகுடம் சூட்டிக் கொள்ள விருப்பமில்லை என்றும் கூறுகிறார்கள். அப்படியானால் அடுத்தபடி நியாயமாகப் பட்டத்துக்கு வரவேண்டியவர் யார்? சோழ நாடு தவம் செய்து பெற்ற புதல்வரும், காவேரித் தாய் காப்பாற்றிக் கொடுத்த செல்வரும், ஈழம் வென்ற வீராதி வீரருமான தாங்கள்தாம்.... மக்களே! நான் கூறியது உங்களுக்கெல்லாம் சம்மதமான காரியமா?'' என்று அந்த முதியவர் சுற்றிலும் நின்ற ஜனத்திரளைப் பார்த்துக் கேட்கவும், எட்டுத் திசையும் நடுங்கும்படியான பேரொலி அக்கூட்டத்திலிருந்து எழுந்தது. ''ஆம், ஆம்; எங்கள் கருத்தும் அதுவே!'' என்று பதினாயிரம் குரல்கள் கூறின. அதைத் தொடர்ந்து, ''பொன்னியின் செல்வர் வாழ்க!'' என்று ஒரு லட்சம் குரல்கள் கோஷித்தன. இவ்வளவு கோஷங்களும் சேர்ந்து உருத்தெரியாத ஒரு பெரும் இரைச்சலாகக் கேட்டது.

மறுமொழி சொல்வதற்காக இளவரசரின் உதடுகள் அசையத் தொடங்கியதும், ஏதோ மந்திர சக்தியினால் கட்டுண்டு அடங்கியது போல் அந்தப் பேரிரைச்சல் அடங்கியது.

''ஐயா! நீங்கள் எல்லாரும் என்னிடம் கொண்டிருக்கும் அன்பைக் கண்டு ஆனந்தப்படுகிறேன். ஆனால் அந்த அன்பை நீங்கள் காட்டும் விதம் முறையாக இல்லையே? என் அருமைத் தந்தை—சுந்தரசோழ சக்கரவர்த்தி — இன்னும் ஜீவியவந்தராக இருக்கிறார் என்பதை நீங்கள் மறந்துவிட்டதாகத் தோன்றுகிறது. சக்கரவர்த்தி நீடூழி வாழ வேண்டும் என்று என்னுடன் சேர்ந்து நீங்களும் பிரார்த்திக்க வேண்டும். சக்கரவர்த்தி ஜீவியவந்தராக இருக்கும் போது அவருக்குப் பிறகு பட்டத்துக்கு யார் என்பதைப் பற்றி யோசிப்பது ஏன்?''

நகரத் தலைவர்களில் முதல் தலைவரான முதியவர் இளவரசரின் இக்கேள்விக்குச் சரியான விடை வைத்திருந்தார்.

''பொன்னியின் செல்வ! சோழ நாட்டில் ஒரு மன்னர் உயிரோடிருக்கும் போதே அடுத்தபடி பட்டத்துக்குரியவர் யார் என்பதை நிர்ணயித்துவிடுவது தொன்று தொட்டு வந்திருக்கும் வழக்கம். மதுரை கொண்ட வீரரும் தில்லையம்பலத்துக் கோயிலுக்குப் பொற்கூரை வேய்ந்தவருமான மகாபராந்தக சக்கரவர்த்தி, தம் காலத்திலேயே தமக்குப் பின் பட்டத்துக்கு வர வேண்டியவர்களை முறைப்படுத்திவிட வில்



''கேரளாவில் எஸ். எஸ். எல். சி. பரீட்சைக் கட்டணத்தை ரத்து செய்து விட்டார்களாம்!''
''இதென்ன பிரமாதம், பரீட்சையையே ரத்து செய்தால்தான் முற்போக்கு என்பேன்!''

லையா? அதன்படிதானே தங்கள் தந்தை சிம்மாசனம் ஏறினார்?'' என்றார்.

''ஆம், ஆம்! ஆகையால் இப்போதும் அடுத்த பட்டத்துக்கு உரியவரைப் பற்றிச் சக்கரவர்த்திதானே தீர்மானிக்க வேண்டும்? நீங்களும் நானும் அதைப் பற்றி யோசிப்பதும் பேசுவதும் முறை அல்லவே?'' என்றார் இளவரசர்.

''பொன்னியின் செல்வ! சக்கரவர்த்திக்குத்தான் அந்த உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறோம். சக்கரவர்த்தி சுயேச்சையாக முடிவு செய்யக் கூடியவராயிருந்தால் அது சரியாகும். தற்போது சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்கள் தஞ்சைக் கோட்டைக்குள் சிறைப்படுத்தி அல்லவோ வைத்திருக்கிறார்கள்? இளவரசே! இன்னும் சொல்லப் போனால், சக்கரவர்த்தி உயிரோடு இருக்கிறாரா என்பதைப் பற்றியே எங்களில் பலருக்குச் சந்தேகமாயிருக்கிறது. தங்களுடன் தொடர்ந்து தஞ்சைக்கு வந்து அந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்புகிறோம். அதிர்ஷ்டவசமாகச் சக்கரவர்த்தி நல்லபடியாக இருந்தால் அவரிடம் எங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்வோம். அவருக்குப் பிற்பாடு தாங்கள்தாம் சிங்காதனம் ஏற வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்வோம். பிறகு, சக்கரவர்த்தி முடிவு செய்கிறபடி செய்யட்டும்!''

பெரியவர், சக்கரவர்த்தி உயிரோடிருக்கிறாரா என்பதைப் பற்றிச் சந்தேகப்பட்டுக் கூறிய வார்த்தைகள் இளவரசரின் உள்ளத்தில் ஒரு பெரும் திகிலை உண்டாக்கின. இத்தனை நாளும் அவர் அறிந்திராத வேதனையும் பீதியும் ஏற்பட்டன. சக்கரவர்த்தியின் உயிருக்கு ஏதோ ஆபத்து நெருங்கிவிட்டது போலவும், அதைத் தடுக்க முடியாத தூரத்தில் தாம் இருப்பது போலவும் ஒரு பிரமை உண்டாயிற்று. ஈழத்து ராணியை யாரோ மூர்க்கர்கள் பலவந்தமாகப் பிடித்துக் கொண்டு போன விவரமும் நினைவுக்கு வந்தது. இவ் ஒருகணமும் தாமதியாமல் தஞ்சை போய்ச் சேர வேண்டும் என்ற பரபரப்பு ஏற்பட்டது. ஒருசில விநாடி நேரத்தில் இளவரசர் தாம் செய்ய வேண்டியது இன்னதென்று தீர்மானித்துக் கொண்டார். இவர்களுடன் வாதமிட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை. பிரயாணப்படுவதுதான் தாமதமாகும். இப்போது இவர்கள் பேச்சை ஒப்புக் கொண்டதாகச் சொல்லிப் பிரயாணப்பட்டு விட்டால், வழியில் போகப் போக வேறு உபாயங்களைக் கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

''ஐயா! உங்களுடைய விருப்பத்துக்கு நான் குறுக்கே நிற்கவில்லை. சக்கரவர்த்தியைப் பற்றித் தாங்கள் கூறியது அவரைத் தரிசிக்க வேண்டும் என்ற என் கவலையை அதிகரித்து விட்டது. நான் உடனே புறப்பட வேண்டும். நீங்களும் சக்கரவர்த்தியைத் தரிசிக்க விரும்பினால் தாராளமாக என்னுடன் வாருங்கள். பட்டத்து உரிமையைப் பற்றிச் சக்கரவர்த்தி என்ன சொல்கிறாரோ, அதைக் கேட்டு நாம் அனைவரும் நடந்துகொள்வோம்!'' என்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் இளவரசர் யானைமீது ஏறிக் கொண்டு பிரயாணப்பட்டார். ஆயிரக் கணக்கான மக்கள் அடங்கிய ஒரு மாபெரும் ஊர்வலம் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டது. போகப் போக இளவரசருடன் தொடர்ந்த ஊர்வலம் பெரிதாகிக் கொண்டிருந்தது.

அத்தியாயம் எட்டு

படகில் பழுவேட்டரையர்

புயல் அடித்த அன்று காலையிலேதான் பெரிய பழுவேட்டரையர் கடம்பூரிலிருந்து தஞ்சைக்குப் புறப்பட்டார் என்பது நேயர்களுக்கு நினைவிருக்கும். கொள்ளிட நதி வரையில் அவர் வழக்கமான பாதையிலே சென்று, பின்னர் கொள்ளிடக் கரைச் சாலை வழியாக மேற்கு நோக்கித் திரும்பினார். சோழ நாட்டுக் கிராமங்களின் வழியாக அவர் நீண்ட பிரயாணம் செய்ய விரும்பவில்லை. மேற்கே சென்று திருவையாற்றுக்கு நேராகக் கொள்ளிடத்தைக் கடக்க விரும்பிச் சென்றார்.

வழக்கம் போல் நூற்றுக் கணக்கான பரிவாரங்களுடன் இச்சமயம் பெரிய பழுவேட்டரையர் புறப்படவில்லை. தாம் போவதும் வருவதும் கூடியவரையில் எவருடைய கவனத்தையும் கவராமலிருக்க வேண்டுமென்று நினைத்தார். ஆகையால் பத்துப் பேரைத்தான் தம்முடன் அழைத்துப் போனார்.

திருவையாற்றுக்கு நேரே கொள்ளிடத்துக்கு வட கரையில் பழுவேட்டரையர் வந்தபோது அந்தப் பெரிய நதியில் வெள்ளம் இரு கரையும் தொட்டுக்கொண்டு பிரவாகமாகப் போய்க்

கொண்டிருந்தது. அங்கிருந்த சிறிய படகில் குதிரைகளைக் கொண்டு போவது இயலாத காரியம். பெருங் காற்றுக்கு அறிகுறிகள் காணப்பட்டுக் கொண்டிருந்தன. ஆகையால், திரும்பிப் போவதற்குச் சௌகரியமாக இருக்கட்டும் என்று குதிரைகளை வடகரையில் விட்டு விட்டுப் பழுவேட்டரையர் தம்முடன் வந்த பத்து வீரர்களுடன் படகில் ஏறினார். படகு நடு நதியில் சென்று கொண்டிருந்தபோது புயல் வலுத்து விட்டது. படகோட்டிகள் இருவரும் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் படகைச் செலுத்தினார்கள். நதி வெள்ளத்தின் வேகம் படகைக் கிழக்கு நோக்கி இழுத்தது. புயல் அதை மேற்கு நோக்கித் தள்ளப் பார்த்தது. படகோட்டிகள் படகைத் தெற்கு நோக்கிச் செலுத்த முயன்றார்கள். இந்த மூன்று வித சக்திகளுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்ட படகு திரும்பித் திரும்பிச் சக்கராகாரமாகச் சுழன்றது.

பழுவேட்டரையரின் உள்ளத்திலும் அப்பொழுது ஒரு பெரும் புயல் அடித்துச் சுழன்று கொண்டிருந்தது. நந்தினியின் எதிரில் இருக்கும்போது அவருடைய அறிவு மயங்கிப் போவது சாதாரண வழக்கம். அவள் கூறுவதெல்லாம் சரியாகவே அவருக்குத் தோன்றும். வாழ்நாளெல்லாம் தமக்குப் பிடிக்காமலிருந்த ஒரு காரியத்தை நந்தினி சொல்லும்போது அது செய்வதற்குரியதாகவே அவருக்குத் தோன்றிவிடும். ஏதேனும் மனத்தில் சிறிது சந்தேகம் இருந்தாலும் அவருடைய வாய் "சரி சரி! அப்படியே செய்வோம்" என்று கூறிவிடும். சொல்லிய பிறகு, வாக்குத் தவறி எதுவும் செய்வதற்கு அவர் விரும்புவதில்லை.

இப்போதும் அவரைத் தஞ்சைக்குப் போய் மதுராந்தகரை அழைத்து வரும்படி நந்தினி சொன்னபோது, சரி என்று ஒத்துக் கொண்டு விட்டார். பிரயாணம் கிளம்பிய பிறகு அது சம்பந்தமாகப் பற்பல ஐயங்கள் எழுந்து அவர் உள்ளத்தை வதைத்தன. நந்தினியின் நடத்தையில் அணுவளவும் களங்கம் ஏற்படக் கூடும் என்று அவர் எண்ணவில்லை. ஆயினும் நந்தினியை யொத்த பிராயமுடைய மூன்று வாலிபர்களுக்கு மத்தியில் அவளைத் தனியே விட்டு விட்டு வந்திருக்கிறோம் என்ற எண்ணம் அடிக்கடி அவர் மனத்தில் தோன்றி வேதனை தந்தது.

கந்தமாறன், வந்தியத்தேவன், ஆதித்த கரிகாலன் ஆகிய மூவர் மீதும் அவர் குரோதம் கொள்வதற்குக் காரணங்கள் இருந்தன. பொக்கிஷ நில

என்ன வருத்தம்!



ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி ஐம்பது கோழிகள் கொண்ட கோழிப் பண்ணை வைத்திருந்தார். ஒரு நாள் திடீரென்று பத்துக் கோழிகள் இறந்துவிட்டன. விவசாயி கிராமக் கால்நடை வைத்தியரை அணுகி ஆலோசனை கேட்டார். வைத்தியரும் கோழிப் பண்ணை அமைத்திருக்கும் இடம் ஆற்றுக்கு வலம் பக்கம் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, "ஆற்றின் வலப்புறம் பண்ணை அமைத்திருப்பதால் தான் கோழிகள் சாகின்றன. ஆகவே பண்ணையை ஆற்றுக்கு இடதுபுறம் மாற்று" என்று கூறினார். விவசாயியும் அவ்வாறே அன்றே இடம் மாற்றினார். மறுநாள் மேலும் பத்துக் கோழிகள் இறந்தன. விவசாயி மறுபடியும் வைத்தியரிடம் சென்றார். "சூரிய வெளிச்சத்தில் அலைவதால் வெப்பத்தினால் கோழிகள் மடிகின்றன. ஆகவே கோழிகளை எப்போதும் நிழலிலேயே வைத்திரு" என்று வைத்தியர் கூறினார். விவசாயியும் கீற்றுப் பந்தல் போட்டு அதன் கீழே கோழிகளை அடைத்து வைத்தார். அதன் பிறகும் இருபது கோழிகள் மாண்டன. இப்போதும் விவசாயி அந்த வைத்தியரிடம் சென்று கூறினார். வைத்தியர், "கோழியின் தீவனத்தில் குறை இருக்கிறது. ஆகவே வேறு தீவனம் போடு" என்று கூறினார். விவசாயியும் கோழிக்கு வேறு தீவனம் போட்டார். அதன் பிறகு எஞ்சியிருந்த பத்துக் கோழிகளும் செத்தன.

துக்கம் மேலிட விவசாயி வைத்தியரிடம் சென்று "உம்முடைய யோசனைகளைக் கேட்டதால் என்னுடைய கோழிகள் அத்தனையையும் இழந்தேன்" எனக் கூறி வருந்தினார். மறுமொழியாக வைத்தியர், "உனது கோழிகள் அத்தனையும் இறந்ததற்காக நானும் மிக மிக வருந்துகிறேன்" என்று கூறினார். தம்முடைய பண்ணை அழிந்ததற்காக வைத்தியர் ஏன் வருந்த வேண்டும் என்று விளங்கவில்லை அந்த அப்பாவி விவசாயிக்கு. அவர் வைத்தியரிடம் விளக்கம் கேட்டார். வைத்தியர் கூறினார்: "கோழிகளுக்கு வைத்தியம் செய்வதற்குப் பல யோசனைகள். வைத்திய முறைகள் கைவசம் வைத்திருக்கிறேன். அவை அனைத்தையும் பரிசோதித்துப் பார்க்கு முன்பு உன்னுடைய கோழிகள் அனைத்தும் இறந்துவிட்டனவே! என்னுடைய மற்ற முறைகளைப் பரிட்சை செய்ய வேறு கோழிகள் இல்லையே! அதனால்தான் வருந்துகிறேன்!"

இந்த வைத்தியரைப் போலவே இன்றைய நாட்டின் சிக்கல்களைப் போக்குவதற்காக இன்று ஆட்சியில் இருப்போர் பல விசித்திரத் திட்டங்களை வைத்திருக்கின்றனர். ஆனால் அத்தனை திட்டங்களையும் அமுல் செய்வதற்குள் நாடே அழிந்துவிடும்போல் இருக்கிறது.

- பம்பாய் பொதுக்கூட்டத்தில் அரசியல் சட்ட மேதை பால்கிவாலா.
- பேசக் கேட்டவர்: மே. கா. இராமசாமி

வறையில் நள்ளிரவில் தாமும் நந்தினியும் போய்க் கொண்டிருந்தபோது கந்தமாறன் எதிர்ப்பட்டு, நந்தினியை, ''தங்கள் மகள்'' என்று குறிப்பிட்டது அவர் நெஞ்சத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சூடு போட்டது போல் பதிந்திருந்தது. அப்போது உண்டான குரோதத்தில் அவனைக் கொன்றுவிடும்படியாகவே காவலனுக்கு இரகசியக் கட்டளை யிட்டுவிட்டார். பின்னர் அதைப் பற்றி வருந்தினார். எப்படியோ கந்தமாறன் பிழைத்து விட்டான். அவன் எப்படிப் பிழைத்தான், நிலவறைக் காவலன் எப்படி மாண்டான் என்னும் விவரத்தை இன்னமும் அவரால் அறிய முடியவில்லை. அதற்குப் பிறகு கந்தமாறன் தம் அரண்மனையிலேயே சில நாட்கள் இருந்ததையும், நந்தினி அவனுக்குச் சிரத்தையுடன் பணிவிடை செய்ததையும் அவரால் மறக்க முடியவில்லை.

பிறகு வந்தியத் தேவனும் கடம்பூரில் இருக்கிறான். முதன் முதலில் அந்த அதிகப்பிரசங்கி வாலிபனைப் பார்த்ததுமே அவருக்கு அவனைப் பிடிக்கவில்லை. பிறகு அவன் தஞ்சாவூரில் சக்கரவர்த்தியிடம் தனியாக ஏதோ எச்சரிக்கை செய்ய விரும்பியதையும், தஞ்சைக் கோட்டையிலிருந்து ஒருவரும் அறியாமல் தப்பி ஓடியதையும் அறிந்தபோது அவருடைய வெறுப்பு அதிகமாயிற்று. அச்சமயம் சின்னப் பழுவேட்டரையர் அவன் தப்பிச் சென்றதற்கு நந்தினி உதவி செய்திருக்கலாம் என்று குறிப்பாகச் சொன்னதையும் அவர் மறக்கவில்லை. அது ஒருநாளும் உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில் அவன் குந்தவைப் பிராட்டிக்கும் இளவரசர் அருள்மொழிக்கும் அந்தரங்கத் தூதன் என்று தெரிய வந்திருக்கின்றன. ஆகையால் அவனுக்கும் நந்தினிக்கும் தொடர்பு எதுவும் இருக்க முடியாது. ஆனாலும், அவனையும் நந்தினியையும் சேர்த்து எண்ணிப் பார்த்தபோதெல்லாம் பெரிய பழுவேட்டரையர் இரும்பு இதயத்தில் அனல் வீசிற்று.

பிறகு, ஆதித்த கரிகாலர் இருக்கவே இருக்கிறார். அவர் முன் ஒரு சமயம் ஒரு கோவில் பட்டரின் மகளைக் கலியாணம் செய்து கொள்ள விரும்பினார் என்பதும் அவள்தான் நந்தினி என்பதும் அவர் காதுக்கு எட்டியிருந்தது. அவர்கள் இப்போது சந்தித்திருக்கிறார்கள். அதற்கு நந்தினி மிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறாள். எதற்காக? ஒன்று நிச்சயம். ஆதித்த கரிகாலன் பெரிய முரடனாயிருக்கலாம். பெரியோர்களிடம் மரியாதை இல்லாதவனாயிருக்கலாம். ஆனால் அவன் சோழ குலத்தில் உதித்தவன். அந்தக் குலத்திலே யாரும் பிறனில் விழையும் துரோகத்தைச் செய்ததில்லை. கரிகாலனும் அப்படிப்பட்டவன் அல்ல. பெண்கள் விஷயமான நடத்தையில் மாசு மறுவற்றவன். ஆனால் நந்தினி? அவளைத் தான் இவ்வளவு தூரம் நம்பி அவள் விருப்பப்படியெல்லாம் நடந்து வந்திருப்பது சரிதானா? அவளுடைய நடத்தையில் மாசு ஒன்றும் இல்லை என்பது நிச்சயமா? அவளுடைய பூர்வோத்திரமே இன்னும் அவருக்குச் சரிவரத் தெரியாது. அவருடைய சகோதரன் காலாந்தக கண்டன் அவளைப் பற்றிச் சொல்லாமல் சொல்லிப் பலமுறை எச்சரித்திருக்கிறான். தம்பி கூறியதே சரியாகப் போய் விடுமோ? நந்தினி தம்மை வஞ்சித்து விடுவாளோ? கதைகளிலே சொல்லுகிறார்களே! அது போன்ற வஞ்சக நெஞ்சம் உள்ள ஸ்திரீகள் உண்மையிலேயே உலகத்தில் உண்டா? அவர்களில் ஒருத்தி நந்தினியா?... இப்படி எண்ணியபோது பெரிய பழுவேட்டரையரின் உள்ளத்தில் குரோதக் கனல் கொழுந்து விட்டது என்றால், அதே சமயத்தில் நந்தினியின் மீது அவர் கொண்டிருந்த மோகத் தீயும் ஜ்வாலை வீசியது. இவற்றினால் உண்டான வேதனையை மறப்பதற்காகப் பழுவேட்டரையர் தம் தலையை ஆட்டிக் கொண்டு தொண்டையையும் கனைத்துக் கொண்டார். பத்துப் பேருக்கு மத்தியில் இருக்கிறோம் என்ற நினைவுதான் அவர் தமது பெரிய தடக் கைகளினால் நெற்றியில் அடித்துக் கொள்ளாமல் தடை செய்தது. அவரை அறியாமல் பெரிய நெடு மூச்சுக்கள் வந்து கொண்டிருந்தன. படகின் விளிம்புகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, பற்களைக் கடித்துக் கொண்டு, ''எல்லா உண்மைகளையும் இன்னும் இரண்டு தினங்களில் தெரிந்து கொண்டு விடுகிறேன். இதுவரை செய்த தவறு போல் இனிமேல் ஒருநாளும் செய்வதில்லை!'' என்று சங்கல்பம் செய்து கொண்டார்.

(தொடரும்)

[illegible] அப்பாலோ

அப்பாலோ - 11, 12 பயணங்கள் கண்ட வெற்றிகளின் அடிப்படையிலும் அப்பாலோ - 13 பயணத்தின்போது ஏற்பட்ட விபரீத விளைவுகள் அளித்த படிப்பினைகளின் அடிப்படையிலும் அப்பாலோ-14 தயாராகி பிப்ரவரி 1ந் தேதி (இந்தியக் கணக்குப்படி) புறப்பட விருக்கிறது.

முந்தையப் பயணங்களுக்கும் இந்த அப்பாலோ - 14 பயணத்துக்கும் இடையில் உள்ள சில முக்கிய வித்தியாசங்களை மட்டும் பார்ப்போம்.

சந்திரனில் ஃப்ரா மாவ்ரோ என்ற பகுதியில் அப்பாலோ - 14 இறங்கும். இப்பகுதியிலிருந்து நூறு மைல் தூரத்தில் கடந்த ஒன்பது மாதங்களுக்குள் இருபத்தைந்து தடவைகள் நில அதிர்ச்சி (பூகம்பம்) ஏற்பட்டிருக்கிறது. இதனை அப்பாலோ - 12ல் சென்றவர்கள் நிறுவி விட்டு வந்த விஞ்ஞான உபகரணங்கள் பூமியில் உள்ள நமக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றன.

அப்பாலோ -14ல் செல்வோர் மேலும் பல விஞ்ஞான உபகரணங்களைச் சந்திரனில் நிறுவி விட்டு வருவார்கள். இவை சந்திரனின் சூழ்நிலை, நிலத்தின் மேல் பரப்பு முதலானவை பற்றிய பல விவரங்களைப் பூமிக்கு அனுப்பிக்கொண்டேயிருக்கும்.

சூரிய மண்டலத்தில் உள்ள பல அம்புலிகள், கிரகங்கள் ஆகியவற்றுள் மிகப் பழமையான பாறைகள் இருப்பது சந்திரனில் உள்ள ஃப்ரா மாவ்ரோ பகுதியில்தான் என்று கருதப்படுகிறது. ஆகவே இப்பகுதியில் இறங்கும் விண்வெளி வீரர்கள் சேகரித்து வரக்கூடிய பாறைகள் விஞ்ஞான உலகுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கும்.


மேலும் இக் குழுவினர் இப்பகுதியில் இலேசான வெடிகளை வைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்த வெடிகளின் விளைவாகக் கிளம்பும் அதிர்ச்சி அலைகள் சந்திரனில் ஆழச் சென்று மீண்டும் மேல் பரப்புக்கு எழும்பித் திரும்பும். இந்த அதிர்ச்சி அலைகளைச் சில விஞ்ஞான உபகரணங்கள் பதிவு செய்து கொள்ளும். இதிலிருந்து சந்திரனில் தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்பதனை உய்த்து உணர்வதற்கான தடயங்கள் கிடைக்கும்.

சந்திரனின் உட்பகுதி — கோளத்தின் ஆழ்ந்த மையப் பகுதி — என்றைக்கேனும் உருகிய நிலையில் உஷ்ணமாக இருந்ததுண்டா என்பதற்கான விடையையும் இந்தப் பரிசோதனைகள் கூறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இந்தப் பரிசோதனைகளை நிகழ்த்துவதற்கான காமிராக்கள் முதலியனவற்றை விண்வெளிப் பயணிகள் தாங்களே சந்திரனில் இங்குமங்கும் தூக்கிச் செல்வது கடினம் என்பதால் அவற்றை ஒரு வண்டியில் வைத்து இழுத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளனர். இந்த வண்டிக்கு ரிக்ஷா என்று பொருத்தமாகப் பெயரிட்டுள்ளனர். சந்திரனில் தானியங்கு முறையில் நகர்ந்து செல்லும் வண்டியை ருஷ்யர்கள் ஏற்கனவே அனுப்பி விட்டார்கள் என்றாலும் மனிதன் சந்திரனில் பயன்படுத்தும் முதல் வண்டி இந்த ரிக்ஷா தான்.

ஷெப்பர்ட், மிட்சல் ஆகிய இரு விண்வெளி வீரரும் இந்தப் பரிசோதனைகளைச் சந்திரனில் நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது எழுபது மைல் உயரத்தில் அவர்களது தோழர் ரூஸா தனியாக விண்கலத்தில் (தாய்க் கலம்) சந்திரனைச் சுற்றி வந்து கொண்டிருப்பார். அவரும் சும்மா இருக்கப் போவதில்லை. எதிர்காலத்தில் சந்திரனில் வந்து இறங்க வசதியான இடங்களைப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருப்பார். சந்திரனில் உள்ள மலைகளையும் பெரும் பள்ளங்களையும் அளந்து கொண்டிருப்பார்.

அப்பாலோ - 14 பயணம் ஒன்பது நாட்கள் நீடிக்கும். இறைவனை நெஞ்சில் இருத்தி விண்வெளி வீரர் மூவருக்கும் நல்வாழ்த்துக் கூறுகிறோம்.



கீழே: தலைவர் ஆலன் பி. ஷெப்பர்ட் சந்திரனில் தாம் உபயோகிக்கப்போகும் காமிராவை இயக்கிப் பயிற்சி பெறுகிறார். வலது: 'ரிக்ஷா'



ராமாயணம்

— ராஜாஜி —

76. கண்டேன் சீதையை!

சுக்ரீவன் ஊகித்துப் பேசிய பேச்சு ராமனுடைய காதில் அமிருதம் போல் சுவைத்தது. வானரர்கள் வருவதை அவர்கள் ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது மேலே ஆகாயத்தில் பெரும் கலகலப்பு கேட்டது. வானரர் கூட்டமாகக் கோஷம் செய்து கொண்டு வந்து இறங்கினார்கள்.

*   *   *

ஹனுமானை முன்னிட்டுக் கொண்டு அங்கதனும் வானரர்களும் வேகமாகக் கிளம்பி ராம லக்ஷ்மணர்களுடன் அரசன் சுக்ரீவன் இருந்த இடம் சென்றார்கள்.

ஹனுமான் ராமசந்திரனை வணங்கி, ''கண்டேன், புனித தேவியை! க்ஷேமமாக இருக்கிறாள்! அவளைத் திக்கு நோக்கி வணங்குகிறேன்'' என்று தெற்கே திரும்பி வணங்கினான்.

இப்படிச் சீதையின் உயிருக்கும் சீலத்துக்கும் ஏதொரு தீங்குமின்றி அவள் க்ஷேமமாக இருப்பதை ஹனுமான் சக்கரவர்த்தித் திருமகனுக்கு முதலில் உணர்த்தினான்.

சுக்ரீவனும் லக்ஷ்மணனும் ராமனைக் கட்டி அணைத்து ஆனந்த பரவசமானார்கள்.


''வானரர்காள்! சீதை எங்கே இருக்கிறாள்? எப்படி இருக்கிறாள்? எப்படிக் கண்டீர்கள்! எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள். எனக்குப் பொறுக்க முடியவில்லை'' என்றான் ராமன்.

''கண்டதையும் நடந்ததையும் எல்லாம் ராமசந்திரனுக்கு நீரே சொல்ல வேண்டும்'' என்று வானரர்கள் கேட்டுக் கொள்ள, ஹனுமான் சீதையைத் தியானித்து, திசை நோக்கித் தலை வணங்கி நமஸ்கரித்துவிட்டு நடந்த விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தான்.

செய்ய வேண்டியதை யெல்லாம் தைரியமாகவும் உற்சாகமாகவும் ஒருவனாகவே செய்து முடித்துவிட்டு ராமசந்திரன் முன்னிலையிலும் தன்னுடைய அரசன் முன்னிலையிலும் நிற்கும்போது ஹனுமான் மேற்கொண்ட அடக்கத்தைக் கவனிக்க வேண்டும். தான் செய்துவிட்ட பெரும் காரியத்தைப் பற்றிக் கர்வப்படாமல், யுவராஜனை அங்கதன், அறிவிலும், வயதிலும் பெரியோனாகிய ஜாம்பவான், இன்னும் மற்ற வீரர்களுக்கும் மரியாதை காட்டி, அவர்கள் ஏவலிடுவதற்குமுன் தான் பேசாமலிருந்தது வாயுபுத்திரனுடைய பண்பாட்டின் மகிமை.

தவிர, இயற்கையிலேயே எவனாயினும் அத்தனை கஷ்டமான காரியங்களை நிறைவேற்றிய ஒரு மகான் அதைப் பற்றித் தானே அவசரப்பட்டுப் பேச மாட்டான். இதை முனிவர் நினைவில் வைத்து இந்தப்படி சித்திரித்திருக்கிறார்.


இன்னொரு விஷயமும் இவ்விடத்தில் கவனித்தல் தகும். ஜானகியை லங்கையில் நேரில் கண்டு பணிந்தது முதற்கொண்டு பிராட்டியைத் தியானிப்பதிலும் பக்தி செலுத்துவதிலும் ஹனுமான் மிகவும் ஈடுபட்டு விட்டான்.



ராம பக்தியைக் காட்டிலும் பிராட்டியி னிடம் அவனுக்கு உண்டாகிய பக்தி அதிகமாகி விட்டது. பரம்பொருளைத் தாயாகப் பாவித்து மகிழ்ந்த எல்லாப் பெரிய பக்தர்களுடைய அனுபவமும் இதுவே.

* * *

"நாறுயோசனை அகலமுள்ள கடலைத் தாண்டித் தென்கரையிலுள்ள துஷ்டன் ராவணனுடைய லங்கா நகரத்தை அடைந்தேன். அங்கே அந்தப்புர வனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையைக் கண்டேன். ராம! ராம! என்று ஒரே சிந்தையாக உயிரை வைத்துக் கொண்டிருந்த அந்த ஜானகியைக் கண்டேன். அவலக்ஷண வடிவங்களைக் கொண்ட கொடிய ராக்ஷசப் பெண்களின் காவலில் மிகவும் துயரப்பட்டுக் கொண்டிருந்தாள். தலை மயிர் பின்னப்படாமலும் தரையில் படுத்தும் துக்கமும் கவலையும் நிறைந்த முகத்தினளாக உடம்பெல்லாம் நிறம் மாறிப் பனிக் காலத்துத் தாமரைக் குளம்போல் ஒளி இழந்திருந்தவளைக் கண்டேன். அரக்கனிடமிருந்து தப்புவதற்காக உயிர் நீக்க எண்ணினாள். தங்களுடைய கீர்த்தியை மெதுவாக எடுத்துச் சொல்லி அதற்கு முன் என்னை அறியாத அவளுக்குக் குரங்கான என்னிடம் நம்பிக்கை உண்டாகச் செய்தேன். பிறகு பேசினேன். உமக்கும் அரசன் சுக்ரீவனுக்கும் ஏற்பட்ட நட்பைப் பற்றி அறிவித்தேன். நீர் துயரப் பட்டுக் கொண்டிருப்பதையும் சொன்னேன். உம்முடைய குறையாத அன்பைப் பற்றிச் சொல்லி அவளை மகிழ்வித்தேன். புனித தேவி உமக்குக் கொடுக்கும்படியாக இந்த ஆபரணத்தைத் தந்தாள். ஒரு காக்கை தாங்கள் தூங்கும் போது தன்னைத் தொந்தரவு செய்ததைப் பற்றித் தாங்கள்



வருத்தமுற்றதை எனக்குச் சொல்லி, தங்களுக்கு அதை நினைவூட்டச் சொன்னாள். அவளுடைய திலகம் அழிந்த ஒரு சமயம் தாங்கள் மலைக் கல்லை அரைத்துத் திலகமிட்டதை நினைவூட்டச் சொன்னாள். 'ஒரு மாதம் உயிர் வைத்துக் கொண்டிருப்பேன். அதற்கு மேல் முடியாது' என்று தங்களிடம் என்னைச் சொல்லச் சொன்னாள். வானரர்களுடைய அரசனுக்கும் இது தெரியும்படியாகச் சொல்வாய் என்று எனக்கு ஆணையிட்டாள். இனி உடனே நாம் லங்கா நகரம் படையெடுத்துச் சென்று தேவியை மீட்டுக் கொண்டு வருவதைப் பற்றிச் சிந்திப்போமாக'' என்று சொல்லி, சீதை கொடுத்த சிகாமணியைச் சக்கரவர்த்தித் திருமகனிடம் கொடுத்தான்.

* * *

அதை வாங்கி உற்று நோக்கி ராமசந்திரன் விஸ்மயமாகிப் போனான். பிறகு ஆனந்தமோ துயரமோ உணராத நிலை அடைந்தான்.

சிகாமணியை மார்பில் வைத்து ஒற்றிக் கொண்டு, ''லக்ஷ்மணா'' என்று அழுதான். ''வீர வாயுவின் புத்திரனே! சீதையைக் கண்ட வீரனே ! உன்னைப் போல் நானும் இப்போது அவளைக் கண்டேன்'' என்று ஹனுமானைக் கட்டி அணைத்துக்கொண்டு, ''எல்லா நிகழ்ச்சிகளையும் விஸ்தாரமாக மறுபடியும் சொல். என் அன்புக்குரிய வீரனே ! சீதை என்ன சொன்னாள்? அதைத் திரும்பத் திரும்பச் சொல். ஹனுமானே ! அந்த மொழிகள் தாகத்தைத் தணிக்கும் தண்ணீர் போல் சுவைக்கின்றன'' என்றான்.


* * *


அப்படியே மாருதி எல்லா நிகழ்ச்சிகளையும் அனைவரும் கேட்க விஸ்தாரமாகச் சொல்லி, சீதை ராமனிடம் சொல்லச் சொன்ன வார்த்தைகளை அப்படியே அவளுடைய இனிய மொழிகளாகவே சொல்லி ராமன் உள்ளத்தை நீராகப் பெருகச் செய்தான்.

'' 'எத்தனையோ ராக்ஷசர்களைக் கொன்ற என் ராமன் ஏன் இப்படி நான் இங்கே தவித்துக் கொண்டிருக்க இன்னும் வரவில்லை? அரக்கனை சம்ஹாரம் செய்ய இன்னும் ஏன் வராமல் இருக்கிறார்? ஏன் ராவணனை வதம் செய்ய லக்ஷ்மணனை அனுப்பாமல் இருக்கிறார்? ஏன் வீரனானவர் என்னை உபேக்ஷித்து வருகிறார் ? நான் என்ன பிழை செய்தேன்? ஒன்றும் இல்லையே!' இப்படிச் சீதை சொன்னாள். நான் அவளுக்குச் சமாதான வார்த்தைகள் சொன்னேன் 'உம்மை நினைந்து நினைந்து ராமசந்திரன் துக்கக் கடலில் மூழ்கி நிற்கிறார். கணமும் அவருக்கு நிம்மதி இல்லை. ராமனும் லக்ஷ்மணனும் உம்மை மறந்து விட்டதாக எண்ண வேண்டாம். அவர்கள் படும் துக்கத்தை விளக்கக் கூடிய மொழிகள் எனக்கில்லை. நான் போய் நீர் இவ்விடம் இருப்பதைச் சொல்ல வேண்டியதுதான் தாமதம், உடனே அவர்கள் வருவார்கள். அதிக காலம் காத்திருக்க வேண்டியதில்லை. வந்து விடுவார்கள். லங்கையைச் சாம்பலாக எரிக்கப் போகிறார்கள். ராவணனை அவன் கூட்டத்தோடு வதம் செய்து, அயோத்தியா நகரத்துக்கு உம்முடன் திரும்பிப் போவார்கள். எனக்கு அடையாளம் ஒன்றைத் தருவீராக. நான் உடனே போகிறேன்' என்று நான் சொன்னேன். அப்படிச் சொன்னபோது அந்தத் தலைமயிர் ஆபரணம் துணியில் முடிந்திருந்ததை அவிழ்த்து என்னிடம் தேவி தந்தாள். தந்ததும் நான் அதை என் தலையில் வைத்துப் பூஜித்துப் பத்திரம் செய்து கொண்டு திரும்பிச் செல்லப் புறப்பட்டேன். அப்போது அவள், 'ஹனுமனே! ராம லக்ஷ்மண சிம்மங்களுக்கும் அரசன் சுக்ரீவனுக்கும் அவர் மந்திரிகளுக்கும் என் க்ஷேம சமாசாரத்தைச் சொல்லுவாய். என்னை ராமன் அடைவதற்குத் தகுந்த வழியை அவருக்குச் சொல்லுவாய். உன்னை நம்பினேன்! நீ க்ஷேமமாய்ப் போய்ச் சேருவாயாக. மங்களம்' என்று சொல்லி ஆசீர்வதித்து அனுப்பினாள். பிரபுவே! துக்கப்பட வேண்டாம். காரியத்தில் மனம் செலுத்துவீராக. பிறகு 'எப்படி இந்தக் கடலை ராம லக்ஷ்மணர்கள் தாண்டி வருவார்கள்? வானர சேனை எப்படி லங்கை வந்து சேரும்?' என்று சீதை சந்தேகப்பட்டுத் துயரப்பட்டாள். 'சந்தேகப்பட வேண்டாம். தூதனாக வந்த நான் சுக்ரீவனுடைய வானரர்களில் ஒரு சிறியவன். சிறந்த வீரனையா அரசர்கள் தூதனாக அனுப்புவார்கள்? அங்கிருக்கும் வீரர்களில் பலர் என்னைவிடப் பலசாலிகள். வானரர்களுக்குள் பூமண்டலம் முழுதும் தரையில் கால் வைக்காமல் தாவிச் சுற்றும் சக்தி கொண்டவர்கள் இருக்கிறார்கள். ராம லக்ஷ்மணர்களை நானே தூக்கிக் கடலைத் தாண்டி வர முடியும். இவ்விடம் வில்லும் கையுமாக அவர்கள் இறங்குவார்கள். நீர் நிச்சயமாக இருக்கலாம்' என்று நான் தேவியைத் தேற்றினேன். அவளும் மனச் சாந்தி யடைந்தாள்'' என்றான்.

(தொடரும்)


சிங்கக் கழுகு 2
தன்னைத் துரத்தி வந்த போலீஸ்காரர் கண்ணில் படாமல் ஒளிந்திருக்கிறான் சிறுவன்.
அது நல்ல மறைவிடமல்ல. மாட்டிக்கொள்வாய்!
மீட்டர் ஓ டான்னெல்
படகில் ஏறு; அந்த ஜமக்காளத்துக்கு அடியில் புகுந்து கொள்; சீக்கிரம்!
ரொம்ப நன்றி அக்கா!
உஷ்! பேசாமல் இரு!
1695
நீ இப்போ வெளிவரலாம்; உன் பேர் என்ன? போலீஸ்காரர் ஏன் உன்னைத் துரத்தினார்?
நான் ஆன்ஜெலோ
திருடுவது தவறுச்சே?
ஒரு பழத்தைத் திருடினேன்.
தெரியும் அக்கா! அதோடு சிலருக்குச் சில சமயங்களில் திருட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறதென்றும் தெரியும்!
வேதாந்தம் பேசுகிறாயா? இவ் விஷயத்தில் உன்னோடு வாதாடி உன்னைத் திருத்த வேண்டும் நான். ஆனால் தர்க்கம் பண்ண எனக்கு தெரியாதே!
1696


சிறிது நேரத்துக்குப் பிறகு...
நன்ருகக் குளித்தாயா ஆன்ஜெலோ?
ஆச்சு அக்கா!... இந்தக் குடி யிருப்பு உனக்குச் சொந்தமா?
இல்லே, கொஞ்ச நாளைக்கு வாடகைக்கு எடுத்திருக்கிறேன். ஏன் கேட்கிருய்?
இங்கே ஒரு மனிதன் வந் திருக்கிருன் அக்கா; அவன் க்ஷவர செட் டைப் பார்த் தேன்.
தெரியும்; அவனேடு சேர்ந்து தான் இப்போது சாப்பிடப் போகிரேம். சீக்கிரம் கிளம்பலாம்.
சாப்பாடா! பலே !!
1697
பாரிஸ் ஹோட்டலில் வரவேற்பாளர்....
கந்தலே உடுத்திய இந் தச் சிறுவனைப் போய் அழைத்து வந்திருக் கிறீர்களே!
கந்தலாளுனும் கசக் கிக் கட்டி யிருக் கிருன்; சுத்தமாய் விளங்குகிருன்; பசி யோடும் இருக்கி ருன். ஆகவே ஆர்ப்பாட்டம் பண்ணுதே!
மாக்ஸ் இன்னும் சற்று நேரத்தில் வருவார். ஆனுல் நம் விருந்தினரை அவர் வரும் வரை காக்க வைக்க வேண்டாம்..
ஆன்ஜெலோ! படிக்கத் தெரி யுமா உனக்கு ?
அதிகமாக அல்ல; அவசியமான அளவு படிப் பேன்.
"மெனு"வைப் படி த்து இவனே உண வைத் தேர்ந்தெடுத் தாளுனல் வயிறு கெட்டுப்போகும். நிச்சயம்.
வாஸ்தவம்தான்; ஆனுல் ஒரு வேளைச்சாப் பாடு அவனைக் குண்ட ளுக்கி விடாது. அத ளுல் சந்தோஷமாக வேண்டிய தைச் சாப் பிடட்டுமே.
1698



பாரினி ஹோட்டலுக்கு மாக்ஸ் வருகிறான்....
ஓ! உன்னோடு சேர்ந்து உணவருந்த எனக்குப் போட்டியாக முளைத்தவன் இவன்தானா?
அடேடே! கண்டுபிடித்து விட்டாயே!.. மாக்ஸ் இவன் ஆன்ஜெலோ!
ஆன்ஜெலோ ஒரு சேரியில் வசிக்கிறான், பிரான்ஸெஸ்காவோடு.
தெரியும். அவனை நான் வாசலில் பார்த்தேன். ஜன்னல் வழியாக உன்னையே கவனித்துக் கொண்டிருக்கிறான் அவன்.
ஆன்ஜெலோவை அவளிடமிருந்து பிரிக்க நீ முற்பட்டிருப்பதாக எண்ணி பிரான்ஸெஸ்கா ஒரே கோபமாய் இருக்கிறாள்..
வாம்மா! பிரான்ஸெஸ்கா! வந்து விருந்தில் கலந்து கொள்.
1699
என்ன இது? நாகரிகமே இல்லாமல்! முதலில் பிச்சைக்காரப் பயலுடன் நீங்கள் வந்தீர்கள்; இப்போது மாக்ஸ் பிச்சைக்காரப் பெண்ணுடன் வருகிறார்...?
என்ன அதிசய ஒற்றுமை பார்த்தாயா?
இவர்கள் உண்மையில் பிச்சைக்காரர்கள் இல்லை; கற்றுக் குட்டித் திருடர்கள்!-கவலையைவிடு! போவதற்கு முன்னால் தட்டு ஸ்பூனையெல்லாம் எண்ணிப் பார்த்து ஒப்படைக்கிறோம்.
பிரான்ஸெஸ்கா! போலீஸ்காரரிடமிருந்து தப்பி விட்டாயா?
அந்தக் குண்டனால் என்னைத் துரத்த முடியவில்லை. அந்த இன்னொரு போலீஸ்காரர் உன்னைப் பிடித்து விட்டாராக்கும் என்று நினைத்தேன்.
(தொடரும்)

பாட்டுக்கு ஒரு போர்!

டிசம்பரின் பிற்பகுதியில் இசைவிழாக்களால் தமிழகத் தலைநகர் கலகலத்துப் போயிருந்ததென்றால் டிசம்பரின் முற்பகுதியில் பாரதி விழா ஒன்பது நாள் பெருவிழாவாக நடந்து சென்னையை ஒரு கலக்குக் கலக்கி விட்டதும் உண்மைதான்.

இவ்வளவு ஆர்வத்துடன் பாரதியின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடும் பாரதி இளைஞர் சங்கத்தினர் பாராட்டுக்குரியவர்கள். இந்த விழாவில் கேட்ட சில சுவையான விஷயங்கள் :

வாழ்நாளெல்லாம் தலைநிமிர்ந்து கம்பீரமாக நின்ற பாரதி சொர்க்கத்துக்குச் சென்ற பிறகு தலைகுனிய நேரிட்டு விட்டது! 'ஏன்? எதற்கு?' என்று பரபரப்புடன் கேட்கத் தோன்றுகிறதல்லவா? எட்டயபுரம் பாரதி மணி மண்டபத்தைப் பார்க்கத்தான் அவர் தலை குனிந்தாராம்! தலைகுனிந்து வெட்கப்படவில்லை; விம்மிதமடைந்தார்!

பாரதி விழாவோடு அமரர் கல்கி நினைவு நாளையும் சேர்த்துக் கொண்டாடிய தருணம் திரு ந. சஞ்சீவி, 'கல்கி' அவர்கள் இப்படி நகைச்சுவை பொங்க எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டி அந்தப் பேறு மன்னருக்கு அஞ்சலி செலுத்தினர்.

பாரதியின் தேசியம் பற்றிப் பேச வந்த திரு நா. பார்த்தசாரதிக்கு வேறு ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளக் குறிப்பிட்டிருந்த நேரம் நெருங்கி விட்டது. அக்கூட்ட நிர்வாகிகள் இவரை இங்கிருந்து கிளப்பிக் கொண்டு போக ஆயத்தமாக வந்து நின்றனர். ''ஆகமொத்தம் தேசியம் இப்போது ஒரு நெருக்கடியான நிலையில் இருக்கிறது'' என்று சிலேடையாகப் பேசிச் சிரிப்பொலி எழுப்பினர் பாரதியின் தேசியம் பற்றிப் பேச வந்த திரு நா. பா.

பாரதி பரம்பரையில் தோன்றி அருமையான கவிதைகளை எழுதி வரும் இளம் கவிஞர்களுக்குத் தங்கள் படைப்புக்களில் ஒன்றிரண்டைப் படித்துக் காட்ட வாய்ப்பளித்தது விழாவில் சிறப்பு அம்சம். இதோ மாதிரிக்குச் சில அடிகள்: ''பாரதியே, நீ பிறந்து வாராயோ?'' என்று கேட்கிறார் எழில் மணி. எதற்காக அவர் வரவேண்டுமாம்?

நீவளர்த்த கவிப்பயிர்கள் இடையினிலே-இன்று
நெடிதுவளர் களைகளையே வளர்த்திட்டார்

....

கள்ளத்தை விளைக்கின்ற பாட்டெல்லாம்-திரைக்
காட்சியிலே வந்துநிதம் கொல்லுதடா
அன்று நீ

....

பட்டுக் கத்தரித்துப் பண்போடு பாட்டெழுதி
கட்டிக் கொடுத்திருந்தாய் - பச்சையாய்க்
காட்டிக் கொடுக்கவில்லை,
இன்றோ

....

பாட்டினிலே இருப்பதுவோ இருபொருளாம்-
பாட்டைப்
போட்டவர்க்குக் கிடைக்குமாம் பெரும்பொருளாம்

தோள்தட்டி மீசைமுறுக்கித் துணிவோடு-இங்கு
நீ வந்தால் பாட்டுலகம் பிழைத்துக்கொள்ளும்

....

நாட்டுக்குப் போர்தன்னைச் செய்தவனே-தமிழ்ப்
பாட்டுக்குப் போர் செய்யப் பிறந்துவா!

நெல்லை அருள்மணி பாரதி இலக்கியத்தைக் கவிதை நயத்தோடு விமர்சிக்கிறார் பாருங்கள்:

திக்குத் தெரியாத காட்டிற் சென்று - அந்தத்
தீர்த்தக் கரையிலே நின்றுகொண்டு
சர்க்கரைத் தமிழில் பாட்டிசைத்து - அதைச்
சண்பகத் தோட்டத்தில் எதிரொலித்தான்.

கரும்புத் தோட்டத்தில் கசப்பிருக்கக் - கண்டு
கனன்று கொதித்த வீரனய்யா
இரும்பைக் காய்ச்சித் தொழிலியற்ற - நம்மை
ஏவிவிட்ட தமிழ்த் தேவனய்யா.

''இப்படிப்பட்ட இளம் கவிஞர்கள் நூற்றுக்கணக்கில் தமிழ்நாட்டில் தோன்றி வளரும்போது எழில்மணி கோருவது போல், தமிழ்ப் பாட்டுக்குப் போர் செய்ய நான் ஏன் பிறந்து வர வேண்டும்? எல்லாம் நீங்களே கவனித்துக் கொள்வீர்கள்!'' என்று பாரதி விடை பகர்ந்தால் வியப்பதற்கில்லை!

பாரதி பிறந்ததின விழா ஒன்பது நாட்கள் சென்னையில் விமரிசையாக நடந்தது. தொடக்க விழாவன்று கலந்து கொண்ட பாரதியன்பர்களில் சிலரைப் படத்தில் காணலாம்.



காணிக்கை

ஆர்வி

அத்தியாயம் 31

யாமினி ஒரு சின்னச் சிரிப்பினால் பாஸ்கரனுடைய கலவரத்தை யெல்லாம் நொடியில் போக்கி விட்டாள். இன்னொரு சமயமாக இருந்திருந்தால் பாஸ்கரன் கிட்டத்தட்ட எல்லாவற்றையும் கவனித்திருப்பான். இன்று அவன் எதையும் சரியாகக் கவனிக்கவில்லை. இதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான் என்று யாமினியும் ஆறுதல் அடைந்தாள்.

''இப்ப எப்படி இருக்கு?''

''தேவலை.''

''எதையாவது நினைச்சிண்டிருக்காதே. பேசாமே தூங்கு!''

''நீங்க விளக்கைப் போட்டுண்டு எழுதப் போறேளா?''

''அதெல்லாம் இல்லை. நானும் விளக்கை அணைச்சுட்டுத் தூங்கத்தான் போறேன்!''

''அதான் கேட்டேன்'' என்று யாமினியே போய் விளக்கை அணைத்து விட்டு வந்து படுத்துக் கொண்டாள்.

காமேசுவரனுக்கு எழுதிய கடிதத்தையே நினைத்து அவன் மனம் அசைபோட்டுக் கொண்டிருந்தது. கடிதத்தில் சில வரிகளும் வாசகங்களும் அமைப்பாக விழுந்திருந்தன. அதிலே ஒரு திருப்தி. நேரில் சொல்ல முடியாததையெல்லாம் நாசூக்காக எழுதியாகிவிட்டது என்று பெருமூச்செறிந்தான்.

மார்பின்மீது போட்டிருந்த யாமினியின் கையை ஆதுரத்துடன் பொத்திக் கொண்டான். யாமினிக்கு மிகவும் அழகான விரல்கள். அவள் அணிந்திருந்த மோதிரம் கண்ணிலேயே நிற்க, கைவிரலால் அதைச் சீண்டிக் கொண்டிருந்தான்.

''இன்னும் தூங்கல்லே?''

''உம் உம்...''

''இன்னும் அந்தக் கடுதாசியையே நினைச்சிண்டிருக்கேளா?''

''ஊ...ஹூம்...''

''அப்பத் தூங்குங்கோ. எல்லாம் காலையிலே பார்த்துக்கலாம்...'' என்று யாமினி கையை விடுவித்துக் கொண்டு படுக்கையில் புரண்டு படுத்தாள்.

பாஸ்கரனுக்குத் தூக்கம் வரவில்லை. தன் கடிதத்தைப் படித்துவிட்டுக் காமேசுவரன் என்ன நினைப்பான் என்று கற்பனை செய்து பார்த்தான். இதுவரையில் காமேசுவரன் செய்த உதவிக்கெல்லாம் நன்றி தெரிவித்து விட்டு, இனி மகேசன் அண்டு மகேசுவரன் ஸ்தாபனத்துடன் கொண்டிருந்த தொடர்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடிவு செய்து விட்டதாகப் பாஸ்கரன் தெளிவாக அதில் குறிப்பிட்டிருந்தான். சொந்த முயற்சியில் தீவிரமாக முழுக் கவனமும் செலுத்த வேண்டியிருப்பதன் காரணமாக இந்த முடிவுக்கு வந்திருப்பதாகவும் சந்தேகத்துக்கு இடமின்றி விளக்கி யிருந்தான்.

இது அவன் முன்பே செய்திருந்த முடிவுதான். ஆனால் காமேசுவரனிடம் இதை எப்படிச் சொல்வது என்றுதான் இத்தனை நாட்களும் தயங்கிக் கொண்டிருந்தான். அவர்களோடு அவன் கொண்டிருந்த தொடர்பு வெறும் தொழில் ரீதியாக இல்லாமல் உணர்ச்சிபூர்வமான நிலையில் இருந்ததால்தான் இந்தக் குழப்பம். அவர்களுடைய பிடிப்பிலிருந்து எளிதில் விடுபட முடியாத அளவுக்குச் சிக்கல் ஏற்பட்டிருந்ததாக அவனுக்குத் தோன்றியது. இது இன்னும் நீடித்தால் சிக்கல் மேலும் அதிகரிக்கக் கூடும் என்ற பயம் வந்து விட்டது. அதற்கெல்லாம் இன்றைக்குத் துணிந்து ஒரு தீர்வு கண்டுவிட்டதாக எண்ணி அவன் தன்னைத் தானே பாராட்டிக் கொண்டான்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் யாருமே பாஸ்கரனைத்தான் குறை சொல்வார்கள். யாரோ என்ன, யாமினியே கூடச் சொல்வாள். அந்த அளவுக்கு அவர்கள் சலுகைகளும் உதவிகளும் கொடுத்து வந்தது வெளிப்படையாகவே தெரிந்தது. ஆனால் இதற்கெல்லாம் காரணம் என்ன? வெளியி

லிருந்து பார்ப்பவர்களுக்கு அதெல்லாம் தெரியாது. காரணமே இல்லாமல் ஒருவனுக்கு இத்தனை சலுகைகள் சும்மாவா வழங்குகிறார்கள் ? யாரால் யார் அதிக நன்மை அடைகிறார்கள் என்று வெளியிலிருப்பவர்களுக்கு எப்படித் தெரியும்? அப்படியே தெரிந்தாலும் என்றைக்குமே தங்களால் அடையமுடியாத சலுகைகளையும் சௌகரியங்களையும் அடைகிறவனைத்தான் குற்றம் சொல்வார்களே தவிர, நியாயத்தைக் கவனிக்க மாட்டார்கள். சின்ன மீனைப் போட்டுப் பெரிய " மீனைப் பிடிக்கின்ற கபந்தன்கள் எல்லாரும் அவர்களுக்குக் கர்ப்ப சீமான்கள். அள்ளிக் கொடுக்கிற வள்ளல்கள். பணம் படைத்தவன் பல வழிகளிலும் பணம் பண்ணுகிற வித்தையைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. அவன் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; தரும். சம்பளம் வாங்குகிறவன் எப்படிப்பட்ட மேதாவியாக, திறமைசாலியாக இருந்தாலும் கை நீட்டி வாங்குகிற சம்பளத்துக்குக் கை கட்டிக் கொண்டுதான் நிற்கவேண்டும். அதைத் தவிர வேறு எதற்கும் அவனுக்கு அருகதை கிடையாது. இன்னும் கொஞ்சம் வளைந்து கொடுத்துப் பல்லைக் காட்டி, அதிகச் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதை விட்டு விட்டு, சொந்தமாகவும் சுதந்திரமாகவும் நிற்கப் போகிறேன் என்று போட்டி போடத் துணிவதாவது?

பெரும்பாலும் பணம் படைத்தவர்களுக்குப் பொதுமக்கள் எந்தப் பக்கம் சாய்வார்கள் என்பது நன்றாகத் தெரியும். அவர்களால் எதையும்



பணம் கொடுத்து வாங்க முடியும். அப்படி யிருக்கும்போது தனிப்பட்டவர்களுடைய திறமைகளை விலைக்கு வாங்குவது என்ன பிரமாதம்? தமக்கு அந்தத் திறமை பயன்பட்டாலும் படாவிட்டாலும் இன்னொருவனுக்குப் பயன்படக் கூடாது. அதில் போட்டி வரும்போலிருந்தால், என்ன செலவானாலும் ஒரு கை பார்த்து விட வேண்டியதுதான். இன்றைக்குச் சில ஆயிரங்களுக்குக் கையை இழுத்துக் கொண்டால், நாளைக்கு வெளியில் தெரியாத பல காரியங்கள் அல்லவா கெட்டுப்போகும்? பாஸ்கரனுக்காகச் சில ஆயிரங்கள் செலவிட்டால் அவனுடைய பெயரை, உழைப்பை, அறிவை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ அப்படிப் பயன்படுத்திக் கொண்டு இரண்டு, மூன்று லட்சம் ஆதாயம் பண்ணுகிறவழி அவர்களுக்குத் தெரியும்.

இதனால் பாஸ்கரனுக்கு என்ன நஷ்டம் என்பதுதான் காமேசுவரனுடைய கட்சி. அநுகூலமோ, ஆதாயமோ அவர்கள் அடைவதில் பாஸ்கரனுக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை. ஆனால் அதை ரகசியமாக வைத்துக் கொண்டு செய்வானேன்; கொடுப்பதையும் இனமாக அள்ளி விடுவதுபோல் காட்டிக் கொள்வானேன் என்பது பாஸ்கரனுடைய கட்சி. மகேசன் அண்ட் மகேசுவரனுக்குச் சமீபத்தில் அப்படி ஒரு பெரிய டெண்டர் கிடைத்திருந்தது. அதை அவர்கள் எப்படிக் கிடைத்தது என்று வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. தன்னுடைய யோக்கியதாம்சங்கள்தாம் இந்த டெண்டர் கிடைக்கக் காரணமாக இருந்தன என்று அவனுக்குத் தெரியும். இதை இவன் தெரிந்து கொண்டு விட்டது காமேசுவரனுக்கு ரோசமாக இருந்தது.

ஜிம்கானா கிளப்புக்குப் போகிற வழியில் ஒரு நாள் காமேசுவரனே இந்தப் பேச்சை எடுத்தான். அன்றைக்கு அவன் பேச்சுத் தோரணை எப்போதும் போல இல்லை.

''என்ன பாஸ்கர், உங்கிட்டே எங்க அப்பாவுக்கு எத்தனை மதிப்பு உண்டுன்னு உனக்கு நல்லாத் தெரியும் இல்லையா?''

''ஏன், இப்ப அதுக்கு என்ன வந்தது?'' என்று கேட்டான் பாஸ்கரன்.

''ஒண்ணும் வரல்லே. அந்த மதிப்பை வீணாக் கெடுத்துக் கொள்கிறதனாலே உனக்கோ, இன்னொருத்தருக்கோ ஒரு லாபமும் இல்லைன்னுதான் சொல்ல வந்தேன்.''

''ஓ—அதுக்குச் சொல்றியா? நீ என்னமோ ஓர் 'அஜிடேடெட் மூடு'லே பேசறாப்பலே இருக்கு. இப்ப நீ எங்கேயிருந்து வர்றே? கிளப்பிலேருந்து வர்றியா, இல்லே இனிமேத்தான் நாம கிளப்புக்குப் போகப் போறோமா?''

''நான் எல்லாம் சரியான 'மூடு'லேதான் இருக்கேன். உங்கிட்டே தனியாப் பேசணும்னுதான் கிளப்புக்கு அழைச்சுண்டு போறேன். எங்க அப்பாவுக்கு உம்மேலே இருக்கிற நல்ல அபிப்பிராயத்தையும் பெரிய மதிப்பையும் பற்றி உனக்குச் சொல்லணும்னுதான் வந்திருக்கேன். தயவுசெய்து அதைக் கெடுத்துக்காதே. நீ பியர்ஸன் வைத்தியநாதன்கிட்டே ஏதோ டெண்டர் கிடைச்சதைப் பத்திச் சொன்னியாம். என் காதிலே விழுந்தது. இது எங்க அப்பா காதுக்கு எட்டினால் உங்கிட்ட வச்சிருக்கிற மதிப்பெல்லாம் மாறிப் போகும். அவர் 'மிஸ்டேக்' பண்ணிக்குவார். அவர் மனசு மாறிப் போச்சுன்னா என்ன ஆகும் தெரியுமா?''

''ஒரு நிமிஷம் இப்படி வண்டியை நிறுத்தேன், சொல்றேன்.''

''ஏன், எதுக்கு நிறுத்தச் சொல்றே?''

''நீ இப்பச் சரியான 'மூடு'லேஇல்லே. இந்தச் சமயத்திலே நான் உங்கிட்டே பேச்சுக் கொடுக்க விரும்பல்லே. இங்கேயே நிறுத்து. நான் ஒரு டாக்ஸி வச்சிண்டு போயிடறேன்!''

''சேச்சே, நோ நோ—நானே உன்னைக் கொண்டு போய் விட்டுடறேன். இவ்வளவுதானே? ஆனா இப்ப நீ சொல்றே பாரு, என் 'மூடு' சரியா யில்லேன்னு—அதை மட்டும் சொல்லாதே. எப்பப் பேசினாலும் இந்த விஷயத்திலே மட்டும் என் 'மூடு' இப்படித்தான் ஆயிடும். அதனாலே இந்தப் பேச்சை இத்தோட மறந்துடுவோம். உன்னாலேதான் இந்த டெண்டர் கிடைச்சிருக்குன்னு நீ நினைக்கிறே பாரு, அதையும் இன்னியோட மறந்துடு. அவனவன் அதிருஷ்டத்துக்கு, முகராசிக்கு, செல்வாக்குக்கு எத்தனையோ நடக்கும். அதைப் போய் உன்னாலேயோ என்னாலேயோதான் நடந்திருக்கும்னு நினைக்கிறது பெரிய தப்பு. பெரிய முட்டாள்தனம் என்று கூடச் சொல்வேன். அதாவது நண்பன் என்கிற முறையிலே சொல்றேன். எல்லாருக்குமே எல்லாமே நடந்துடறது இல்லே மிஸ்டர். சிலதுதான் நடக்கும். அதுவும் சிலபேராலேதான் முடியவும் முடியும். நீ வேணும்னா வேறே யார் மூலமாவது முயற்சி பண்ணிப் பாரேன். முடியாது, நடக்காது. எங்களுக்குக் கிடைச்சதுக்கு நீ ஒரு காரணமாகவே இருந்தாலும் நீ இப்படி வெளியிலே சொல்லிக்கக் கூடாது. இதை நான் உங்கிட்டே எதிர்பார்க்கவும் இல்லே....''

திரும்பி வருகிற வழியெல்லாம் காமேசுவரன் பேசிக் கொண்டே வந்தான். பாஸ்கரனுக்கு இதற்கு மேலே பேசத் தெரியும். இருந்தாலும் காமேசுவரன் இருந்த நிலையில் அவனிடம் பேச்சுக் கொடுக்க வேண்டாம் என்று இருந்து விட்டான். வண்டி வந்து நின்றதும் இறங்கிக் கொண்டான்.

போனவனை அருகில் அழைத்து, "இதோ பார் பாஸ்கர், வேணும்னுச் சொல்லு, அப்பாகிட்டே பேசி உன் அலவன்ஸைக் கொஞ்சம் உசத்திப் போடச் சொல்றேன்!" என்றான் காமேசுவரன்.

பாஸ்கரன் இதற்கும் பதில் சொல்லவில்லை. ஆனால் கையைத் தூக்கி விடை கொடுத்தான்.

"ஆர் யூ ஷ்யூர் யூ டோன்ட் லைக் டு ஃபர்கெட் எவ்வெரிதிங் ஓவர் எ நைஸ் ட்ரிங்க்?"

"நோ — தாங்க் யூ!"

அப்படிப் பேசிவிட்டுப் போனவன் இப்படி ஒரு கடிதத்தை எதிர்பார்த்திருக்க மாட்டான்.

'உண்மையிலேயே அவர்களுக்கு என் மீது நல்ல மதிப்பு இருந்தால் அது இந்தக் கடிதத்தினால் இன்னும் கொஞ்சம் அதிகமாகுமே தவிர, நிச்சயம் குறைந்து போகாது' என்று எண்ணியவாறே அவன் இன்னொரு பக்கமாகப் புரண்டு படுத்துக் கொண்டான்.

அத்தியாயம் 32

ஒரு வாரம் வரையில் பாஸ்கரனுக்கு விஷயம் தெரியாமல்தான் இருந்தது. யாமினியும் கூடுமான வரையில் அதைக் காட்டிக் கொள்ளாமலே இருந்து பார்த்தாள். அவளுக்குச் சந்தேகம்; வெட்கம்; இன்னொரு பக்கம் உண்மை தெரிந்தால் பாஸ்கரன் என்ன சொல்வானோ, செய்வானோ என்று கவலை. அவளுக்கே முதலில் இது பிடிக்கவில்லை; பிடிக்காமலும் இல்லை. குழப்பமாக இருந்தது.

பாஸ்கரன் யாரையோ எதிர்பார்த்துத் தற்செயலாக வீட்டில் இருந்தான். யாமினி காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடவில்லை. கீழே இறங்கி வரவும் இல்லை. பாஸ்கரன் இன்றைக்குத்தான் சரியாகக் கவனித்தான்.

"ஏம்மா, யாமினியைக் கவனிச்சியா? எனக்கு இந்த மாதிரி ஏதாவது வந்துட்டால் பித்தம்னு சொல்லுவே, சூடுன்னு சொல்லுவே, அதனாலேதான் அன்னத் துவேஷம்னு சொல்லிக் கஷாயமும் கடுகுப் பொடியுமாப் போட்டு ரகளைப்படுத்துவியே — இவளுக்கு அந்தக்

"அமைச்சர்கள் இப்பொழுது இருக்கும் ...போடு வேறு ஒரு மனிதர் வாழ வேண்டுமானால் அவருடைய குறைந்த மாதச் சம்பளம் 37,500 ரூபாயாக இருக்க வேண்டும்."

- டாண்டேகர், எம். பி.

இந்தியாவில் ஐந்நூறுக்கும் அதிகமான அமைச்சர்கள் இருக்கிறார்கள். உலகிலேயே வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு பேர் கிடையாது. நம்மை விடம் பல மடங்கு அதிகமான வருவாய்க்கு பட்ஜெட் போடும் நாடுகளை விட இது அதிகம்.

- இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி.

தகவல்: பாபு



கை வைத்திய மெல்லாம் ஒண்ணுமே கிடையாதா?" என்று அம்மாவைப் பார்த்துக் கேட்டான் பாஸ்கரன்.

அப்போதுதான் யாமினி மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள். இந்தப் பேச்சுக் காதில் விழுந்ததும் அடுத்த அடி எடுத்து வைக்கவோ, திரும்பிப் போகவோ முடியாமல் அப்படியே திகைத்து நின்றாள்.

"எல்லாம் உண்டுடாப்பா உண்டு, அப்படி யெல்லாம் இருந்தால். ஆனால் இதுக்கு ஒரு வைத்தியமும் கிடையாது. அநுபவிச்சுத்தான் ஆகணும். மசக்கைக்கு மருந்து அந்த அமெரிக்காவிலே கூட இருக்காது. இருந்தால் வரவழைச்சுக் கொடு; வேண்டாங்கலே" என்றாள் பார்வதியம்மாள்.

"மசக்கையா—?"

"பின்னே இது வேறென்னன்னு எண்ணிண்டிருக்கே? உனக்குத் தெரியாதா ஒண்ணும்? உங்கிட்டே சொல்லல்லியா அவள் எதனாலேன்னு?"

"என்னம்மா இது—என்னமோவெல்லாம் சொல்றியே?"

"நான் என்னத்தைச் சொல்றேன்— அவள் சொல்லியிருப்பாளாக்கும்னு நினைச்சேன். குமட்டலும் புரட்டலும் இருந்தால் இதுகூடவா தெரியாது ஒரு பொண்ணுக்கு? அதிலேயும் கல்லூரியிலே படிச்சவளுக்கு! நான் கூட ஜாடையாச் சொன்னேனே, அப்பவுமா தெரிஞ்சுக்கலே? தெரிஞ்சிருக்கும்; உங்கிட்டே சொல்றதுக்கு வெட்கப்பட்டுக் கிண்டு இருந்திருப்பாள். என்ன இருந்தாலும் சிறிசுதானே?"

"என்னம்மா இது, இப்படிச் சொல்றே?"

"எல்லாம் தெரிஞ்சுதாண்டா சொல்றேன். இது மசக்கைடா, மசக்கை! எந்த வைத்தியத்துக்கும் மசியாது. அப்படித்தான் இருக்கும். இதுக்கெல்

லாம் விசாரப்பட்டுண்டு இருக்காமே, உன் வேலையைப் பார்த்துண்டு போ!''

வெளியில் வந்த பாஸ்கரன் மாடிப் படிக்கட்டில் யாமினி திகைத்து நிற்பதைப் பார்த்தான். அம்மாவுக்குத் தெரியாமல் ஜாடையிலேயே, 'எல்லாம் காதிலே விழுந்ததா?' என்று கேட்டான். அவள் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு சிறிது நின்றுள். பிறகு கண்களில் வெட்கம் ததும்ப, உதட்டிலே முறுவல் நெளிய அவனைப் பார்த்தாள்.

''அதுக்குள்ளே என்ன அவசரம் உனக்கு?'' என்று பொய்க் குரலில் அவளை மிரட்டினுன் பாஸ்கரன்.

இதைப் பார்த்துக் கொண்டே வந்து விட்டாள் பார்வதி அம்மாள். இருவருக்கும் மானமே போய் விட்டது போலிருந்தது.

''ஒண்ணும் வேண்டியிருக்க லேன்னு மாடியிலேயே இன்னும் சித்தே இருக்கிறதுதானே — அவன் சொல்றுப் பலே என்ன அவசரம் உனக்கு?''

''அதான்—அலதக் கேளு முதல்லே!'' என்று சமாளித்துக் கொள்ளப் பார்த்தான் பாஸ்கரன்.

''சரிதாண்டா போடா! இதெல்லாம் நம்ம கையிலே என்ன இருக்கு? அவளைப் போய் ஒண்ணும் சொல்லிண்டு இருக்காதே!'' என்று சமாதானமாகப் பேசிவிட்டுப் போனுள் பார்வதியம்மாள்.

''அம்மாவுக்கு எல்லாம் தெரியும்.. பெரிசாச் சமாளிச்சுப்புட்டதா நினைச்சுக்க வேண்டாம்!'' என்று பழித்தாள் யாமினி.

கையை ஓங்கப் போனுன் பாஸ்கரன். அதற்குள் காமேசுவரனிட மிருந்து வந்த ஆள் தலையைக் காட்டினுன். அவனைப் பார்த்ததும் தன் கடிதத்துக்குப் பதில் வந்திருக்கும் என்ற ஆவலோடு வாசல் பக்கம் போனுன்.

''என்னப்பா, அது, தபாலா?''

''ஆமாம், சார்.''

''சரி, கொடுத்துட்டுப் போ!'' என்று அந்த உறை கனக்கிறதா என்பதுபோல் பார்த்தான் பாஸ்கரன்.

அது மிகவும் இலேசாக இருந்தது ஆனுல் உள்ளே இருந்த 'செக்' வழக்கத்தை விடச் சிறிது அதிகமாகக் கனத்தது. செக்கோடு வேறு ஒரு கடிதமும் இணைத்திருக்கவில்லை. அது பாஸ்கரனுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

'' அந்த ஆள் போயிட்டானு, யாமினி?''

''அப்பவே போயிட்டானே ! எதுக்குக் கேக்கறேள் ?''

''ஹூம். எல்லாம் மாடிக்கு வா, சொல்றேன்!''

யாமினி மேலே போனபோது பாஸ்கரன் செக்கையும் உறையையும் மேஜையில் எறிந்துவிட்டு அதையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன இது, செக்கா?''

''உஹ்ம் ஹூம்; பிச்சை! காமேசுவரனும் அவன் அப்பாவும் வழக்கத்தை விட அதிகமாக நூறு ரூபாய் பிச்சை போட்டிருக்காங்க.''

''நீங்க என்னமோ அவசரப்பட்டுக்கிண்டு எழுதினேளே, அதுக்குப் பதில் வந்திருக்காக்கும்னு பார்த்தேன். வெறும் செக் மட்டும்தானே வந்திருக்காப்பலே இருக்கு!''

''ரோச மிருந்தாப் பதில் வந்திருக்கும்.''

''அதானே கேக்கறேன். அனுப்பிச்ச கடுதாசிக்குச் சமாதானமாய் நாலு வரி எழுதப்படாதோ?''

''இங்கே யாருக்கு வேணும் அவங்க சமாதானமெல்லாம்?''

அவன் கோபத்தைக் கண்டு யாமினி சிறிது சும்மா இருந்தாள்.

''அப்ப என்ன செய்யறதா உத்தேசம்?'' என்று கேட்டாள்.

''மூஞ்சியிலே அடிச்சாப்பலே இதைத் திருப்பி அனுப்பப் போறேன்!''

''எதுக்காக?''

''எதுக்காகவா? உனக்கு ஏதாவது இந்த இது இருக்கா இல்லையா?''

''இருந்துதான் கேக்கறேன், எதுக்காகன்னு?''

அவனுக்குப் பதில் சொல்ல வரவில்லை; கோபம்தான் வந்தது.

''உனக்கு ஒண்ணும் தெரியாது, போ! நீ இதிலெல்லாம் தலையிடாதே!''

''எல்லாம் தெரிஞ்சது போதும். இந்தச் செக்கை ஒண்ணும் திருப்பியனுப்பப் படாது. வேணும்னு அடுத்த மாசம் அப்படிச் செய்யுங்கோ!''

அவளுக்கு என்னவோ மசக்கையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த கையோடு இப்படி அவன் கூறுவது அச்சானியம் போல வேதனையாக இருந்தது. அவளுக்கு அவள் ஏன் இப்படிச் சொல்கிறுள் என்று புரியவில்லை. அப்புறம் போகப் போகத்தான் புரிந்தது.

''இதெல்லாம் மூடநம்பிக்கை; பைத்தியக்கார நினைப்பு!'' என்றுன்.

''இருக்கட்டும்; அசடுகளும் புத்திசாலிகளும் சேர்ந்ததுதான் உலகம். பார்க்கப் போனுல் அசடுகள்தான் அதிகம். நான் அதிலே ஒருத்தி !'' என்றுள் யாமினி.

''அதான் தெரியறதே, இப்ப !''

''அப்படியே இருந்தாலும் அடுத்த மாசம் செக் வந்தாத்தான் திருப்பியனுப்

பணும். இந்த மாசத்துக்குன்னு வந்த செக்கைத் திருப்பியனுப்பறது என்ன புத்திசாலித்தனமோ, தெரியல்லே!''

அவள் பேச்சிலுள்ள நியாயத்தைப் பாராட்டுவது போல் டெலிபோன் மணி கிணுகிணுத்தது.

'' ஹலோ.... யாரு ?'' என்று ரிஸீவரை எடுத்துக் கேட்டான் பாஸ்கரன்.

'' நான்தான் பாஸ்கர், அஜிதா !'' என்று பதில் வந்தது.

''அஜிதாவா? நீ எப்ப வந்தே ?''

''ராத்திரி பிளேனிலே ! உனக்குப் பெரிய அதிசயமா இருக்கு, இல்லே? ஐ ஹாவ் மோர் சர்ப்ரைஸஸ் ஃபார் யூ! இப்ப உன்னாலே கொஞ்சம் வந்துட்டுப் போக முடியாதா ?''

'' ஓ — ஷ்யூர் ! வரேன், கால் மணியிலே !''

'க்ளிக்' — போன் ரிஸீவரை வைத்து விட்டுத் திரும்பினான் பாஸ்கரன். யாமினி வயிற்றைக் குமட்டிக் கொண்டு வர, வாஷ்பேஸின் பக்கம் போனாள்.

(தொடரும்)



சிவனருட் செல்வர்

ஏனைய புராணங்கள் ஆண்டவனின் பெருமையைக் கூறும்பொழுது, சேக்கிழாரின் பெரியபுராணம் மட்டும் அவனது அடியார்களின் கதையைப் பாடுகிறது. இது பெரிய புராணத்தின் தனிப் பெருமை.

அடியார்களின் புகழ் பாடுவதில் உள்ள ரகசியத்தைக் கபீர்தாசர் கூறுகிறார்:

'ஆண்டவனிடம் பக்தி செலுத்த வேண்டியதில்லை. அவனுடைய அடியார்களிடம் பக்தி செலுத்து. ஆண்டவன் பக்தி செலுத்துவோருக்குச் சொத்தும் சுதந்திரமும்தான் தருவான். ஆனால் அடியார்களோ அந்த ஆண்டவனையே தந்து விடுவார்கள்!'

ஔவைப் பிராட்டியும் இதைத்தானே கூறுகிறாள்? 'இறைவன் தொண்டருள்ளத்து ஒடுக்கம்; தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!' என்று.

பாமரர்களுக்கும், படித்தவர்களுக்கும் கதை சொல்லிச் சொல்லிப் பழக்கப்பட்ட திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் எளிய தெள்ளிய தமிழில் பெரிய புராணத்தைக் 'கல்கி' நேயர்களுக்குத் தொடராக வழங்கியது யாவரும் அறிந்ததே. கதையோடு காவிய நயத்தையும் பக்திப் பெருக்கையும் காட்டும் திரு வாரியார் அவர்களுடைய எழுத்தின் திறனை ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் புத்தக வெளியீட்டு விழாவின்போது கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்:

'பெரியபுராணம் கற்கண்டைப் போன்றது; சுவைக்கச் சுவைக்க இனிப்பது.

'இந்தச் சுவையை எளிதாக்க உரையாசிரியர்கள் மேற்கொண்ட பணிதான் கற்கண்டைச் சர்க்கரையாக்கியது.

'ஸ்ரீ கிருபானந்தவாரியாரோ கற்கண்டையும் சர்க்கரையையும் காட்டிலும் சுவைக்க எளிதாக்கிச் சுவையைக் கூட்டிவிட்டார். ஆம்; ஏலம் பொடித்துப் போட்டுக் குங்குமப் பூவையும் கலந்து சர்க்கரைப் பாகை நறுமணம் கமழும் தீஞ்சுவைப் பானகமாக்கித் தந்து விட்டார். நாவினிக்க, நல் இதயம் இனிக்க, பானகத்தைப் பருகிப் பாமரர் — பண்டிதர் யாவருமே மகிழலாம்.'

''சிவனருட் செல்வ''ருக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் அருளிய ஸ்ரீமுகம் கூறுகிறது:


''...இந்நூலில் ஸ்ரீ வாரியார் தமக்கேயுரிய எளிய பொருள் செறிவு நிறைந்த தமிழ் வசன நடையில் அவசியமான பாடல்களுடனும், எல்லோருக்கும் புரியும் உவமை நயங்களுடனும் தக்க சான்றுகளுடனும் சிவனருட் செல்வர்களின் வரலாறுகளைச் சுவைபட வழங்கியுள்ளார்....''

சேக்கிழார் காட்டும் காவிய நயத்தை ஸ்ரீ கிருபானந்த வாரியார் மெருகு கூட்டிக் கூறும் அழகைக் காணும்போது அவர் தம் புலமைக்கு அடிபணியவே தோன்றும்.

திருமுருக கிருபானந்தவாரியார் புரிந்துள்ள பெருமைப் பணிக்கு நூல் வடிவம் கொடுத்துப் பெருமையுற்றவர்கள்:

வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை—17; விலை: ரூ. 10.

'சிவனருட் செல்வர்' வெளியீட்டு விழாவின் போது அரங்கில் திரு ம.பொ.சி., திரு டி.எம்.பி. மகாதேவன், திரு வாரியார் ஆகியோர்.



பொன்னைத் தேடிய புலவன்

பேராசிரியர்:
அ. சீநிவாசராகவன்



பொன்னைத் தேடி, புலவன் போவது பழைய கதை; நமக்குத் தெரியும். கிடைக்காவிட்டால், திண்டாடுவான்.

'கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலது தழீஇ
பேழையுள் இருக்கும் பாம்பென'

வாடுவான். பொன் கிடைத்தால், கொடுத்தவர்களை வானளாவப் புகழ்ந்து வள்ளல்கள் ஆக்குவான். பழங் கதை. 'இருவேறு, தெள்ளியர் ஆதல் வேறு.'

சோறும், குச்சிலும், நாலு முழத் துண்டும் கிடைக்கத் துணை புரியும் பொன்னை எண்ணாமல், வேறொரு வகையான பொன்னைத் தேடினான் ஒரு புலவன். உதய வானிலே பொன் மலர்கிறது; கழனிப் பச்சையில் நெற்கதிர்களின் ஊடே, பொன் மாயம் கண் சிமிட்டுகிறது; தங்கரளிப் பூவில், குருவியின் வாலில், மாவிலைப் பழுப்பில், அந்தி வான இரத்த வெள்ளத்தின் கரையில், அங்கே, இங்கே, மண்ணில் எங்கும் இந்தத் தெய்வ மகள் துள்ளி வருகின்றாள், 'கண்ணாம்பூச்சி' ஆடுகின்றாள். அவளைக் கவிதைக் கரம் நீட்டிப் பிடிக்க முடியாதா ? இப்படி எண்ணினான் அவன்.

பூமியின் முதற் பச்சை பொன்னாக மலர்கிறது. ஒரு கணத்தில் மறைந்து விடுகிறது. அதைப் பிடித்து வைக்க முடிவதில்லை. போகட்டும், மஞ்சள் மட்டுமா பொன்? அழகெல்லாம் பொன்தானே? பூமியின் ஏட்டில் முதல் இதழ் ஒரு மலர். ஆனால், ஒரு நாழிகைதான் அதன் வாழ்வு. பிறகு, இலைக்குள்ளே இலை மடங்குகிறது. அழகுப் புத்தகம் மூடிக் கொள்கிறது. ஆதியில், மனிதனைப் படைத்த கடவுள், அவனை 'ஈடன்'* என்ற சொர்க்கத்தில் வாழ வைத்தார். அந்த ஈடன் துயரிலே மறைந்தது. இப்படித்தான் உதய வானப் பொன் பகலாய் மங்குகிறது. பொன்னா? இங்கே உண்டு. ஆனால் இருப்பதில்லை, கண நேரந்தான் அதன் வீச்சு.

'பூமியின் முதற் பச்சை பொன். இதனைக்
கட்டிக் காப்பது கடினம். பூமியின்
முதல் இதழ் ஒரு மலர். மலரோ,
இருப்பதெல்லாம் ஒரு நாழிகைதான்.
பிறகு இலைக்குள்ளே இலை மடங்கும்.
'ஈடன்' இப்படித்தான் இழிந்தது துயரில்.
இப்படியேதான் வைகறை, பகலாய்
இறங்குகிறது. பொன்னா ? இங்கே
தங்கம் எதுவும் தங்குவதில்லை.'

பார்த்தவுடன் இது கவிதையாகத் தோன்றவில்லை. அணிகளும், சொல்லின் ஆரவாரமும், சந்த விசித்திரமும், உரத்த குரலும் இங்கே கைகோத்துத் துள்ளவில்லை. இவையெல்லாம் சேர்ந்த ஒன்றே கவிதை என்று பழகிய காதுக்கு, இந்தப் பாடல் மொட்டையாகத் தோன்றுகிறது.

ஆனாலும், இப்படிச் சாதாரணமான சொற்களில், அடக்கமாக நடக்கும் கவிதையும் உண்டு.

'பத்துப் பன்னிரண்டு -- தென்னைமரம்
பக்கத்திலே வேணும்.
முத்துச் சுடர் போலே -- நிலாவொளி
முன்பு வர வேணும்
கத்தும் குயிலோசை -- சற்றே வந்து
காதிற்பட வேணும்'

என்று பாரதியார் பாடவில்லையா? இங்கே 'முத்துச் சுடர் போலே' என்ற உவமை ஒன்றைத் தவிர, வேறு என்ன அலங்காரம் இருக்கிறது ?

'கேணி அருகினிலே-தென்னைமரக் கீற்றும் இளநீரும்'

என்று அவர் பாடுகிறாரே, இங்கே நகையோ பொன்னாடையோ இல்லாமல் கவிதை மகள் வரவில்லையா ?

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'

'உன்னை மறந்திடுவேனா, மறந்தறியேன்,
மறந்தால் உயிர் விடுவேன், கணந்தரியேன்,
உன் ஆணை இது'

என்றெல்லாம் வள்ளலார் பேசும்போது, எளிய சொற்கள், அணிகள் ஏதும் இல்லாமல், நெஞ்சைத் தொடவில்லையா ?

---

* கிறிஸ்துவ வேதப்படி.

இப்படித்தான், எளிய ஆங்கிலத்தில் அமெரிக்கக் கவிஞன் ராபர்ட் ஃப்ராஸ்ட் (Robert Frost - புகைப்படம்) என்பவன் பாடுகிறான். அவன் படைத்த ஒரு பாட்டின் மொழிபெயர்ப்பை மேலே பார்த்தோம். மனித உள்ளத்தின் அடி ஆழத்தில், தெரிந்தும் தெரியாமலும் மங்கலாக நிழலாடி, வெளி உலகெங்கும் எப்படியோ பரந்து ஊடுருவி நிற்கும் நுட்பமான நிலைகளைப் பற்றித் தணிந்த குரலில் பேசுவது அவனுடைய முறை.

ஒரு நாள், மாலை நேரத்தில் கவிஞன் நடந்து போகிறான். பனிக் காலம். மொட்டை மரம், நச்சு மரம். அதன் மேலிருந்து — அதற்கு வேறு இடம் இல்லையா? —காக்கை ஒன்று, சிறகை அடித்து நடுக்கும் குளிரில் தத்தளிக்கும். அது வேறென்ன செய்யும்? தன்மேல் படர்ந்த பனியைக் கவிஞன் மேல் உதிர்த்தது. மேலே பார்த்தான். எட்டி மரம், பனி, தாங்காத பனி, தனியே ஒரு காக்கை, இதனுடைய நிரத்தைப் பார்த்தாயா? அலட்சியமாகச் சிறகடித்து, பனியை ஒதுக்கி விட்டு நிற்கிறதே, வரும் இரவை, இருளைப் பற்றிக் கவலைப்படாமல்! மனிதன் 'ஐயோ! நான் விறைவிட்டதே' என்று தனக்குத் தானே நச்சு மரம் ஒன்றைப் படைத்து, அதில் ஏறி, தன்னைக் கழுவேற்றிக் கொள்ளுகிறானே! இப்படி எண்ணும் கவிஞன், இத்தனையையும் நேரடியாகச் சொல்லாமல் — சொன்னால் கவிதை ஏது? — சொல்லுகிறான்:

'எட்டி மரத்தின் மேல் ஒரு காக்கை
ஏற்றியது என்மேல் பனிப் புழுதி:
வெட்டி என்றெண்ணிய நாளினில் ஓர்துளி
எஞ்சியது, மனம் விஞ்சியது'

இன்னொரு நாள், மேற்கு வானப் பொன்னைத் தேடிக் கொண்டு செல்லுகிறான் கவிஞன். அது பனிக் காலம். எங்கும் பனியின் வெண் மூட்டம். மேற்கே,

'மேற்கே தங்கத் தட்டுப் பாதி. காற்றின் மூச்சு குளிரிலே செத்தது.
பனிவெளி வெண்மையில் காலைத் தேய்த்து விட்டை நோக்கி
விரைந்தேன். மேலே
குருவி ஒன்றிறங்கிக் குந்தியதைப் போல் இருந்தது.....'

அது பிரமை. பனிக் கொடுமையில் குருவி எதுவும் தலை காட்டாது, அமெரிக்காவில். ஆனாலும், குருவிகள், பரவசத்தைப் பாட்டாகப் படைக்கும் குருவிகள், வழக்கமாக உள்ள இடம் என்ற நினைவிலே எழுந்த பிரமை. கவிஞனுடைய சிந்தை, பறவைகள் கோலாகலம் கூட்டு கின்ற கோடைக் காலத்துக்குச் செல்கிறது.

'இங்கே, கோடையில் வருவேன்.
வந்தால் நின்றுதான் போவேன்.
நின்று முகத்தை உயர்த்துவேன்
மேலே, மரத்தில்
தெய்வத் தனிவரம் படைத்த ஓர்
குருவி
பாடும், தேனும், அருவியாய்.
இது கோடையில். இன்று
எப்படி?

'இன்றோ
குருவி எதுவும் கூவவில்லை.
மரத்தில் ஒரே ஒரு இலை தொங்கியது.
சுற்றி வந்தேன், வந்தேன். கண்டது
ஒற்றை இலைதான். அவ்வளவேதான்'

கவிஞன் சுற்றிலும் பார்க்கிறான்.

'மேட்டிலே நின்றேன். வசமான
இடந்தான்,
பார்த்தேன். மங்கிய பசும்பொன்னுக்கு
மெருகிடும் கணக்கில், படிகக்குளிர்இது
பனியைக் கட்டி ஒளியாய்ப் படுத்தது.

மேலே, நீல வானக் குறுக்கிலே
தெற்குவடக்காய், மேகமா,புகையா,
ஏதோ இறுக்கிக் கிடந்தது. எந்தத்
தூரிகைஇழுத்த கோணலோ? அதனைத்
துளைத்து முளைத்தது ஒரு சிறு தாரகை



கவிஞனுக்குப் பொன் கிடைத்து விட்டது. மேற்கே இல்லாவிட்டால் என்ன, வானத்து உச்சியிலே கிட்டிவிட்டது. அந்த நிறைவு தான் எவ்வளவு அமைதியாக வடிவாகிறது! மலைகளின் நடுவிலே உள்ள மடுவின் நீல நிச்சலத்துள்ளே, உருவிச் செல்லும் ஒளிக்கதிர் போல அல்லவா, இந்தத் தாரகை கவிஞன் நெஞ்சில் ஆழ்கிறது! இங்கே துள்ளல் இல்லை, வெறி இல்லை, பகட்டு எதுவும் இல்லை; நிறைவின் மோனத்தருகே, அந்த அகண்டக் கரையின் ஓரத்தில், மெல்லச் சென்று, சொல் தன்னை மறக்கிறது.

இந்தக் கவிஞன் சொன்னான்: 'கவிதை என்பது ஆனந்தத்தில் தோன்றி ஞானத்தில் நிறைவு பெறுகிறது.' கவிதைக்குப் பொருளாக மகிழ்ச்சி இருக்க வேண்டும் என்பது இதன் பொருளன்று. சோகமோ, கவலையோ, ஏமாற்றமோ, களிப்போ, எழுச்சியோ, இவை யாவும் கலந்த கலவையோ, எதுவாக இருந்தாலும், அதைச் சொல்லில் வடிக்கக் கவிஞன் முற்படும்போது, ஆனந்தம் பிறக்கிறது, பிறக்க வேண்டும். அந்த ஆனந்தத்தின் முதல் வீச்சுத்தான், ஒரு பாடலின் முதற் சொற்களாக, முதற் கற்பனையாக முகிழ்க்கும். இந்த ஆனந்தம் பாடல் முழுவதும் தோய்ந்து நிற்க வேண்டும். இதன் வேகத்தில்தான் பாட்டு, ஞானம் என்ற முடிவை நோக்கிச் செல்கிறது. இந்த வேகத்தில், கடைசி வரையில் கவிஞன் தோய்ந்து செல்லவில்லை என்றால், அவன் ஒன்றையும் படைக்க முடியாது. எழுதுவான், அது கவிதையாகாது.

அழகுப் பொன்னைத் தேடிச் சென்ற இந்தக் கவிஞன், மனித வாழ்க்கையை ஒதுக்க வில்லை. வாழ்வின் நுட்பமான நிலைகள் எத்தனை எத்தனையோ அவன் பாடல்களில் வடிவாகின்றன. மனிதனுக்குப் பொறுப்புக்கள் உண்டு, அவற்றிலிருந்து அழகோ, மரண பயமோ, அவனைத் திருப்பிவிட முடியாது என்ற ஓர் உறுதியைச் சொல்கிறான் ஒரு பாட்டில். இந்தப் பாடல் நம் ஜவாஹர்லால் நேருவுக்குப் பிடித்தமான பாடல். அந்திப் பொழுதில், அடர்ந்த தோப்பின் விளிம்பில் கவிஞன் நிற்கிறான். வரிசை வரிசையாய், தூண்களைப் போல் நிமிரும் மரங்களின் ஊடே இருள் பொங்குகிறது. தோப்பின் அழகும், ஆழமும் அழைக்கின்றன. ஆனாலும்,

'சோலை இருட்டினில் ஆழ்ந்தது -- அழகு
சூழ அழைத்தது, என்னினும்
மேலை கொடுத்திட்ட வாக்கினைக் -- காக்க
வேண்டும்; படுத்தே உறங்கு முன்
போக நான் வேண்டும் நெடுந்தொலை -- போக
வேண்டும், படுத்து நான் தூங்குமுன்
போகவே வேண்டும் நெடுந் தொலை -- போகப்
போகவே வேண்டும் நெடுந் தொலை.'

அழகுப் பொன்னைத் தேடிச் சென்ற ஃப்ராஸ்ட் என்ற இந்த அமெரிக்கக் கவிஞனது எளிய சொற்கள், எங்கேயோ மனித உள்ளத்தின் ஆழத்தில், நெடுந் தொலைவு நம்மை அழைத்துச் செல்கின்றன. இது கவிதையின் மாயம். ஆனால் இதை முழுவதும் பெற, ஆங்கிலம் அல்லவா பயில வேண்டியிருக்கிறது?

கடல் சாமந்தி



''கடல் சாமந்தி'' என்றதும் அது ஒரு மலர் என்று நமக்கு எண்ணத் தோன்றும். ஆனால் இது கடலில் வாழும் பிராணியாகும். ஆங்கிலத்தில் ''ஸீ அனிமோன்'' (Sea Anemone) என்று இதற்குப் பெயர். வெள்ளை, பச்சை, நீலம், சிவப்பு, ஆரஞ்சு, பழுப்பு நிறங்களில் சாமந்தி போன்ற உருவமைப்புடன் காணப்படுகிறது.

கடல் சாமந்தியின் உடற் பகுதி தூண் போன்று உருளை வடிவமாக இருக்கிறது. இந்தத் தண்டுப் பாகத்தைச் செங்குத்தாக மணலிலோ பாறையிலோ, அல்லது கடல் சிப்பிகள் மீதோ கெட்டியாக ஒட்ட வைத்துக் கொண்டு தன் வாழ்க்கையை நடத்துகிறது. தண்டு போன்ற உடலின் மேற் பகுதியில் கணக்கற்ற கைகள் போன்ற பற்றுக் கருவிகளை (Tentacles)க் கொண்டுள்ளது. இப் பற்றுக் கருவிகளை அங்கு மிங்கும் அலை, அலையாக ஆட்டி அசைப்பதைப் பார்க்கும்போது இது ஏதோ கடல் பூ என்றே மற்ற கடல் வாழ் சிறு பிராணிகள் எண்ணி ஏமாந்து இதற்கு இரையாகின்றன.

கடல் சாமந்தி தன் வாழ்நாள் முழுதும் ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்கும். தான் வாழும் இடத்தின் இயற்கையான சூழ்நிலை தன் வாழ்வுக்குச் சாதகமாக இல்லை என்று அறிந்தால் மட்டுமே கடல் சாமந்தி தன் இருப்பிடத்திலிருந்து தன்னைப் பெயர்த்துக் கஷ்டப்பட்டு மிக மிக மெதுவாக ஊர்ந்து சென்று தனக்கு விருப்பமான வேறு ஓர் இடத்தில் தன் வாழ்க்கையைத் தொடங்குறது. அதிர்ஷ்டவசமாக ஒருசில கடற்சாமந்திகள் நத்தை ஓட்டின் மீது தங்களைப் பதித்துக் கொள்ளும். இவை நத்தை செல்லும் இடங்களுக்கெல்லாம் அதன் மீது சவாரி செய்து செல்கின்றன.

பற்றுக் கருவிகளில் நூற்றுக் கணக்கான கொட்டு அணுக்கள் உள்ளன. நம் கண்களால் எளிதில் பார்க்க இயலாத இக் கொட்டணுக்களில் சிறிய முள் போன்ற பகுதி உண்டு. அப்பகுதியில் நச்சுச் சுரப்பிகள் உள்ளன. இந்த நச்சு முள் மூலம், தன் பற்றுக் கருவிகளில் அகப்பட்ட சிறிய கடல் பிராணிகளைத் தப்பிச் செல்லாதவாறு செயலற்றுப் போகச் செய்து கொன்று, பின்பு உணவாக உட்கொள்கிறது.

மற்றக் கடல் வாழ் பிராணிகளுக்குக் கடல் சாமந்திகள் சாப்பிடத் தகுந்த உணவாக ஆவதில்லை.

மனிதனின் கை விரல்கள் கடற் சாமந்தியின் பற்றுக் கருவிகளில் பட்ட மாத்திரத்தில் மாயமோ மந்திரமோ என்று அதிசயிக்கும்படி இமைக்கும் நேரத்தில் அது தன்னைச் சுருக்கிக் கொண்டு மண்ணோடு மண்ணாகப் புதைந்து தன்னை மறைத்துக்கொள்ளும்.

பாறையில் ஒட்டியிருக்கும் கடல் சாமந்தியை அந்த இடத்திலிருந்து காயப்படுத்தாமல் எடுக்க முடியாது. அவ்வளவு கெட்டியாகத் தன்னைப் பாறையின் மீது ஒட்ட வைத்துக் கொள்ளுகிறது. உடல் துண்டானாலும் பிடி தளருவதில்லை!

அழகிய சாமந்தி மலர் காய்ந்தவுடன் உதிர்ந்து உருத் தெரியாமல் மறைந்து போய் விடுவதுபோல், எலும்புகளோ வேறெந்த கடின உறுப்புகளோ தன் உடலில் கொண்டிராத கடல் சாமந்தியும் இறந்தவுடன் கடல் நீரில் அப்படியே கரைந்து உருத் தெரியாமல் போய்விடுகிறது.

-அந்தோனி பேசில்

'நான் எப்போதுமே காலைச் சிற்றுண் டியில் கால்ஷி புசிக்கிறேன்.'



திகைக்காதீர்கள், கால்ஷி என்றால கால்ஷியம! கூடவே அவன் தாமிரம், பொடாஷியம், மாங்கனீஸ் மற்றும் அயோடினும் உண்கிறான். உண்மையில் அவன் காலைச் சிற்றுண்டியில் 8 முக்கியமான மினரல்களையும் !! அத்தியாவசியமான விடமின்களையும் உட்கொள்ளுகிறான். ஆம்; இவை அனைத்துமே அவனுக்கு ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரையில் கிடைத்துவிடுகின்றன !

நல்ல ஆரோக்கியம், ஆற்றல் மற்றும் சீரான உடல் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா விடமின்களும் கனிஜங்களும் விம்க்ரானில் அடங்கியுள்ளன. எடுத்துக் காட்டாக, எலும்புகள் உறுதியுடன் வளர கால்ஷியம் உதவுகிறது. விம்க்ரானிலுள்ள மற்ற விடமின்களும் மினரல்களும் சீரான இரத்த அமைப்புக்கு உதவுகின்றன; பசியைத் தூண்டுகின்றன; நோய்களை எதிர்க்கும் ஆற்றலை உடலுக்குத் தருகின்றன; உற்சாகத்தையும் சக்தியையும் பெருக்குகின்றன.

விம்க்ரான்®

மல்டிபின் விடமின்—
மினரல் டேப்லெட்டுகள்

இப்போது
உட்ட
வடிவில்



நாள் முழுவதும் உங்களை
சக்தியுடன் வைத்திருக்க
ஒரேஒரு விம்க்ரான்
மாத்திரை போதுமானது.

SQUIBB® SARABHAI CHEMICALS

Shilpi VIM 39A/70 Tam



போராட்டங்கள்

26. வறண்ட குளம்

இரவில் 'பாரதமணி' காரியாலயத்தில் முரளி வெகு நேரமாகச் சாமிநாதனுக்காகக் காத்திருந்தான். இந்தியாவின் எல்லையில் சீனப்படை தாக்குவதைப் பற்றிய பரபரப்பான செய்தி டெலிபிரிண்டரில் வந்து கொண்டிருந்தது. பரபரப்பூட்டும் செய்திகளில் கவலையுடன் மூழ்கியிருந்த முரளி, சுவர்க் கடிகாரத்தில் மணி பத்தடித்ததைக் கேட்டுத் திடுக்கிட்டான். சாமிநாதன் இன்னும் வந்து சேராதது வியப்பைக் கொடுத்தது. மாலையில் முரளியைக் காணச் சாரதா வந்திருந்தாள். அவள் வீட்டுக்குப் புறப்படும்போது மணி எட்டாகிவிட்டதால், சாமிநாதனை அவளுடன் துணைக்கு அனுப்பி வைத்தான். முரளியின் காரை ஓட்டிச் சென்ற சாமிநாதன் மணி பத்தாகியும் இன்னும் திரும்பவில்லை. சாரதாவை ஃபோனில் கூப்பிட்டு விசாரித்தான் முரளி.

''என்னை வீட்டில் விட்டு விட்டு உடனே அவர் போய் விட்டாரே. எங்கேயாவது வாயாடிக் கொண்டிருப்பார்!'' என்றாள் சாரதா.

''அவன் கொஞ்சம் வாயாடிதான்'' என்று ஆமோதித்தான் முரளி.

''கொஞ்சமா? பொல்லாத வாயாடி.''

''ஏன்? உன்னிடம் ஏதாவது குறும்பாகப் பேசினானா?''

''இப்போது காரில் வரும்போது என்ன கேட்டார் தெரியுமா? 'இரண்டு துருவங்கள் சேரும் அதிசயம் நம் ஊரில்தான் நிகழ்கிறது' என்றார். அந்தத் துருவங்கள் நாம்தானாம்.''

''அப்புறம்?''

''நீங்கள் தனிமையாக இருப்பதால்தான் பிடிவாத குணம் உள்ளவராயிருக்கிறீர்களாம். ஒரு துணை இருந்துவிட்டால் நீங்கள் திருந்த முடியுமாம்.''

''ஓஹோ...! அப்படி ஒரு துணையையும் எனக்கு அவனே தேடிவிட்டானாக்கும்?''

''ஓ...! என்னைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்! உங்களைத் தட்டிக் கொட்டித் திருத்த என்னால்தான் முடியுமாம்!'' என்று கலகலவென்று சாரதா சிரிக்கும் ஒலி ஃபோனில் கேட்டது. முரளி பதில் சொல்லாமல் இருந்தான்.

''எப்படி உங்கள் நிருபருடைய திறமை?'' என்று கேட்டு விட்டு மீண்டும் சிரித்தாள் சாரதா. முரளி நீண்ட பெருமூச்சு விட்டான்.

''நீ என்ன சொன்னாய்?'' — முரளி கேட்டான்.

''நிருபர் வேலையோடு இந்தத் தரகர் வேலை எத்தனை நாட்களாகச் செய்கிறீர்



என்று கேட்டேன். அதற்குப் பிறகு தான் வாயைப் பொத்திக் கொண்டிருந்தார்.... ஆமாம், உங்களுக்குத் துணை எப்போது தேடப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள் சாரதா.

''நான் தேடிக் கொண்டேனே!''

''எப்போது...? யார்...? என்னிடம் நீங்கள் சொல்லவே யில்லையே!''

''பாரதமணிதான்'' என்றான் முரளி. ஃபோனின் மறுபக்கத்தில் சாரதா சிரிப்பது கேட்டது. ஒரு நீண்ட பெருமூச்சுடன் ஃபோனைக் கீழே வைத்தான்.

அன்று மாலை சிவராமனைப் பற்றிய பேச்சு வந்தபோது சாரதாவிடம் தோன்றிய பரபரப்பையும் உற்சாகத்தையும் முரளி புரிந்து கொண்டான். சிவராமனைப் பற்றிய பேச்சு வந்துவிட்டால் சாரதாவிடம் ஏற்படும் மாறுதல்களை அவ்வப்போது முரளி கவனிக்கத் தவறவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன் பேராசிரியரிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவர் சொன்னது நினைவில் வந்தது.

''எங்கே போய்த் தொலைந்தானோ இந்தச் சிவராமன். சீக்கிரமாக வந்தால் சாரதாவை அவன் கையில் ஒப்படைத்து விட்டு நான் நிம்மதியாக இருப்பேன்'' என்றார் பேராசிரியர் கமலசாமி.

''ஏன்? சாரதா இப்போது உங்களுக்குப் பாரமா யிருக்கிறாளா?'' என்று கேட்டான் முரளி, வியப்புடன்.

''நோ, நோ...அவளையே நினைத்து இளைத்துக் கொண்டே வருகிறாள். கட்சி வேலை என்று அடிக்கடி வெளியே போய் வருகிறாள். அவளுக்கு இந்த வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். ஒருவேளை என்னையே வெறுக்கிறாளோ என்னவோ?'' என்றார் கமலசாமி வருத்தத்துடன்.

'' அவளால் உங்களை வெறுக்க முடியுமா?''

''பெண்களை யார் புரிந்துகொள்ள முடியும்? என்னுடைய நடத்தை அவளுக்கு வெறுப்பைக் கொடுத்திருக்கலாம். இந்த வீட்டில் அவள் உற்சாகமில்லாமல் இருப்பதை என்னால் பொறுக்க முடியவில்லை. தந்தை என்கிற மரியாதையைத் தான் அவளுடைய பேச்சிலும் நடத்தையிலும் காண்கிறேனே தவிர, உள்ளார்ந்த



இந்தியாவின்
உன்னத
சோப்புகளைத்
தயாரிக்கும்

டாடா

இப்போது
வழங்குவது



மலபார் சந்தன சோப்

மேனியழகை சோபிக்கச் செய்யும் பாரம்பரியமான சோப்

நீங்கள் மலபார் சந்தன சோப் உபயோகித்து நீராடுங்கள். இதன் மென்மையான தொட்டுணர்ச்சியால் உங்கள் சருமம் புத்துணர்வு பெற்றுக் கிளுகிளுக்கும். உங்கள் மேனி மாசு மறுவற்ற அழகு பெற்று மினுமினுக்கும்; ஓர் இன்ப உணர்ச்சி பொங்கி வரும். மலபார் சந்தன சோப், தூய்மையான சந்தன எண்ணெயிலிருந்து தயாரிக்கப் படுகிறது. இதை உபயோகித்தால், உங்கள் சருமம் இயற்கை எழிலுடன் ஒளி வீசும். இதன் மென்மையான நறுமணமோ மணிக்கணக்கிலே நீடித்து நிலைக்கும்.

டாடா தயாரிப்பு



Bensons-4301 TM

பாசமோ, பரிவோ தென்படவேயில்லை.''

பேராசிரியர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு முரளியின் பக்கம் திரும்பித் திடீரென்று கேட்டார்.

''நீ எவ்வளவு காலம்தான் இப்படித் தனியாக இருக்கப் போகிறாய்?''

''நான் தனியாக இல்லையே. துணைக்குப் 'பாரதமணி' இருக்கிறது. நீங்கள் இருக்கிறீர்கள்'' என்று கூறியபோது, முரளியின் இதழ்களில் வறட்டுப் புன்னகை தோன்றியது.

சாரதாவினால் ஏற்பட்ட ஏமாற்றத்தின் அதிர்ச்சியிலிருந்து முரளி விடுபட்டு விட்டான் என்றாலும், உள்ளத்தில் விழுந்த வடுவை யாராவது இப்படிச் சில சமயங்களில் குத்திக் கிளறி விடுவதுண்டு. அந்த வேதனையை ஒரு பெருமூச்சினால் அடக்கிவிடப் பழகிக் கொண்டான்.

சாரதாவைப் பற்றிய நினைவில் ஆழ்ந்திருந்தபோது போன் மணி அடித்தது. ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு டாக்டர் பேசினார்.

சாமிநாதனை யாரோ வழிமறித்து, அடித்துப் போட்டு விட்டதாகவும், காரையும் அடித்து நொறுக்கிவிட்டதாகவும் சாமிநாதனுக்கு இடது கையில் எலும்பு முறிந்திருப்பதாகவும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருப்பதாகவும் உயிருக்கு ஆபத்தில்லை என்றும் தகவல் கொடுத்தார் டாக்டர்.

பத்து நிமிஷங்களுக்குள் ஆஸ்பத்திரியை அடைந்தான், முரளி. ஒரு தனியறையில் சாமிநாதன் படுத்திருந்தான். மயக்கம் தெளிந்திருந்தது. தலையிலும் கையிலும் கட்டுப் போடப்பட்டிருந்தது. முரளியைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது. முரளி படுக்கையின் விளிம்பில் அமர்ந்தான்.

''ஒன்றும் பயப்படாதே; டாக்டர் ஆபத்தில்லை என்று சொல்லி விட்டார்'' என்றான் முரளி.

''என்னைப் பற்றிப் பயமில்லை, சார்! உங்களைப் பற்றித்தான்...'' என்றான் சாமிநாதன்.

''நீ என்ன சொல்கிறாய்?''

''இந்த அடி உங்கள் மீது விழுந்திருக்க வேண்டியது. ஆள் மாறாட்டம் ஆகிவிட்டது'' என்றான் சாமிநாதன், புன்னகையுடன். முரளி திடுக்கிட்டான்.

''ஏன்...என்ன நடந்தது...?'' என்று பதற்றத்துடன் கேட்டான்.

''சாரதா அம்மாளை வீட்டில் விட்டு விட்டுத் திரும்பும்போது நான்குபேர், மோட்டார் சைக்கிள்களில் வந்து, என்னை ஓர் இருட்டான சந்தில் மடக்கி விட்டார்கள். காரை நான் நிறுத்தியதும் நான்கு பேரும் என்னை நோக்கி ஓடி வந்தார்கள். ஒவ்வொருவனும் கையில் ஒரு சிறு தடி வைத்திருந்தான். காரின் கதவைத் திறந்து ஒருவன் என்னைக் கீழே இழுத்துப் போட்டு அடித்தான். மற்றவர்களும் சேர்ந்து என்னைத் தாக்கினார்கள். இரண்டு அடிகளை இடது கையால் தாங்கினேன். மண்டையில் அடி விழுந்ததும் மயக்கம் வந்தது. செத்துப் போய்விட்டேன் என்று நினைத்து அவர்கள் போயிருக்க வேண்டும்'' என்றான் சாமிநாதன்.

''மோட்டார் சைக்கிள்களின் நம்பர்கள் தெரியுமா?'' — பரபரப்புடன் கேட்டான், முரளி.

''தெரியாது. சந்தில் வெளிச்சம் போதாது. ஆட்களைக் கூட அடையாளம் காட்ட முடியாது.''

சாமிநாதனைக் கனிவோடு பார்த்தான் முரளி. தனக்கு வரவிருந்த ஆபத்தைச் சாமிநாதன் தாங்கிக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வு, முரளியின் கண்களைக் கலங்க வைத்து விட்டது.

''சார், நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இப்போது எப்படி வந்தீர்கள்?'' என்று கேட்டான் சாமிநாதன்.

''உன்னுடைய ஸ்கூட்டரைத்தான் ஆபீஸில் நிறுத்தி வைத்திருந்தாயே; அதில்தான் வந்தேன்.''

''துணை இல்லாமல் தனியாகப் போகாதீர்கள். உங்கள் எழுத்திலே உள்ள வீரம், கேலிச் சித்திரங்களிலே உள்ள கிண்டல் எல்லாம் உங்களுக்குப் பயங்கர விரோதிகளைத் தேடித் தந்திருக்கின்றன'' என்று கூறினான் சாமிநாதன். ''அந்த இருட்டில் என்னால் அவர்களை

வெட்டிப் போதுக்குப் பத்தொன்பது ஆண்டுகள்!



இந்தியாவைப் போல் வளர்ச்சியுற்று வரும் ஓர் ஆசிய நாட்டில் மனிதனுக்குச் சராசரி வாழ்நாள் ஐம்பது ஆண்டுகள்.

இதில் பதினேழு வருஷங்களை அவன் தூங்கிக் கழிக்கிறான். மனிதனுக்கு அப்படித் தூங்கி, ஓய்வு எடுத்துப் புத்துணர்ச்சி பெற வேண்டியிருக்கிறது. பகல்களைப் பாருங்கள்; அவை தூங்குவதே இல்லை!

மீதமுள்ள 33 ஆண்டுகளில் மனிதனுக்குச் சாப்பாட்டு நேரம் இரண்டு ஆண்டுகள். டன் கணக்கில் அவன் உணவை அருந்தியிருப்பான் இந்த இரண்டு ஆண்டுகளுக்குள். கல்விக்காக அவன் செலவிடும் காலம் மூன்று வருஷங்கள். வேலை செய்வதில் கழியும் ஆண்டுகள் ஒன்பது. மீதமுள்ள பத்தொன்பது வருஷங்களை மனிதன் தன் இஷ்டம் போல் செலவழிக்கலாம். சினிமா, நாடகம், பார்க், கடற்கரை, கிளப், நடனம், அரட்டை என்று இப்படி எத்தனையோ இல்லையா? வெட்டிப் போதாகவும் கழிக்கலாம்தானே?

இந்தப் பத்தொன்பது ஆண்டுகளை வீணாக்காமல் நிரம்பப் பயன்படுத்துபவனே சராசரி மனிதனிலிருந்து வேறுபட்டுத் தனிச் சிறப்பு பெறுகிறான்.

- டெய்த் நியூஸ்

எப்படி அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லையோ அதே போல் அவர்களும் என்னைச் சரியாகப் பார்த்திருக்க முடியாது. உங்களுடைய காரை மட்டும் கண்டு கொண்டார்கள். அதை ஓட்டுவது நீங்கள்தான் என்று முடிவு கட்டினார்கள். தாக்கிவிட்டார்கள். அடித்தது யார் என்று நம்மால் நிரூபிக்க முடியாது போனாலும் யூகிக்கக்கூடவா முடியாது?''

'பாரதமணி' காரியாலயத்துக்கு முரளி திரும்பி வந்தபோது நள்ளிரவாகி விட்டது. உதவி ஆசிரியர்கள் காலையில் வெளியாக வேண்டிய பதிப்புக்கான வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். சாமிநாதன் அடிபட்ட செய்தியை உதவி ஆசிரியர்களிடம் முரளி கூறியபோது, அனைவரும் திடுக்கிட்டனர். அந்தச் செய்தியை விவரமாகப் பத்திரிகையில் சேர்க்கும்படி சொல்லிவிட்டு வீட்டுக்குச் சென்றான் முரளி. உள்ளமும் உடலும் தெம்பிழந்த நிலையில் படுக்கையில் விழுந்தான். உறக்கம் வரவில்லை. வேதனை நிறைந்த எண்ணங்கள் அழுந்திக் கொண்டிருந்தன. தனக்கு வர வேண்டிய ஆபத்துக்குச் சாமிநாதன் உள்ளாகி விட்டானே என்ற இரக்கந்தான் முரளியை மிகவும் வாட்டிக் கொண்டிருந்தது. சாமிநாதன்மீது முரளிக்குத் தனிப்பட்ட வாஞ்சையும் அக்கறையும் உண்டு. 'பாரத மணி'ப் பத்திரிகையில் நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் பணியாற்றும் ஒரே நபர் அவன்தான் என்பதை முரளி உணர்ந்திருந்தான்.

'பாரதமணி'க்கு எப்படி யெல்லாமோ ஆபத்து நெருங்குவதை உணர்ந்த முரளியின் மனம், நடுக்கமுற்றது. 'காலைக் குரல்' பணத்தைக் காட்டிப் 'பாரதமணி'யின் உதவி ஆசிரியர்களைப் பறித்துக் கொள்ள முயன்று கொண்டிருந்தது. அதற்குக்கூட முரளி பயப்படவில்லை. ஆனால் ஒரு கட்சியின் சித்தாந்தங்களை எதிர்க்கிறான் என்பதற்காக ஒரு தனிமனிதனை இருளில் நாலு பேர் சூழ்ந்து தாக்கும் கேவலமான நடவடிக்கைதான் முரளியை அதிர வைத்து விட்டது. 'பாரதமணி'யின் விற்பனையில் முன்னேற்றம் காணுவதில் மிகுந்த அக்கறை கொண்டு அதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் போது, இப்படிப் பலவிதத் தாக்குதல்களுக்கு உள்ளாக நேரிடவே, முரளி, நம்பிக்கை குலைந்து, மனம் குழம்பினான். மிகுந்த மன வேதனைக்குள்ளாகி விட்டவன், சிந்திக்கக்கூடத் தெம்பிழந்து இரவு வெகுநேரத்துக்குப் பிறகு உறங்கி விட்டான்.

காலையில் அவன் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது மணி பத்தாகி விட்டது! அவனுள் ஏற்பட்டுவிட்ட மனச் சோர்வு உடலையும் பற்றிக் கொண்டதால் அவ்வளவு நேரம் தூங்கி விட்டான். அப்படி ஒரு நெடுந் தூக்கம் அவனுக்குத் தேவைப்பட்டது.

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒருநாள் முரளி, காலையில் 'பாரதமணி'க் காரியாலயத்துக்குச் சென்ற போது பேரதிர்ச்சிக்குள்ளானான். மூன்று உதவி ஆசிரியர்களும் அச்சுத் திருத்துபவர்கள் மூன்று பேரும் டைப்பிஸ்ட் பிரேமாவும் ராஜிநாமாக் கடிதம் எழுதி அனுப்பி விட்டுக் காரியாலயத்துக்கு வராமல் இருந்து விட்டார்கள். நீர் வற்றிய குளத்திலிருந்து பறவைகள் ஓடிவிடுவதைப் போல் ஓடி விட்டார்கள். முரளி, செய்வதறியாது திகைத்தான். ஒருவித நடுக்கம் உடல் முழுதும் பரவியது. சோர்ந்து போய் நாற்காலியில் அமர்ந்து விட்டான். அப்போது, காலை பத்து மணி இருக்கும். 'பாரதமணி' காரியாலயத்தில் மௌனம் நிலவியது. முரளிக்குத் தன்னுடைய அறிவும், சக்தியும் தன்னை விட்டுக் கழன்று விட்டது போன்ற வெறுமை தோன்றியது. விரக்தியுடன் நாற்காலியில் சாய்ந்து கிடந்தான். தலைக்கு மேலிருந்த காற்றாடி



செட்டிநாடு குமாரராஜா

எம். ஏ. எம். முத்தைய செட்டியார் B. A.

1929 செப்டம்பர் 6ஆம் நாள் - 1970 ஜனவரி 24ஆம் நாள்

சென்னை ஷெரீப் (1957-58)
தென்னிந்தியத் தொழில் வணிக சங்கத் தலைவர் (1958 - 60)
புகழ்பெற்ற தொழிலதிபர் - வள்ளலார்

சென்ற ஆண்டு இதே நாளில் (24-1-70) எங்களை விட்டுப் பிரிந்து, ஆனால் என்றும் எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும் அப் பெருந்தகையாளரின் அன்பு நினைவிற்கு வணக்கம் செலுத்தும் வகையில் அன்னார் ஆற்றி வந்த நற்பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதென உறுதி பூணுகிறோம்.

பின்கண்ட நிறுவனங்களின் நிர்வாகத்தினரும் ஊழியர்களும் :

செட்டிநாடு கார்ப்பரேஷன் பிரைவேட் லிட்., சென்னை & சிலோன் ● மதுரை சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் பிரைவேட் லிட்., சென்னை மதுரை, பெங்களூர் விசாகப்பட்டினம், செகந்தராபாத் விஜயவாடா மற்றும் இதர கிளைகள் ● சௌத் இந்தியா கார்ப்பரேஷன் பிரைவேட் லிட்., கொச்சி & புதுக்கோட்டை ● லோட்டஸ் மில்ஸ் லிட்., சுந்தராபுரம், கோவை ● செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிட்., சென்னை & கரூர் ● சௌத் இந்தியா ஸ்ட்ரக்சரல் கார்ப்பரேஷன் லிட்., சென்னை & கிளைகள் ● சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (திருவாங்கூர்) பிரைவேட் லிட்., கொல்லம் ● ஸ்ரீ கருணாம்பிகை ஜின்னிங் பேக்டரி, அவிநாசி ● துபாரி குரூப் எஸ்டேட்ஸ், குடகு ● சேஷகிரி எஸ்டேட், குடகு ● மேபிளவர் எஸ்டேட், குடகு ● குண்டள்ளி எஸ்டேட், குடகு ● தொட்லகுண்டா எஸ்டேட், குடகு ● கொடகிபைல் எஸ்டேட், மைசூர்.

சுழன்று கொண்டிருந்தும் அவனுடைய உடல் வியர்வைக் கடலில் மிதந்தது. சற்று நேரத்துக்குப் பிறகு எழுந்து டெலிபிரிண்டர் இருக்கும் அறைக்கு வந்தான். அந்த இயந்திரம் அமைதியாக இருந்தது. பிறகு உதவி ஆசிரியர்களின் அறைக்குள் நுழைந்தான். அறை வெறிச்சென்றிருந்தது. புரிந்து கொள்ள முடியாத ஒருவித பயம், அவனுடைய நெஞ்சில் படர்ந்து, வயிற்றுக்குள் புகுந்து கலக்குவது போல் இருந்தது. ஒரு கணம் அந்த அறை வாசலில் கண்களை மூடியவாறு நின்றான். எங்கும் அவனைச் சுற்றிச் சூனியம் நிரம்பி விட்டதாகப் பிரமை தட்டியது. சோர்வுடன் நடந்து தன்னுடைய அறைக்குச் சென்றான். வராந்தாவில் நின்று கொண்டிருந்த ஆபீஸ் பணியாளிடம் ஒரு கப் தேநீர் வாங்கி வரும்படி கூறிவிட்டு அறைக்குள் புகுந்து நாற்காலியில் சாய்ந்தான்.

நாளை எப்படிப் 'பாரதமணி'ப் பத்திரிகையை வெளியிடுவது? மக்களின் மனத்தில் மதிப்பைப் பெற்றுவிட்ட ஒரு தரம் வாய்ந்த பத்திரிகை இப்படித் திடீரென்று ஓய்ந்துவிட முடியுமா? எவ்வளவு கேவலமான சதி இது....

இப்படியே எத்தனை காலந்தான் போராடிக் கொண்டிருக்க முடியும்?.... பத்திரிகையையே நிறுத்திவிட்டால்....? இந்த மக்களுக்கு இப்படி ஒரு தரமுள்ள பத்திரிகை எதற்கு? சினிமாக்களும், 'காலைக் குரலு'மே இவர்களுக்கு வழி காட்டட்டும்....

முரளியின் மனம் சலித்து விட்டது. 'பாரதமணி'க் காரியாலயத்தின் வாசல் கதவைப் பூட்டிவிட்டுப் போய்விட வேண்டும் என்னும் துடிப்பு அவனுள் தோன்றியது. கோபத்துடன் நாற்காலியிலிருந்து எழுந்தான்.

அப்போது பக்கத்து அறையில் டெலிபிரிண்டர் இயந்திரம் இயங்கும் ஓசை கேட்டது. முரளி திகைத்தான். வெறும் பிரமை என்று முதலில் நினைத்தான். உற்றுக் கேட்டான். டெலிபிரிண்டரின் ஒலி தெளிவாகக் கேட்டது.

பரபரப்புடன் அடுத்த அறைக்குள் நுழைந்தான். உள்ளே சாமிநாதன் டெலிபிரிண்டரை இயக்கிக் கொண்டிருந்தான். அவனுடைய தோளிலிருந்து தொங்கிய துணித் தொட்டிலில் இடது கை கிடந்தது. கைமுறிவுக்காகக் கட்டப்பட்டிருந்த கட்டு இன்னும் அவிழ்க்கப்படவில்லை. முரளியைக் கண்டதும் சாமிநாதன் விரைந்து அவன் பக்கத்தில் வந்தான்.



சந்தர்ப்பம் மிகச் சிறியது ; கண்டுபிடிப்பு மிகப் பெரியது !

☐ பைசா நகரத்தின் கோயில் விளக்கு அங்குமிங்கும் ஆடிக் கொண்டிருந்ததைக் கண்டான் சிறுவன் கலீலியோ. அதன் மூலம் 'பெண்டுல'த்தின் தத்துவத்தைக் கண்டுபிடித்து, நேரத்தைக் கணக்கிட வழி செய்து விட்டான் !

☐ இலத்தின் மொழி போதிப்பவராக இருந்த பேராசிரியர் பெனிடிக்டின் காதுகளில் 'கிளிக், கிளிக், டிக் டிக், டக் டக்' எனும் சத்தம் கேட்டதும் துள்ளிக் குதித்தெழுந்தார் ! இலத்தின் புத்தகங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, டைப்ரைட்டர் செய்யப் புகுந்தார். அதுவே ரெமிங்டன் டைப்ரைட்டராகப் பிரபலமடைந்தது !

☐ அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்த மாஸசூஸெட்ஸ் வீரன் ஒருவன் கவனத்தை ஒரு பறவை கவர்ந்தது. அப்பறவை, தன் அலகுகளினால் ஒரு நெல்லை உடைத்து அரிசியைப் பிரித்து உண்டதைக் கண்டான். அலகை முன்மாதிரியாகக் கொண்டு நெல் அரைக்கும் யந்திரத்தைக் கண்டுபிடித்து, பெரும் புரட்சி செய்து விட்டான் !

☐ கண்ணாடி முன் கத்தியால் முக க்ஷவரம் செய்து கொண்டிருந்தார் ஜில்லட். அபாயகரமானதாகவும், கஷ்டமாகவும் இருந்ததை உணர்ந்தார். வெகு சுலபமாக ஷேவிங் செய்ய வழிஉண்டா எனக் கண்ணாடிமுன் நின்றே யோசிக்கலானார் !... ஒரு நாள் கத்தியால் ஷேவிங் செய்து முடிக்குமுன்னரே புதிய கருவிக்கு வழி கண்டு விட்டார் ! ரேஸர் பிறந்து விட்டது !

☐ கானகத்தின் வழியே சென்ற ஒரு மனிதர் தாகம் மேலிட, ஒரு மரத்தை அணுகினார். அருந்த நீர் கிடைக்காமல், மரப் பிசினை வாயில் போட்டுக் கொண்டார். உமிழ்நீர் சுரந்து தாகம் தீர்ந்தது! அப்போதே அவரது பொருளாதாரப் பிரச்னைகளும் தீர்ந்துவிட்டன ! சுவைக்கும் பிசினை 'சூயிங்கம்' இப்படித்தான் கண்டுபிடித்தார் அம்மனிதர்.

☐ ஐந்நூறு வருடங்களுக்குமுன்பு - குழந்தைகள் மரப் பட்டைகளில் பெயர்களை எழுதி விளையாடிக் கொண்டிருந்தன. இதைக் கண்ட லாரன்ஸ் காஸ்டரின் அறிவு சுடர் விட்டது. தம்முடன் ஜான் குட்டன்பர்க்கையும் துணையாகக் கொண்டார். அச்சு முறை உலகில் பிறக்க வழி கண்டு விட்டார்.

--ஏ. சுவாமிநாதன்

'' ஆஸ்பத்திரியிலிருந்து போகச் சொல்லி விட்டார்களா?'' என்று முரளி கேட்டான்.

'' நானாக வந்து விட்டேன். இங்கே போன் செய்தேன். உதவி ஆசிரியர்கள் எல்லாரும் வரவில்லை என்று ஆபீஸ் பையன் சொன்னான். ராஜிநாமாவுக்கு என்ன காரணமாம் ?''

''இங்கு வேலை பார்க்க அவர்களுக்குப் பயமாயிருக்கிறதாம். உனக்கு நேர்ந்த கதி அவர்களுக்கும் நேரலாமாம்.

கடவுளிடம் ஒரு 'பிராக்ஸி'

"என் நாடகத்தைப் பார்க்க வாருங்கள்" என்று அழைத்தார் கிரிஷ் சந்திர போஸ். புகழ் பெற்ற அந்த நடிகரின் நாடகத்தைக் கண்டார் ராமகிருஷ்ணர். நாடகம் முடிந்ததும் புகழ்ச் சொற்களை எதிர்பார்த்த கிரிஷிடம் போனார். "அப்பனே, உன் ஆன்மா கோணலாகப் போச்சே!" என்றதும் கிரிஷுக்கு ஒரே கோபம். அவரை அவமதித்துத் திட்டி அனுப்பி விட்டார். ராமகிருஷ்ணரோ நடிகரை வாழ்த்திச் சென்றார். அடுத்த நாள் கிரிஷ் சென்று மன்னிப்புக் கேட்டார். ராமகிருஷ்ணரின் சீடராகி விட்டார். ஆனால் அவர் குடிப் பழக்கத்தை விடவில்லை. ராமகிருஷ்ணரும் அதை நிறுத்தச் சொல்லவில்லை. அதனாலேயே கொஞ்ச நாட்களில் கிரிஷ் அந்தப் பழக்கத்தை விட்டு விட்டார்.



"தியானத்திலும் பிரார்த்தனையிலும் என்னால் ஈடுபட முடியவில்லை. அதைவிடத் தற்கொலை செய்து கொள்வது எனக்குச் சுலபம்" என்றார் கிரிஷ்.

"அதிகம் வேண்டாம். சாப்பிடு முன் ஒருமுறை படுக்கப் போகு முன் ஒரு முறை பிரார்த்தனை செய், போதும். இது முடியாதா?" என்றார் ராமகிருஷ்ணர்.

"முடியாதே. ஒரு கணம் கூடக் கடவுளை நினைக்க முடியவில்லையே என்னால்" என்றார் கிரிஷ்.

"அப்படியானால் சரி. உனக்குப் பகவானைப் பார்க்க ஆவல். ஆனால் அதற்காக ஓர் அடிகூட எடுத்து வைக்க மாட்டாய் என்றால் என்னை உன் பிரதிநிதியாக வைத்துவிடு. உனக்காக நான் பிரார்த்தனை செய்கிறேன். ஆனால் ஒன்றை மறக்காதே. இன்று முதல் நீ ஆண்டவன் அருளில்தான் வாழ்கிறாய்" என்றார் ராமகிருஷ்ண முனிவர்.

-ரோமான் ரோலன் - நம்பி சீனிவாசன்

தங்களுடைய சொந்தப் பாதுகாப்பை முன்னிட்டுத்தான் ராஜிநாமா செய்கிறார்களாம்'' என்றான் முரளி.

''உண்மைக் காரணம் இதுவல்ல. 'காலைக் குரலி'ன் பணம்தான் இவர்களைப் போக வைத்திருக்கிறது. 'காலைக் குரலு'க்குப் போயிருப்பார்கள். இப்படி ஏதாவது நடக்குமென்று நான் எதிர் பார்த்ததுதான்'' என்றான், சாமிநாதன்.

''இதோ சாவி. வாசற் கதவைப் பூட்டிவிட்டு வா. நாமும் போய்விடுவோம்'' என்று கூறிக் கொண்டே இறவுகோலை சாமிநாதனிடம் நீட்டினான் முரளி. சாமிநாதன் தலையசைத்தான்.

''கதவைப் பூட்டவா ஆஸ்பத்திரியிலிருந்து இவ்வளவு அவசரமாக வந்தேன்? யார் வேண்டுமானாலும் போகட்டும், சார். நம்முடைய பத்திரிகை நிற்காது'' என்றான் சாமிநாதன்.

''நீயும் எத்தனை நாளைக்குத்தான் பொறுக்க முடியும்? இங்கே நீ இருப்பதால்தானே உனக்கு அடி விழுந்தது ?'' என்றான் முரளி, பச்சாத்தாபத்துடன்.

''சார்...! இந்த அற்பர்களுக்கெல்லாம் பயந்தா ஒரு லட்சியத்தைக் கைவிட வேண்டும்? என்னையும் பணத்துக்காக ராஜிநாமாச் செய்துவிட்டு ஓடும் அந்த அற்பர்களோடு சேர்த்து விட்டீர்களா சார்...?'' என்று கேட்டுவிட்டு முரளியைப் பரிதாபமாகப் பார்த்தான் சாமிநாதன்.

முரளியின் கண்கள் கலங்கிவிட்டன. மிகுந்த நன்றிப் பெருக்குடன் சாமிநாதனை உற்றுப் பார்த்தான். உணர்ச்சிப் பெருக்குடன் சாமிநாதனின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

''சார்! இரண்டு 'புரூப் ரீடர்கள்' மட்டும் கிடைத்தால் போதும். நாம் சமாளித்துக் கொள்ளலாம்'' என்றான் சாமிநாதன் நம்பிக்கையுடன்.

அவனே இரண்டு மணி நேரத்தில் இரண்டு நண்பர்களை அச்சுத் திருத்தம் பார்ப்பதற்காக அழைத்து வந்தும் விட்டான். முரளி, புதுத் தெம்புடன் காணப் பட்டான். இருப்பவர்களைக் கொண்டு சமாளித்து விடுவதாக அச்சுத் தொழிலாளிகள் உறுதி கூறினார்கள். வழக்கம்போல் 'பாரதமணி' மறு நாள் காலையில் வெளியாயிற்று. முரளியும், சாமிநாதனும் இரவும் பகலும் 'பாரதமணி' காரியாலயத்திலேயே தங்கி விட்டார்கள்.

எடிட்டிங், காப்பி ரீடிங், மேக்அப் எல்லாவற்றையும் அவர்களே கவனித்துக் கொண்டார்கள். சில சமயங்களில் அச்சுக் கோக்கும் வேலையில்கூட முரளி ஈடுபட்டான். ஐந்து நாட்களுக்கு இரவும் பகலும் ஓய்வின்றி உழைக்க வேண்டியிருந்தது. ஆறாவது நாள், மூன்று புது உதவி ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்தி விடவே, வேலைப் பளு சற்றுக் குறைந்தது. புதிய உதவி ஆசிரியர்களுக்கு அநுபவமில்லாததால், சாமிநாதனே முழுப் பொறுப்பையும் ஏற்றுப் பணியாற்றினான்.

ஆறு நாட்களுக்குப் பிறகுதான் முரளிக்குச் சற்று ஓய்வு கிடைத்தது. இரவு இரண்டு மணிக்குக் காரியாலயத்தை விட்டு வீட்டுக்குத் திரும்பினான். அன்று இரவு வெகு நேரம்வரை பலவித எண்ணங்கள் அவன் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தன. சாமிநாதனைப் பற்றிய நினைவு புத்துணர்ச்சியை ஊட்டியது.

காலையில் கதவு தட்டப்படும் ஒலி கேட்டு எழுந்த முரளி, வாசற் கதவைத் திறந்ததும் வியப்பினால் திகைத்து நின்றான்.

வாசலில், சாரதாவும் சிவராமனும் நின்று கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

பிரபுராம் தன்னுடைய அறையில் படுத்துக்கொண்டிருந்தான். வானொலியில் ஜனகணமன பாடிப் பத்துப் பதினைந்து நிமிடங்கள் ஆகியிருக்கும். சாதாரணமாகப் பத்து மணிக்குள்ளாகவே அவன் தூங்கி விடுவான். அவன் தந்தை உடம்பு சரியில்லாமல் படுத்திருந்ததால் சாப்பாடு, தூக்கம் எல்லாவற்றிலுமே காலதாமதமாயிற்று. அவன் தந்தை அடுத்த அறையில்தான் படுத்துக் கொண்டிருந்தார். தமது மனைவியிடம் அவர் கூறிக் கொண்டிருந்த ஒவ்வொரு வார்த்தையும் அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

மறுநாள் வக்கீலை அழைத்து ஓர் உயில் எழுத வேண்டும் என்றார்.

''ஏன் இப்படி யெல்லாம் பேசுகிறீர்கள்? உயில் எழுதும்படி இப்ப என்ன?'' — இது அம்மாவின் குரல்.

''உனக்குத் தெரியாது சங்கரி. எனக்கென்னவோ பயமா யிருக்கு. திரும்ப எழுந்து நடமாடுவேன்னு தோணல்லே....''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. இன்னும் ஒரு வாரத்திலே டென்னிஸ் மட்டையும் கையுமா அலையத்தான் போகிறீர்கள்.''

''இருந்தாலும் நல்ல நினைவோடு இருக்கையில் என் கடமையைச் செய்து விடுவது நல்லதில்லையா?''

''சரி; நாளைக்கு வக்கீலை வரவழைக்கிறேன்.''

இந்தப் பதிலுக்குப் பிறகு சில நிமிஷங்கள் அமைதி நிலவியது.

பிறகு யார் யாருக்கு என்னென்ன சேர வேண்டும் என்று ஒரு பட்டியலைச் சொன்னார். அவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த பிரபுராம் அசந்து போய்விட்டான்.

துளியும் ஓரவஞ்சனை இல்லாத ஒரு பாகப் பிரிவினை!

''என்ன நேர்மை! என்ன தாராளம்!'' என்று பிரபுராமின் உள்ளம் அவரைப் பாராட்டியது. உண்மையில் அப்படி ஓர் உயிலை அவர் எழுதி வைக்காமல் காலமாகி விட்டால் சொத்தை இவ்வளவு சுச்சிதமாகத் தங்களால் பங்கு போட்டுக் கொள்ள முடியுமா வென்று எண்ணிப் பார்த்தான்.

''சரிதானே?'' என்று அம்மாவை அப்பா கேட்பது காதில் விழுந்தது.

'' எனக்கு எதுவுமில்லையா?'' — அம்மா.

''உன் நகைகள்தான் உனக்கு. அதோடு உனக்கென்று தனியாகப் பணம் வைத்துக் கொள்ளும் அளவுக்கு நம் பிள்ளைகள் அவ்வளவு மோசமானவர்கள் அல்ல....''

''சும்மா கேட்டேன். எனக்கு எதுவும் வேண்டாம். நீங்க நல்லபடியா எழுந்து நடமாடினால் அதுவே போதும். இந்தப் பைத்தியக்கார யோசனை யெல்லாம் பண்ணாமல் தூங்குங்கோ...''

இரண்டு நிமிஷம் மௌனம் நிலவியது.

மீண்டும் அப்பாவின் குரல் கேட்டது. ''பிரபுவுக்கும் வனஜாவுக்கும் சீக்கிரமே கல்யாணம் செய்துவிடு. நான் இல்லேங்கற குறையே தெரியக் கூடாது! கல்யாணம் அவ்வளவு தடபுடலா நடக்கணும்!''

''எல்லாம் உங்க கண் முன்பே நடக்கும்!''

படுத்துக் கொண்டிருந்த பிரபுராமின் மனத் திரையில் வனஜா ஒரு முறை வந்து போனாள்.

''இன்னொரு விஷயம்...'' என்று அப்பா ஏதோ சொல்ல ஆரம்பித்தார்.

''என்ன?'' — சங்கரி.

''ஒருவேளை நான் திடீர்னு கண்ணை மூடிட்டால்...''

''அப்படி யெல்லாம் எதுவும் நடக்காது.''

''ஒருவேளை...''

''சரி, சொல்லுங்கள்!''

அவர் மிகவும் தயங்கி விட்டுக் கூறினார். அந்தக் கட்டிடமே இடிந்து பிரபுராமின் தலையில் விழுந்தாற் போலிருந்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

''ஏன்? ஏன்? ஏன் அப்படி?'' என்று கூச்சலிட வேண்டும் போலிருந்தது. மிகவும் சிரமப்பட்டு உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டான். சற்று முன்பு நன்றியாலும் விசுவாசத்தாலும்





ஹிப்பி!

ஜப்பானிய ஹிப்பிகள் டெலிபோனில் பேச ஆரம்பிக்கும் போது 'குட் - பை' என்று சொல்லிவிட்டு ஆரம்பிப்பார்கள். பேசி முடித்தவுடன் 'ஹலோ' என்று சொல்லிவிட்டு ரிசிவரை வைப்பார்கள்.

- ஏஷியா மாகஸின்
- கென்னி

குளிர்ந்திருந்த அவன் உடலும் உள்ளமும் இப்பொழுது தணலாய்க் கொதித்தன.

நினைக்க நினைக்க அவன் வேதனை அதிகமாயிற்றே தவிர, 'அதனாலென்ன' என்று ஒதுக்கித் தள்ள முடியவில்லை. அந்த அறைக்குள்ளேயே குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். பிறகு விடியும்வரை ஏதேதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

பிரபுராமுக்கு இப்பொழுது வயது இருபது. பதினைந்து வருஷங்களுக்கு முன்பு ஐந்து வயதுப் பாலகனாக இந்த வீட்டுக்குள் நுழைந்தான். அவன் பிறந்தது ஓரிடம்; புகுந்தது ஓரிடம்!

உறையூரில் வசித்து வந்த ரங்கநாதனின் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்த பிரபுராமைப் பிரபல மிராசுதாரும் பிரதம சகாதார அதிகாரியுமான வெங்கடேசன் சுவீகாரம் எடுத்துக் கொண்டார். சுவீகாரம் எடுத்துக் கொள்ளும்போது அவருக்கு வயது நாற்பதை எட்டவில்லை. சங்கரிக்கு முப்பத்திரண்டு வயதுதான். தங்களுக்கே குழந்தைகள் பிறக்கும் என்று திடமாக நம்பினாள் சங்கரி. ''சுவீகாரத்துக்கு இப்ப என்ன அவசரம்? இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே, பார்க்கலாம்'' என்று சொல்லிப் பார்த்தாள்.

''உனக்குத் தெரியாது; என் காலம் எந்த நிமிஷமும் முடிந்து விடலாம். அப்புறம் உன் மச்சினன்கள் சொத்து முழுவதையும் கபளீகரம் செய்து விடுவார்கள். நீ நிர்க்கதியாய் நிற்பாய்!'' என்று கூறினார். சங்கரி மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

சுற்றி வளைத்து ஏதோ ஒரு வகையில் வெங்கடேசனுக்கு உறவினர் ரங்கநாதன். அவருக்கு இரண்டு பிள்ளைகள், ஒரு பெண். மூத்தவன் முரளிக்கு எட்டு வயது. இளையவன் பிரபுராமுக்கு ஐந்து வயது. பெண் குழந்தை சுபத்ராவுக்கு அப்பொழுது வயது மூன்று.

வெங்கடேசன் தம் அபிலாஷையை ரங்கநாதனிடம் தெரிவித்தார். அவரும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொள்ளவே, ஒரு சுபதினத்தில் பிரபுராமை சாஸ்திரோக்தமாகத் தமது பிள்ளையாக ஸ்வீகரித்துக் கொண்டார் வெங்கடேசன். அன்றைய தினமே ஒரு பெரும் தொகையை ரங்கநாதனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார் வெங்கடேசன்.

அரை நிமிஷமும் அன்னையை விட்டுப் பிரிந்தறியாத இன்னும் மழலை மாறாத அந்தப் பச்சிளம் பாலகனைக் கதறக் கதறத் தங்கள் வீட்டுக்கு அழைத்து வந்தார் வெங்கடேசன். பிரபுராம் இனி அவர்களுடைய பிள்ளை.

சட்டம், சாஸ்திரம், சமூகம் எல்லாம் இதை ஏற்றுக் கொண்டது. ஆனால் பிரபு இதை ஒப்புக்கொள்ளவில்லை. ''அம்மாகிட்டே போகணும்!....அம்மா கிட்டே போகணும்!'' என்று அழுது அடம் பிடித்து ஊரைக் கூட்டினான். அவனும் சாப்பிடவில்லை, மற்றவர்களையும் உண்ணவோ உறங்கவோ விடவில்லை. தின்பதற்கோ விளையாடுவதற்கோ எதை வாங்கிக் கொடுத்தாலும் விசி எறிந்தான். அவனை எப்படிச் சமாதானப்படுத்தித் தங்களுடன் இருக்கச் செய்வது என்று புரியாமல் தவித்தார்கள் வெங்கடேசனும் சங்கரியும்.

''கொஞ்ச நாட்கள் பழகினால் எல்லாம் சரியாகிவிடும்!'' என்றார்கள். அதற்காகப் பிரபுராமை அழைத்துக் கொண்டு சங்கரியும் ரங்கநாதன் வீட்டில் வந்து தங்கலானாள். ஒரு நாள் இங்கும் ஒரு நாள் அங்குமாகக் காலம் கழிந்தது.

நாளடைவில் பிரபுராமுக்குப் புகுந்த இடத்திலும் ஒரு பிடிப்பு ஏற்படத் தொடங்கியது. அவர்களையும் அப்பா அம்மா என்று அழைக்கத் தொடங்கினான். எனினும் பிறந்த இடத்துப் பாசம் விடவில்லை. வாரத்தில் இரண்டு நாட்களாவது பெற்றவளைத் தேடி ஓடி விடுவான்.

இப்படியே மூன்று வருஷ காலம் சென்றது. பிரபுராமுக்கு எட்டு வயது நிரம்பியது. இரண்டு வீட்டிலும் அவன் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. வெங்கடேசன் இதை விரும்பவில்லை. ''அங்கெல்லாம் அடிக்கடி போகக் கூடாது!'' என்று அன்பாகவும் அதிகாரமாகவும் சொல்லிப் பார்த்தார். பிரபு கேட்கிறவனாயில்லை. அவருக்குத் தெரியாமல் போய் வரலானான். இது குறித்து ரங்கநாதனிடம் ஒரு நாள் வருத்தப்பட்டுக் கொண்டார் வெங்கடேசன். '...நீங்கள் இடம் கொடுப்பதால்தானே வருகிறான்?' என்று குற்றம் சாட்டினார்.

அதன் பிறகு இரண்டு மூன்று முறை பிரபு அவர்கள் வீட்டுக்குச் செல்லுகையில், ''இனி மேல் நீ தனியாக இங்கு வரக் கூடாது பிரபு'' என்று ரங்கநாதன் நல்லதனமாகச்சொன்னார். பிரபு அதை லட்சியமே செய்யவில்லை. அதற்குள் வெங்கடேசன் இன்னொரு முறையும் ரங்கநாதன் மனம் நோகும்படி ஏதோ சொல்லி விட்டார்.

ரங்கநாதனுக்கு வருத்தம் ஒரு பக்கம்; எரிச்சல் ஒருபக்கம். 'நம் வயிற்றில் பிறந்தவனிடம் நமக்கு உரிமை இல்லையா?' என்று கஷ்டப்பட்டார்.

''இனிமேல் அந்தப் பயல் வந்தால் உள்ளே விடாதே!'' என்று மனைவிக்குக் கடுமையாக உத்தரவிட்டார்.

மறுநாள் ''அம்மா!'' என்று அழைத்துக் கொண்டு ஓடி வந்தான் பிரபு.

''நில்லுடா அங்கே!'' என்று இடிபோல் கர்ஜித்தார் ரங்கநாதன். அந்தக் கடூரமான குரலைக் கேட்டு அப்படியே வெலவெலத்துப் போய் நின்றான் குழந்தை.

''எங்கடா வந்தே?'' என்று பீரங்கியாக வெடித்தார்.

''அம்மாவைப் பார்க்க...'' நடுங்கிய குரலில் மெள்ள முணுமுணுத்தான் பிரபு.


பிரின்ஸ்
பிளேடு
இறகின்
மென்மைபோல்
முக க்ஷவரம்
செய்யும்
பிளேடு!
THE SYMBOL OF QUALITY
Prince
BLUE RAZOR BLADES
BLUE PRINCE BLADE
MADE IN INDIA
ஃப்ளூரோ கார்பன் முனை கொண்ட
பிரின்ஸ்
ப்ளூ பிளேடுகளை உபயோகியுங்கள்


பாதங்களுக்கு அதிகக் கவர்ச்சி...
இரட்டை நிற
வேக நடை
இரட்டை நிறமும் இருவகை நெசவும் கொண்ட ஸாண்டக் பபியா, மிகப்புதிய, நளமான ஒரே தோலில் பளிச்சிடும் தோற்றமளிக்கும் நவீன ஸாண்டல். செமிலானில் அமைக்கப்பெற்ற இந்த ஸாண்டக், உரு மாறாமலும் ஒளி குறையாமலும் அதிக காலம் உழைக்கும். சுலபமான கவனிப்புக் குறியது. சற்றே துடைத்து விட்டு அணிந்து கொள்ள வேண்டியது தான்.
ஸாண்டக்*
பபியா செமிலான்*
சைஸ் 2-6
விலை 10.25
பல நிற
இணைப்புகளில்
கிடைக்கின்றன
* பதிவுபெற்ற வியாபாரச் சின்னங்கள்
Bata

"இங்கே உனக்கு அம்மாவும் இல்லே, ஆட்டுக் குட்டியும் இல்லே... இன்னொரு தரம் இங்கே வந்தே காலே ஒடிச்சுடுவேன்..." என்று கத்தினார். ஒன்றும் புரியாமல் நின்று கொண்டிருந்தான் பிரபு.

"ஏன்டா நிக்கறே?"

"அம்மாவைப் பார்க்கணும்!"

"யாரையும் பார்க்க முடியாது! போ, உன் வீட்டுக்கு!"

ஒரு நிமிஷம் தந்தையை வெறித்துப் பார்த்தான். பிறகு உள் பக்கம் பார்த்து "அம்மா!.. அம்மா!..." என்று கத்தினான். அடுத்த அறையிலிருந்தபடி இவ்வளவையும் கவனித்துக்கொண்டிருந்த பெற்ற வயிறு பற்றி எரிந்தது. அவளும் ஆவேசத்துடன் வெளியே வந்தாள்.

"என்னடா வச்சிருக்கே அம்மாவுக்கு?" என்று சீறிக் கொண்டே அவன் முன்பு வந்து நின்றாள். அமைதியாக "அம்மா!" என்றழைத்தான் பிரபு.

"கடங்காரா! உன் அருமை அம்மா அங்கே இருக்காடா... இங்கே வந்து வந்து ஏன் கழுத்தறுக்கிறே?"

"நான் இங்கே வரக் கூடாதாம்மா?" அழமாட்டாக் குறையாகக் கெஞ்சினான் பிரபு.

"கூடாது!"

"வந்தால் என்னம்மா?"

"வந்தால் என்னவா?..." என்று கறுவியவாறு சுற்றிலும் பார்த்தாள். ஒரு பூவரசங் குச்சி கிடந்தது. அதைக் கையில் எடுத்துக்கொண்டு "இதால் வீறிடுவேன்!" என்றாள். பிரபுவின் விழிகளில் நீர்த் திரையிட்டது. அடுத்த விநாடி மளமளவென்று கன்னங்களில் உருண்டோடியது. கெஞ்சும் பாவனையில் அம்மாவை ஒரு நிமிஷம் பார்த்தான். பிறகு எதுவும் சொல்லாமல் திரும்பிப் போக முயன்றான். பெற்றவளின் நெஞ்சு குமுறியது.. அவள் விழிகளும் குளமாயின. கையிலிருந்த குச்சியை வீசி எறிந்து விட்டுப் பிரபுவைத் தாவிப் பிடிக்க முயன்றாள். ரங்கநாதன், குறுக்கே வந்து நின்று கொண்டார். நிலைப் படி வரை சென்ற பிரபு நின்று திரும்பிப் பார்த்தான். "இங்கே வாடா கண்ணு!" என்று அன்போடு அழைக்க வேண்டும்போல் பெற்றவளின் உள்ளம் ஏங்கியது. ஆனால் உதடுகள் அசையவில்லை.

"நான் இந்த வீட்டுக்கே வரக் கூடாதோன்னே?... வரமாட்டேன்! இந்த வீட்டுக்கு வரவே மாட்டேன்!..." என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினான் குழந்தை. பிறகு திரும்பிப் பார்க்காமல் ஓடிவிட்டான்.

"பிரபு....பிரபு....!" என்று அழைத்தாள் அவன் அம்மா. அவன் காதுகளில் எதுவும் விழவில்லை. சில நிமிஷங்கள் அவன் சென்ற திசையையே பார்த்தபடி சிலையாக நின்று கொண்டிருந்தார் ரங்கநாதன். பிறகு படார் படார் என்று தலையில் அடித்துக்கொண்டார்.

அன்றைக்கு அந்த வீட்டை விட்டு வெளி வந்தவன்தான் பிரபுராம். கடந்த பதின் மூன்று வருஷங்களில் இரண்டு வீடுகளிலும் எவ்வளவோ விசேஷங்கள் நடந்தன. ரங்கநாதன் வீட்டு விசேஷங்களுக்கு வெங்கடேசனும் சங்கரியும் போய் வருவார்கள். பிரபு எவ்வளவு கூப்பிட்டாலும் போக மாட்டான். வெங்கடேசன் வீட்டுக்கு ரங்கநாதனும் அவர் மனைவியும் வருவார்கள். பிரபு அவர்கள் பக்கம் கூடப் போக மாட்டான். அவர்களாக வந்து க்ஷேமம் விசாரித்தால் ஒரே வார்த்தையில் பதிலளித்து விட்டு நகர்ந்து விடுவான்.

பிரபுராமுக்கு எட்டாவது வயது நடந்து கொண்டிருக்கையில் சங்கரிக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. பிறகு இன்னொரு பிள்ளையும் பிறந்தான்!

இனி அந்த வீட்டில் பிரபுராமுக்கு அவ்வளவு செல்வாக்கு இருக்காதோ என்று அஞ்சினார்கள் அவனைப் பெற்றவர்கள். ஆனால் அவனை மிகவும் உயர்வாகவே வளர்த்து வந்தார் வெங்கடேசன்.

இப்பொழுது சொத்தைப் பங்கிடு செய்யும் பொழுதும் எள்ளத்தனை குறை சொல்ல முடியாதபடி அவ்வளவு நியாயமாக இருந்தது அவர் கூறிய விவரங்கள். அதற்காக அவரை மனதாரப் பாராட்டினான் பிரபு.

அடுத்தபடியாக வனஜாவுக்கும் அவனுக்கும் விரைவிலேயே விமரிசையாகத் திருமணம் நடத்தி விடுமாறு மனைவிக்கு ஆலோசனை கூறினார்.

வனஜா சங்கரியின் தமையன் மகள். பேரழகி! அதோடு தந்தையின் இரண்டு சொத்துக்கு ஒரே வாரிசு அவள்! அவள்



குட்டிக் கதை

ஓர் அரசன் தன் குடிமக்களைச் சரியாகக் கவனிப்பதே இல்லை. உல்லாசமாக ஊர் சுற்றுவது, வேட்டையாடுவது இப்படியே பொழுதைக் கழித்தான்.

மந்திரிக்கோ சமயமறிந்து அவன் குறையைச் சுட்டிக் காட்டித் திருத்த விருப்பம்.

ஒரு நாள் யானையின் மீதேறிக் கடற் கரையோரமாக உலாவும்போது கடற்கரை மணலில் பளபளத்தது ஒரு மண்டை ஓடு.

அரசன் அதை என்னவென்று விசாரிக்க, மந்திரி ஓடிச் சென்று கையில் எடுத்துப் பார்த்துச் சிரித்தான்.

"அமைச்சரே! ஏன் சிரிக்கிறீர்?"

"இல்லை. இந்த மனிதனின் தலையெழுத்தை நினைத்துச் சிரித்தேன்."

"தலையெழுத்தா? உமக்குத் தெரியுமா அதைப் படிக்க... என்ன எழுதியிருக்கிறது அதில்?"


"ஆயுள் முழுதும் வறுமை - இடையில் பத்தாண்டு சிறை வாசம் - இறுதியில் கடற்கரையில் மரணம் - அதற்கும் பின் சிறிது சுகம்!" என்றார் மந்திரி.

"சுகமா?... சாகும்வரை சுகமே இல்லை... அதன் பின் ஏது சுகம்?"

"இறந்த பின்னரேனும் அந்த மண்டை ஓடு பற்றி அரசராகிய தாங்கள் அக்கறையுடன் விசாரித்தீர்களே!...." என்றாரே பார்க்கலாம்... அமைச்சரின் நுட்பமான அறிவுறுத்தல் கண்டு வெட்கி, அன்று முதல் மக்களின் நலத்தில் கவனம் செலுத்தலானான்.

- செவிவழிக் கதை - "தேஜ்"

ரோம்பப் பெரிய கல்யாணம்!



''மன்னிக்கணும்! மேரேஜ் இன்விடேஷனைக் காட்டினால் தான் உள்ளே அனுமதிப் போம்.''

தனக்கு மனைவியாவதென்ருல்?... அதற்காகவும் அவரை வாழ்த்தியது அவன் மனம்.

ஆனல், கடைசியாக ஏன் அப்படிச் சொன்னர்?

நினைக்க நினைக்க அவன் மனவேதனைதான் அதிகமாயிற்று. விடிய விடிய ஏதோ எண்ணமிட்டவாறு உட்கார்ந்திருந்தான்.

அன்று முதல் அவன் சுபாவமே அடியோடு மாறிவிட்டது. கலகலப்பாக எல்லோருடனும் பேசிக்கொண்டிருக்கக் கூடியவன் திடீர் என்று ஏதோ பிரமை பிடித்தவன் போல் நடமாடிக் கொண்டிருந்தான். சரியான சாப்பாடு கிடையாது. வெளியில் எங்கும் போவது கிடையாது. தன் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தான்.

''ஏண்டா இப்படி இருக்கே?'' என்று பல முறை கேட்டுப் பார்த்தாள் சங்கரி. ''ஒண்ணும் இல்லேம்மா'' என்ற ஒரே வார்த்தை தான் அவனிடமிருந்து வந்தது.

வெங்கடேசன் உடம்பும் குணமாகி எழுந்து நடமாடத் தொடங்கினர். நாளுக்கு நாள் தேறிக் கொண்டும் வந்தார். பிரபுராம் மட்டும் தேய்ந்து கொண்டே வந்தான்.

''உனக்கு என்னடா கவலே?'' என்று வெங்கடேசன் பல முறை அவனைக் கேட்டுப் பார்த்தார்.

''எனக்கென்னப்பா கவலே?'' என்பான் ஒரு பலவந்தப் புன்னகையுடன்.

''எப்பப் பார்த்தாலும் ஏதோ யோசிப்பவன் போல இருக்கியே?''

''யோசிக்கிறேன், அப்பா!''

''எதைப் பற்றி?''

''என்னைப் பற்றித்தான்!''

''உன்னைப் பற்றி யோசிக்கவோ கவலேப்படவோ நாங்கள் இருக்கிறேமே!''

''இருந்தாலும்...''

அதற்கு மேல் அவன் எதுவும் சொல்வது கிடையாது.

ஒரு மாதம் சென்றது. ஏதோ ஒரு காரணமாக அவனைச் சேலத்துக்கு அனுப்பினர் வெங்கடேசன். இரண்டு நாட்களில் திரும்பிவிடுமாறு கூறியிருந்தார். ஆனல் பிரபுராம் ஏர்க்காடு, மேட்டூர் எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு ஆறு நாட்கள் கழித்துத் திரும்பி வந்தான். அவன் வீட்டை அடையும்பொழுது மாலே ஐந்து மணி இருக்கும்.

வீட்டில் யாரும் இல்லே. தோட்டத்திலிருந்து வேலேயாள் ஓடி வந்தான். ''ஐயா வந்துட்டீங்களா?'' என்ருன்.

''எல்லோரும் எங்கே?'' என்று கேட்டான் பிரபுராம்.

''ஐயாவுக்கு விஷயம் தெரியாதுங்களா? ரங்கநாத ஐயா காலமாயிட்டாருங்க...''.. என்ருன்.

''என்னது?...'' என்று பதறினன் பிரபு.

''ஆமாங்க!... இன்னிக்குக் காலேயிலே, திடீர்னு போயிட்டாருங்க ... இந்நேரம் மயானக் கரைக்கு எடுத்துக்கிட்டுப் போயிருப்பாங்க...'' என்ருன். பிரபு ஒரு நிமிஷம் கலக்கத்துடன் நின்ருன். பிறகு விர்ரென்று வெளியேறினன்.

சாலே, ரோடு, கடைத் தெரு இங்கெல்லாம் வெகு வேகமாக நடந்தான். காவேரிக்குச் செல்லும் அதிக சந்தடியற்ற பாதைக்கு வந்ததும் ஓடத் தொடங்கினன்.

ரங்கநாதனின் மூத்த பிள்ளே, முரளி இப்பொழுது இங்கில்லே. இரண்டு மாதங்களுக்கு முன்புதான் மேற்படிப்புக்காக ஜெர்மனிக்குச் சென்றிருந்தான்.

இறக்கும்போது இரண்டு பிள்ளேகளும் பக்கத்தில் இல்லாமல் கண்ணே மூடிய தன் தந்தையின் பரிதாபத்தை எண்ணியவாறு அவன் ஓடினன்.

துக்கத்தால் உடலும் உள்ளமும் நடுங்க, துபரக் கண்ணீர் ஆறுகப் பெருகிக் கொண்டிருக்க, 'வந்து விட்டேன், 'வந்துவிட்டேன்' என்று உள்ளக் குரல் ஓலமிட ஓட்டம் ஓட்டமாக இடுகாட்டை நோக்கி ஓடினன்.

பிரபுராம் ஸ்மசானத்தை அடையும்போது இருட்டும் சமயம். ரங்கநாதனைச் சிதையில் அடுக்கியாகி விட்டது. சுடுகாட்டின் நிரந்தரப் பின்னணியான அழுகுரல் கேட்டுக் கொண்டிருந்தது. யாரோ ஒருவர் கையில் தீச்சட்டியுடன் சிதையை வலம் வந்து கொண்டிருந்தார். அடுத்த நிமிஷம் அவர்தான் ரங்கநாதனுக்குக் கொள்ளி போடப் போகிருர். அந்த மயான பூமியே கிடுகிடுக்கும்படி ''நில்லுங்கள்!'' என்று அலறியவாறு பாய்ந்து வந்தான் பிரபுராம். எல்லோரும் அதிர்ச்சியடைந்தவர்கள் போல் அவனைப் பார்த்தனர். ''பிரபு! வந்துட்டியாடா?...'' என்று 'ஓ' வெனக் கதறினள் அவனைப் பெற்றவள். பிரபு யாரையும் திரும்பிப் பார்க்காமல் தீச்சட்டியுடன் நின்றவரை நெருங்கி, ''அவருக்குக் கொள்ளி போட நீங்கள் யார்?'' என்று கேட்டான் அதிகாரமாக.

''வேறு யாரும் இல்லாததால்!''

''யாருமில்லேயா?... அவர் பெற்ற பிள்ளே இதோ தீவட்டி போல் நிற்கிறேன்...''என்று மார்பில் அறைந்து கொண்டான் பிரபு.

''பிரபு!'' என்று அழைத்தவாறு அவனிடம் வந்தார் வெங்கடேசன். அவரை ஏறிட்டுப் பார்த்தான் பிரபு.

''நீ கொள்ளி போடக் கூடாதுடா!'' என்ருர்.

''ஏன் கூடாது? நான் ஏன் என் அப்பனுக்குக் கொள்ளி போடக் கூடாது?'' என்று ஆவ

உங்கள் பணத்திற்கு கைநிறைய

பிரிட்டானியா

பிரிட்டா பிஸ்கட்டுகள்



ருசி மிகுந்த பிரிட்டா பிஸ்கட்டுகளை நயமான விலையில் வாங்கிச் சுவைத்து மகிழுங்கள்.

அவை சில்லரையாக கிடைப்பதால் உங்கள் தேவையான அளவிற்கு சிக்கனமாக வாங்கலாம். குழந்தைகளுக்கும் கை நிறைய கொடுக்கலாம்.

பிரிட்டானியா பிரிட்டா பிஸ்கட்டுகளை எப்போதும் கை வசம் வைத்திருங்கள்.

BBC-1429

பிரிட்டானியா

என்றுமே உயர்தரம்



ஊசி முனையில் சாதனை!

போனி நார்டன் என்னும் இருபத்திரண்டு வயது வாலிபன் இரண்டு மணி நேரத்தில் 1171 முறை ஊசியில் நூலை நுழைத்து உலகச் சாதனை புரிந்தான்!

ஆதாரம்: 'டிட்பிட்ஸ்'
தகவல்: கன்னிகா



அமெரிக்க செனட்டர் ஒருவர் பேசிய பேச்சு இது:

"தேர்தல் பிரசாரத்தின் போது தேர்தலில் நிற்கும் வேட்பாளர் வெற்றி பெற்ற பிறகு என்ன செய்யப் போகிறார் என்று எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள் - வேட்பாளரைத் தவிர.

வேட்பாளரோ தேர்தலில் வெற்றி பெறாவிட்டால் நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறார்." - வி. ந. ஸ்ரீதரன்

காரத்துடன் கத்தினான். எல்லோரும் வெலவெலத்துப் போய் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். வெங்கடேசனே சிறிது மிரண்டு போய் விட்டார்.

"இப்போ உன் கோத்திரமே மாறிப்போச்சுடா!... இப்ப நீ என் பிள்ளை!" என்றார்.

"இல்லை! இல்லை! நான் உங்கள் பிள்ளை இல்லை. என்னைப் பெற்றவர் அவர்தான்!" என்று சிதையைச் சுட்டிக் காட்டினான் பிரபு. பீறிக் கொண்டு வந்த துக்கத்தை அடக்க முடியாமல், "அதோ அவர்தான் என் அப்பா! அவள்தான் என் அம்மா!..." என்று அழுதான் பிரபு.

"இருக்கலாம்டா. ஆனால் நான் உன் ஸ்வீகாரத் தந்தை!" என்றார் அழுத்தந் திருத்தமாக வெங்கடேசன்.

"ஸ்வீகாரத் தந்தையா? எதற்காகய்யா என்னை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டீர்? பெற்றவர்களிடமிருந்து என்னைப் பிரித்து அனாதையாக்கவா?" என்றான் அடிவயிற்றிலிருந்து வந்த ஆங்காரத்துடன்.

"அனாதையா? ஏண்டா இப்படி யெல்லாம் பேசறே? நானில்லையா?" என்றார் உண்மையான வாஞ்சையுடன் வெங்கடேசன்.

"உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"

"என்ன சம்பந்தமா? சாஸ்திரோக்தமாக உன்னை என் பிள்ளையாக..."

"சாஸ்திரோக்தமாக!... ஆனால் இதயபூர்வமாக என்னை உங்கள் பிள்ளையாக நீங்கள் ஏற்கவில்லை!..."

"உனக்கு என்னடா குறை வைத்தேன்?"

"என்ன குறை வைத்தீர்களா? உங்கள் நெஞ்சைத் தொட்டுக் கேளுங்கள். ஒரு மாதத்துக்கு முன்பு உடம்பு சரியில்லாமல் படுத்திருந்தீர்களே, அப்பொழுது என்ன சொன்னீர்கள்? ஒருவேளை நீங்கள் இறந்து விட்டால் உங்கள் வயிற்றிலே பிறந்த பிள்ளைதான் உங்களுக்குக் கொள்ளி போடணும்னு சொல்லலே?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் பிரபுராம். இந்தக் கேள்வியைச் சிறிதும் எதிர்பாராத வெங்கடேசன் ஒரு குற்றவாளியைப் போல் நின்றார்.

"சட்டமும் சாஸ்திரமும் என்னை உங்கள் பிள்ளையாக ஏற்றுக் கொண்ட போது, உங்கள் சடலம்மட்டும் அதை ஏற்காது போலிருக்கு."

வெங்கடேசன் இதற்கும் பதில் சொல்லவில்லை.

பிரபுராம் தீச்சட்டியுடன் நின்று கொண்டிருந்தவரைப் பார்த்து, "நெருப்பை இப்படிக் கொடும்!" என்றான்.

"பிரபு! நீ இந்தக் காரியம் செய்யக் கூடாது!" என்று உத்தரவிட்டார் வெங்கடேசன்

"செய்தால்?"

"என் சொத்தில் உனக்கு எதுவும் கிடைக்காது!"

"நீங்கள் கொடுப்பதாயிருந்தாலும் நான் அதை ஏற்கப் போவதில்லை. என்றைக்கு உங்கள் கடைசி ஆசையைத் தெரிவித்தீர்களோ, அன்றே இந்த முடிவுக்கு வந்துவிட்டேன்....!" என்றான் அலட்சியமாக பிரபு.

"ரங்கநாதன் சொத்திலும் எதிர்பார்க்காதே. எல்லாவற்றையும் முரளிக்கு எழுதி வைத்து விட்டார்!"

"யாருடைய சொத்தும் எனக்குத் தேவையில்லை. பெற்றவர்கள் என்னைக் கைகழுவி விட்டார்கள்; வாங்கினவர்கள் என்னை விலக்கி வைத்தீர்கள். ஆனால் நான் என் கடமையைச் செய்யாமல் இருக்கமாட்டேன்!" என்று படபடவெனக் கூறினான். மறுவிநாடி தன் சட்டையைக் கழற்றி எறிந்தான். பூணூலை மாற்றிப் போட்டுக் கொண்டு வெடுக்கென்று தீச்சட்டியைப் பறித்துக் கொண்டு சிதையை நோக்கி விரைந்தான்.

"பிரபு! பிரபு!" என்று கத்தினார் வெங்கடேசன்.

"யாரும் மூச்சுவிடக் கூடாது!" என்று சத்தம் போட்டான். பிறகு சிதையை மூன்று வலம் வந்து விட்டுப் பெற்றவரின் நெஞ்சிலே அக்கினியைச் சேர்த்தான். துக்கம் தொண்டையை அடைக்க, "அப்பா! உங்கள் பிள்ளைதான் உங்களுக்குத் தீமூட்டியிருக்கிறேன்!" என்று இரண்டு முறை கத்தினான்.

தீ ஜ்வாலை விடத் தொடங்கியது.

அரை மணி நேரத்துக்கு முன்பு வரை இரண்டு பிள்ளைகளைப் பெற்றும் தன் கணவருக்குக் கொள்ளி போட யாருமில்லாமல் போய் விட்டார்களே என்று துக்கித்துக் கொண்டிருந்த ரங்கநாதனின் மனைவி, எரியும் சிதையையும் அதன் முன்பு கர்மவீரனைப் போல் நின்று கொண்டிருந்த பிரபுவையும் பார்த்தாள். சிதையைப் போலவே அவள் அடிவயிற்றிலும் ஒரு தீ எரிந்து கொண்டிருந்தது. ஆனால் அது சுடவில்லை! மாறாக அவள் உடலையும் உள்ளத்தையும் குளிரச் செய்தது.



பெரிய சாதனை!

அமெரிக்காவில் உள்ள வடக்கு கரோலினாவைச் சேர்ந்த டர்ஹாம் என்னும் இடத்தில் உள்ள சிறுவன் இடைவிடாமல் இருபது மணி நேரம் சோப்பு போட்டுக் குளித்து, 'சோப்பு' போட்டுக் குளிப்பதில் ஒரு 'ரெகார்டை' ஏற்படுத்தியிருக்கிறான். - காரனெட்

இது என்ன பெரிய சாதனை? சர்வீஸில் சேர்ந்ததிலிருந்து கடந்த இருபத்தைந்து வருடங்களாக மேலதிகாரிகளைச் 'சோப்பு' போட்டுக் கொண்டு வருகிறேன் என்கிறார் எங்கள் அலுவலக ஹெட் கிளார்க் குப்புசாமி.


- வி. ந. ஸ்ரீதரன்

பாரதத்துக்கு ஒரு 'ஷொட்டு'!

சரித்திரத்தைக் கவனித்தால் இந்தியா கலாசார ரீதியில் ஒரே நாடாக இருந்தாலும், அதன் உள்ளே ஓயாமல் போர்களும் பிரிவுகளும் இருந்து வந்திருப்பது தெரியும். ராஜரீக விஷயத்தில் அதன் ஆட்சியாளர்கள் தந்திரம் மிக்கவர்கள். எதற்கும் துணிந்தவர்கள். பஞ்சமும் வெள்ளமும் கொள்ளை நோய்களும் லட்சக் கணக்கான மக்களை அடிக்கடி பலி கொண்டன. பிறப்பிலே ஏற்றத் தாழ்வு உண்டு என்பது இங்கே மத பூர்வமான ஒரு நம்பிக்கை. ஆயினும் என் கருத்துப்படி உலகிலே வேறு எங்குமே பாரதத்தைப் போல் கௌரவமான மனித உறவுமுறை இருந்தது கிடையாது. மனிதனுக்கு மனிதன் குடிமகனுக்கும் ஆட்சிக்கும் இருந்த உறவுமுறைகள் மனிதாபிமானம் நிறைந்த உறவு. சரித்திர காலத்தில் உலகில் எந்தப் பகுதியிலும் இவ்வளவு குறைந்த அளவு அடிமைகள் இல்லை. அர்த்த சாஸ்திரத்தைப் போல உரிமைப் பாதுகாப்புச் சாஸனம் வேறு எங்கும் இல்லை. மனுவுக்கு ஈடான நீதி நூல் வேறு இல்லை. யுத்த சரித்திரத்திலேயே சூறையாடுவதும் அப்பாவிகளைக் கொல்வதும் பலாத்காரமும் எங்கே குறைவு என்று பார்த்தால் அது தீர்ந்து இந்தியாவில்தான். என்னை மிகவும் கவர்ந்த அம்சம் இந்திய நாகரிகத்தில் காணும் மனிதாபிமானமே.

- ஏ.எல். பாஷம் (தி ஒண்டர் தட் வாஸ் இந்தியா)

- நம்பி சீனிவாசன்






1526, டிசம்பர் 21. அன்று பாபரின் உணவிலே விஷம் வைக்கப்பட்ட சதி தெரிந்துவிட்டது. இப்ராஹிம் லோடியின் தாய் புவா பேகம் தூண்டி நடந்த சதி இது. சமையற்காரனும், உணவு ருசி பார்ப்போனும்கூட உடந்தை என்பது தெரிந்தது. பாபர் உத்தரவிட்டபடி உணவு ருசி பார்ப்போனைத் துண்டம் துண்டமாக வெட்டினார்கள். சமையற்காரன் உயிருடன் அலற அலறத் தோலுரிக்கப்பட்டான். இன்னும் இரண்டு வேலைக்காரிகளில் ஒருத்தியை யானையின் காலால் நசுக்கினார்கள். மற்றவளைப் பீரங்கியால் சுட்டுத் தள்ளினார்கள். புவா பேகத்தைக் கைது செய்து காபுலுக்கு அனுப்பினார் பாபர். அங்கே என்ன நேரும் என்பதை உணர்ந்து அந்த மாது வழியிலேயே சிந்து நதியைக் கடக்கையிலே, காவலிலிருந்து தப்பி நீரிலே குதித்துவிட்டாள்.

- ஜே. எம். ஷெலாட் (அக்பர்) அ. ஆசீர்வாதம்

உணவிலே விஷம்!



கார் காலம்

நியூயார்க் மாநகர மேயர் ஜான் லிண்ட்சே காலத்தைக் கண்ணெனப் போற்றுபவர். அவர் ஒரு நிகழ்ச்சியிலிருந்து இன்னொரு நிகழ்ச்சிக்குக் காரில் சவாரி செய்கிற நேரத்தில் அதிகாரிகளோடு கலந்தாலோசித்துச் சிக்கலான பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பார். இதை அறிந்த நியூயார்க் நகரவாசி ஒருவர் மேயரைக் காரிலேயே சந்தித்து விடலாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரியை அணுகியபோது அவருக்குக் கிடைத்த பதில்: "மேயரின் கார் நேரம் மூன்று வாரங்களுக்கு ஏற்கனவே 'புக்' ஆகிவிட்டது."

ஆதாரம்: பேஜண்ட் - தகவல்: கன்னிகா

என்ன தடுத்தாலும்..

நாகாலாந்து நாடோடிக் கதை

வெகு காலத்துக்குமுன் நடந்தது. மோபுங்கசித் என்னும் கிராமத்தில் ஓர் இளைஞன் இருந்தான். அவன் பெயர் சிறுபா. அதே கிராமத்தில் எல்லையற்ற எழில் வாய்ந்த பெண் ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் ஏதிபென். இருவரும் ஒருவரையொருவர் மிகவும் காதலித்தனர். ஆனால் ஏதிபெனின் தாய்-தந்தையருக்குச் சிறுபாவைப் பிடிக்கவில்லை. ஏனென்றால் சிறுபா ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எனவே தான் இருவருடைய திருமணத்தையும் அவர்கள் விரும்பவில்லை.

ஏதிபென் தினமும் தனது நெல் வயலுக்குப் போவாள். சிலசமயம் தனது தாய் தந்தையரோடு போவாள். சில சமயம் தனியாகப் போவாள். நாகாலாந்து மக்கள் பல நூற்றாண்டுகளாக மலையடிவார நிலங்களிலும் சரிவுகளிலும் உள்ள மரங்களைத் தீவைத்து எரித்துச் சாம்பராக்கி வந்தார்கள். பிறகு எரிந்த பூமியைச் செப்பனிட்டுச் சிறு சிறு நெல் வயல்கள் சமைத்தார்கள். நெல் சாகுபடி தான் அவர்களது முக்கிய தொழில். காலை முதல் மாலைவரை தங்கள் வயல்களில் வேலை செய்வது அவர்கள் வழக்கம். முழுக் குடும்பமேகூட வயல்களுக்குச் சென்று விடுவதுண்டு. மாலையில் வீடு திரும்பும்போது மிகக் களிப்போடு திரும்புவார்கள். நாடோடிப் பாடல்கள் செவிக்கு இனிமையாக ஒலிக்கும். பெண்களின் மடியில் கீரை வகைகள் கனத்திருக்கும். விறகுக்குப் பஞ்சமா காட்டில்? சுள்ளிகள் ஒடித்துச் சுமந்து வருவார்கள்.





சிறுபா, ஏதிபென் எப்பொழுது வயலுக்குப் போவாள் என்பதைப் பார்த்து நிற்பான். அவன் கிராமத்து எல்லைக் கோவில் மேடையில் அமர்ந்திருப்பான். கிராமத்து இளைஞர்கள் கூடும் இடமே கோயில் மேடைதான். குதூகலமாகப் பேசிக் களித்துப் பொழுதைப் போக்குவார்கள். ஏதிபென் தோழிகளுடனோ, தன் குடும்பத்தார்களுடனோ வயலுக்குப் போகும்பொழுது சிறுபா அவளை உன்னிப்பாகக் கவனிப்பான். காரணம், இருவரும் ஒரு சமிக்ஞை தயாரித்து வைத்திருந்தார்கள். ஏதிபென் தன் தோளில் தொங்கும் கூடைக் கயிற்றை ஒரு விரலால் நீவிவிட்டால், அவள் வயலில் தனியாக இருப்பாள் என்பது பொருள். இரு விரல்களால் சரி செய்தால் குடும்பத்தார்களும் வயலில் இருப்பார்கள் என்று பொருள். இந்தச் சமிக்ஞையில்தான் சிறுபாவின் ஆசைகள் உயிர் வாழுவோ மரிக்கவோ செய்தன. ஏதிபென் ஒரு விரலால் கூடைக் கயிற்றை நீவிவிட்டால், சிறுபாவின் மனம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கும். அவன் பின்னாலேயே வயலுக்குப் போவான். அவளோடு வேலை செய்வான். வேலை அலுத்துச் சலித்தால், மலையடிவாரத்தில் வெகு தூரம் சென்று காட்டுமரங்களின் நிழலிலே, ஆற்றுப் படுகையிலே களித்துச் சுகித்திருப்பார்கள்.

இன்றும்கூட மலையடிவாரங்களிலே, காட்டு மரங்களின் நிழலிலே, ஆற்றுப் படுகைகளிலே அவர்கள் இருவருடைய நினைவுகளும் நிலைத்து வாழ்கின்றன.

அன்பின் ஆழத்தில் மூழ்கியும் அவர்கள் இருவரும் துயரமாகவே இருந்தார்கள். ஏனெனில், வாழ்நாள் முழுவதும் இருவரும் இணைந்து வாழும் வழி அவர்களுக்குப் புலனாகவில்லை. என்ன முயன்றும் அவர்களால் திருமணம் புரிந்து கொள்ளமுடியவில்லை. எனவே, இருவரும் நம்பிக்கை இழந்து வாட்டமுற்றனர். துயரத்திலிருந்து விடுவித்துக்கொள்ள மரணத்தைத் தழுவினால் என்ன என்றுகூட இருவரும் எண்ணமிட்டனர்.

ஆனால் மரணமும் அவர்களோடு ஒத்துழைக்க மறுத்தது. எந்தக் காட்டு மலர்களால் ஏதிபெண்ணைச் சிறுபா அலங்கரித்துக் களித்தானோ, எந்தக் காட்டு மலர்களைச் சிறுபாவின் செவிகளில் சூடி ஏதிபெண் மகிழ்ந்தாளோ, அம்மலர்கள் மூலிகைச் செடிகளில் பூத்தவை. அவற்றின் மணம், சக்தி காரணமாக எந்தத் தீய எண்ணமோ காற்றோ அவர்களைத் தீண்ட முடியவில்லை.

ஒரு நாள் இருவரும் காட்டில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். ஏதிபெண் ஒரு மரத்தில் அழகான பழுத்த பழங்களைக் கண்டாள்; ஆசையும் கொண்டாள். சிறுபா அதைப் பறித்து அவளுக்குக் கொடுத்து விட்டான். அன்று ஏனோ அவள் காட்டு மலர்களைச் சூடிக் கொள்ளவில்லை. அதனால் மூலிகைகளின் சக்தி அவளைக் காக்கவில்லை. அந்தப் பழத்தைத் தின்றதும் அவள் உடல் நலம் கெட்டுவிட்டது. இரண்டு நாட்களுக்கெல்லாம் நிலை இன்னும் மோசமாகி அவள் படுத்த படுக்கையானாள். அவள் வீட்டை விட்டு வராமற் போகவே சிறுபா பெருத்த வேதனைக்குள்ளானான். ஏதிபெண்ணைப் பார்க்க முடியாத பிரிவுத் துயர் அவனை வாட்டி எடுத்து விட்டது. அதுவே அவனுக்கு அவளைக் காண ஒரு வழியும் கற்றுத் தந்தது.

ஏதிபெண்ணின் வீடுவரைக்கும் அவன் பலத்த முயற்சியுடன் ஒன்றிகட்டையாக ஒரு சுரங்கப் பாதை சமைத்து விட்டான். ஏதிபெண் நோய்வாய்ப்பட்டுப் படுத்திருந்த அறையிலே அதன் மற்றொரு துவாரம் கணக்காகத் திறந்து கொண்டது. உண்மைக் காதலில் உயிர்த் துடிப்பு செய்த வேலை அது. அத்துவாரத்தின் வழியே ஏதிபெண்ணைப் பார்ப்பதையும் அவள் உடல் நலத்துக்கேற்ற பழங்கள், உணவு வகைகள் கொண்டு தருவதையும் அவன் நல் வாழ்க்கையாகக் கொண்டான்.

ஏதிபெண்ணின் தாய் தந்தையருக்கு, அவளுக்கு எங்கிருந்தோ உணவு கிடைக்கிறது என்ற ஐயம் ஏற்பட்டது. அவர்கள் கடுங் காவல் புரிந்து கண்காணிப்பது என்று முடிவு செய்தனர்.

ஒரு நாள் இரவு முழுவதும் கணப்பு அடுப்புக்கு அருகே அமர்ந்து ஏதிபெண்ணின் தந்தை கண் கொட்டாமல் காவல் காத்தார். அருகிலேயே ஒரு திவட்டியும் தயாராக வைத்துக் கொண்டார், அவசியம் ஏற்பட்டால் கொளுத்திப் பார்க்கலாம் என்று.

இரவு வெகுநேரத்துக்குப்பின் தந்தையின் செவிகளுக்கு ஓர் ஓசை கேட்டது. செவியைக் கூர்மையாக்கிக் கொண்டார். ஏதிபெண்



ஏதோ தின்கிருன். அந்த ஓசைதான் அது என்று முடிவுக்கு வந்தார். உடனே அவர் தீப்பந்தத்தைப் பற்ற வைத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார். ஏதிபென்னின் படுக்கையருகில் ஒரு துவாரம் இருப்பதையும் அதன் வழியே ஒரு கை நீள்வதையும் கண்டார். அந்தக் கையிலிருந்த காப்பு ஆளை அடையாளம் காட்டிக் கொடுத்து விட்டது.

சிருபா ஏதிபென்னை இலேசில் விடமாட்டான் என்பதை உணர்ந்த தந்தை ஏதிபெனுக்குச் சீக்கிரமே மணம் முடிப்பதென்று முடிவுக்கு வந்தார். அதே கையோடு அவன் தந்தை ஒரு பையனைப் பார்த்தார். அவன் பெயர் டின்யூர். பக்கத்துக் கிராமமான சங்கிரஸ்துவில் அவன் வசித்து வந்தான். ஏதிபென் எத்தனையோ எதிர்த்துப் பார்த்தாள். ஆனால் தந்தை விடாப்பிடியாகத் திருமணத்தை உறுதி செய்துவிட்டே மறு காரியம் பார்த்தார்.

திருமண நாளன்று, வேறு வழி எதுவும் புலப்படாமற் போகவே, ஏதிபென் வீட்டை விட்டு ஓடினுள். ஆனால் உடல் நலக் குறைவும் ஓடியதனால் ஏற்பட்ட மூச்சிரைப்பும் அவளைத் தெருவில் கீழே தள்ளிவிட்டன. அவளால் எழுந்திருக்கவே முடியவில்லை. எத்தனையோ இளைஞர்கள் ஒன்றுகூடி அவளைத் தூக்கிப் பார்த்தார்கள். கருங்கல்லெனக் கனத்தாள். அவர்களால் அவளை அசைத்துப் புரட்டக்கூட முடியவில்லை. எல்லோரும் தங்கள் புஜபலத்தைப் பரீட்சித்து ஓய்ந்தபின் சிருபா வந்தான். மலர் மாலையென அவளைத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டான்.

அப்படியும் திருமணம் நிற்பதாயில்லை. நல்லோரையோ நெருங்கிக் கொண்டிருந்தது. டின்யூருக்கும் ஏதிபென்னுக்கும் திருமணம் நடந்தே முடிந்தது. திருமணம் ஆகிவிட்டாலும் சிருபா — ஏதிபென்னின் காதலில் கடுகளவும் குறை காணவில்லை. உள்ளத்தால் ஒருவரை ஒருவர் நேசித்தனர். உடல் நேசமா பெரிது ? அப்பப்பா! இரு உள்ளங்களும் எப்படி மறுகித் தவித்தன!

ஒரு நாள் பிரிவாற்றுமையைத் தாங்க ஒண்ணுத ஏதிபென் நோய்வாய்ப்பட்டாள். அந்த நோயே அவள் உயிருக்கு எமனுக முடிந்தது. அவள் இறந்ததோ இரவு வேளையில். அதனால் யாருக்குமே எதுவுமே தெரியவில்லை. ஆனால் சிருபாவுக்கு மட்டும் தெரிந்துவிட்டது. அவன் தன் வீட்டிலேயே துடிதுடித்துவிட்டான். ஆழ்ந்த துயரத்தில் மூழ்கி அவன் அந்த நள்ளிரவு வேளையிலேயே பித்தம் தலைக்கேறியவனைப் போல் தெருவில் இங்குமங்கும் சுற்றலானுன்.

சிருபா தங்கள் மகளின் பிரிவால் பைத்தியமாகத் திரிவதைக் கண்ட ஏதிபென்னின் தாய்—தந்தையருக்குத் திக்கென்றது. ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது என்றும் தோன்றியது.

டின்யூர் துயரச் செய்தியைக் கூற இதே நேரத்தில் ஓடோடி வந்தான். ஏதிபென்னின் தந்தை, கணவன், காதலன் மூவரும் விறகு ஒடித்து வருவதற்காகக் கானகத்துக்குப் புறப்பட்டனர். ஏதிபென்னின் சடலத்தைப் புகைமூட்டத்தால் மூடி எரித்தாக வேண்டுமே, அதற்காகத்தான்.

மூவரும் ஒரு மரத்தடியை அடைந்தனர். அந்த மலர் மரத்தடிதான் ஏதிபென் தன்னைச் சிருபாவின் கைகளில் முதன் முதலாக ஒப்படைத்த இடம். ஏதிபென் இறந்ததுமே காதல் சின்னமான அம்மரத்தின் மலர்கள் அனைத்தும் வாடி உதிர்ந்திருந்தன; மரமும் பட்டுவிட்டது. பட்ட மரத்தை ஏதிபென்னின் தந்தை வெட்டினுர். மூன்று துண்டுகளாகப் போட்டார். ஒன்றை அவர் தூக்கிக் கொண்டார். இன்னுென்றைக் கணவன் தூக்கிக் கொண்டான். மூன்றிலும் கனமானதைப் பொறுக்கிச் சிருபா தூக்கிக் கொண்டான். அப்பொழுதுதான், தமது மகளைச் சக்தி வாய்ந்த இந்த இளைஞனுக்குக் கொடுக்காமல் போய்விட்டோமே என்ற வருத்தம் அவருக்கு ஏற்பட்டது. இனி வருந்தி என்ன பயன்?

ஏதிபென் இறந்த ஆறுவது நாள் சிருபாவும் இறந்து விட்டான். நாட்டு வழக்கப்படி சிருபாவின் சடலம் வெளியறையிலே வைக்கப்பட்டுப் புகை மூட்டம் போடப்பட்டது. ஒட்டினுற்போலிருந்த அடுத்த அறையில்தான் ஏதிபென்னின் சடலம் வைக்கப்பட்டுப் புகை மூட்டம் போடப்பட்டிருந்தது.

அப்பொழுதுதான் ஓர் அதிசயமான நிகழ்ச்சி நடந்தது. இரு சடலங்களிலிருந்து எழும்பிய புகையும் வானளாவ உயர்ந்து ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டு ஓருயிராகி விட்டன. உண்மைக் காதல் என்பது இது தான் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் அந்த நேரத்தில்தான் ஏற்பட்டது.

அதனுல் இருவருடைய மரித்த சடலத்தையும் ஒரே இடத்தில் வைத்தார்கள்.

ஆனால் உண்மை அன்பையும் பலர் எங்கே பொறுக்கிறுர்கள்? யாரோ ஒருவனுக்கு இந்த உண்மைக் காதல் கண்ணை உறுத்தியது. இரு சடலங்களுக்கும் இடையே ஒரு புல்லைக் கிள்ளிப் போட்டு விட்டான் அவன். அன்றிரவு தந்தையின் கனவில் ஏதிபென் தோன்றினுள். 'எனக்கும் என் காதலருக்கும் இடையே ஒரு மாபெரும் மரம் குறுக்காகக் கிடக்கிறது. அதனுல் நாங்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ள முடியவில்லை' என்றுள்.

தந்தை தேட்டமிட்டார். இருவருக்கும் இடையே ஒரு புல் கிடந்தது. அதை அகற்றினுர்.


வேறு ஒரு தீய நோக்கமுடையானுக்கு என்ன தோன்றிற்றே, ஒரு மூங்கில் குழாயில் நீரை நிரப்பி இரு சடலங்களுக்கும் இடையே வைத்து விட்டான்.

அன்றிரவே ஏதிபென் மீண்டும் தந்தையின் கனவில் தோன்றினுள். 'எனக்கும் என் காதலருக்கும் இடையே பெரிய ஆறு ஒன்று குறுக்கிடுகிறது. அதனுல் நாங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள முடியவில்லை' என்றுள்.

தந்தை மீண்டும் தேடிப் பார்த்தார். மூங்கில் குழாய் ஒன்று கிடைத்தது. அதை அகற்றி விட்டார்.

அப்புறம் ஏதிபென் என்றுமே கனவில் தோன்றவில்லை.

இரு காதலர்களின் ஆத்மாக்களும் என்றென்றைக்குமே பிரிக்க இயலாதவாறு ஒன்றேடு ஒன்று இணைந்து விட்டன. — ரா. வீ.




சுகுணா — புருஷோத்தமன்

மணமகள் : ஸ்ரீ வி. அனந்தாச்சாரியின் புதல்வியும் முசிரி சுப்பிரமணிய அய்யரின் சிஷ்யையுமான பிரபல பாடகி செள. வி. சுகுணா.

மணமகன் : ஸ்ரீ சந்தான கோபாலாச் சாரியாரின் மகனும் நாக்பூரில் ராணுவ உபகரணங்கள் தொழிற் சாலையில் பணியாற்றுபவருமான திரு ஏ. ஜி. புருஷோத்தமன்.

இவ்விருவருக்கும் சமீபத்தில் சென்னையில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414. மதராஸ்-5
தந்தி: 'EVERMANS' போன்: 85334

மதராஸ் சிட் பண்டு 1961 ஆக்ட்படி கீழ்க்காணும் சிட்டுகள் நடத்தப்படுகின்றன
(மதராஸ் ஆக்ட் நெ. 24 OF 1961)

நீண்ட காலச் சிட்டுகள்

50 மாதங்கள் **50 அங்கத்தினர்கள்**

வகுப்பு	மாதச் சந்தா	சிட்டுத் தொகை
LTM	ரூ. 200/-	ரூ. 10,000/-
LTN	ரூ. 100/-	ரூ. 5,000/-
LTO	ரூ. 50/-	ரூ. 2,500/-
LTP	ரூ. 20/-	ரூ. 1,000/-

40 மாதங்கள் **40 அங்கத்தினர்கள்**

வகுப்பு	மாதச் சந்தா	சிட்டுத் தொகை
LTA	ரூ. 500/-	ரூ. 20,000/-
LTB	ரூ. 250/-	ரூ. 10,000/-
LTC	ரூ. 125/-	ரூ. 5,000/-

குறுகிய காலச் சிட்டுகள்


25 மாதங்கள் **25 அங்கத்தினர்கள்**

வகுப்பு	மாதச் சந்தா	சிட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சிட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5,000/-	D	ரூ. 25/-	ரூ. 625/-
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-

சேரும் குருப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்

கிளைகள்: புது டில்லி — பம்பாய் - பெங்களூர் — கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை



“இதோ பார், பாட்டி! நீ என்ன வேணுமானுலும் கர்நாடகமா என்னே இருக்கச் சொல்லு, நான் தயார். ஆனல் மூக்கு மாத்திரம் குத்திக்கச் சொல்லாதே. ப்ளீஸ் பாட்டி!” என்று நான் என் பாட்டியிடம் வாதாடிக்கொண்டிருந்தேன்.

“ரொம்ப நன்னுயிருக்குடி, நாளைக்கும் பிள்ளை வீட்டிலே பெண்ணைப் பார்த்து விட்டு, ‘பெண் மூக்குக் குத்திக்கலே, வேண்டாம்னுட்டா நீ என்ன பண்ணுவே, அதெல்லாம் குத்திண்டுதான் ஆகணும்” என்று பாட்டி பிடிவாதம் பிடித்தாள்.

எங்க வீட்டில் எல்லாத்துக்குமே எங்க பாட்டி வைத்தது தான் சட்டம். காலையில் சமையலிலிருந்து, ராத்திரி சமையல் வரை எல்லாம் என் பாட்டி இஷ்டப்படிதான். பாட்டியும் காலத்துக்கு ஏற்ற மாதிரி எங்களுடன் ஒத்துப் போவார். அதனுல் நாங்கள் ஒருவரும் அவளுடன் எதிர்த்துக் கொள்ள மாட்டோம். ஒரே ஒரு விஷயம் மட்டும் எனக்குப் பாட்டியிடம் பிடிக்காது. தினமும் ‘மூக்கு குத்திக்கோ’ன்னு போர் அடிச்சுடுவாள். கல்லூரியில் பசூராயி சிநேகிதர்கள் பரிகாசம் பண்ணுவார்கள் என்று எவ்வளவு சொன்னுலும் கேட்க மாட்டாள்.

‘சரி பாட்டி, படிப்பு முடிந்ததும் குத்திக் கொள்கிறேன்’ என்று பாட்டியைக் கொஞ்ச நாளைக்குச் சமாதானப்படுத்தி வைத்திருந்தேன். படிப்பு முடிந்த மறுநாள் மறுபடியும் ஆரம்பித்துவிட்டாள். ‘ரிஸல்ட்வரட்டும்’ என்று சொன்னேன். ‘ரிஸல்டும் வந்தாச்சு. பி. ஏ. பாஸும் பண்ணியாச்சு. இப்போ என்ன சொல்றே?’ன்னு கேட்டுத் திரும்பப் பாட்டி நச்சரிக்க ஆரம்பித்துவிட்டாள்.

அதற்குள் என் தகப்பனுர் “நம்ப லதாவுக்கு ஒரு நல்ல வரன் கிடைச்சிருக்கு. பையன் விநயநகரில் 140ம் நம்பரில் இருக்கிறுன். நல்ல வேலே. தாயார் தகப்பனுர் கிடையாது. அடுத்த வாரம் தன் மாமாவுடன் லதாவைப் பார்க்க வருகிறுன்” என்று அடுக்கிக் கொண்டே போனுர். ‘பையனின் பெயர் வாசுதேவன்’ என்று அதையும் சொல்லி விட்டார்.

“சரி, அப்படின்னு லதாவுக்கு இப்ப மூக்குக் குத்தினுல் மூக்கும் புண்ணுகிவிடும். பெண் பார்க்க வரும்போது விகாரமாக் இருக்கும். பிறகு பார்த்துக்கலாம்” என்று என் தாயார் மெல்ல ஒரு யோசனை கூறினுள். “சரி, பெண் பார்த்துவிட்டுப் போன பிறகு சாயந்திரம் அவளுக்கு மூக்கைக்குத்திவிடலாம்” என்று பாட்டி முடிவு பண்ணித் தட்டானுக்கும் ஏற்பாடு பண்ணிவிட்டாள். ஏதோ நல்ல காலம் ஒரு வாரத்துக்கு நிம்மதியா இருக்கலாமேன்னு எனக்கு உள்ளூறக் குஷி.

அடுத்த வாரம் வந்தது. பெண் பார்க்கும் படலமும் வந்தது. வாசலில் கார் வந்து நின்றது. பையனும், பையனின் மாமியும் மாமாவும் வந்தார்கள். நான் அடுத்த அறையில் கடைசி மேக்-அப் பண்ணிக் கொண்டிருந்தேன். எனக்கு அழைப்பு வந்துவிட்டது. வழக்கம் போல் பெரியவர்களுக்கு நமஸ்காரம் நடந்தது. ‘நல்ல வேளே, உங்க பேத்திக்கு மூக்குக் குத்தாமல் வைத்து இருக்கேளே, என் மருமான் ‘மூக்குக் குத்திண்டு இருக்கிற பெண்ணு இருந்தால் வேண்டாம்னு வீட்டிலேயே சொல்லிவிட்டான்’ என்று பாட்டியிடம் ‘அவர்’ மாமி கூறினுள். பாட்டிக்கு ஒரே வருத்தம். எனக்கு ஒரே குஷி.

சாயந்திரம் மூக்குக் குத்த வந்த தட்டானிடம் கொடி பண்ணச் சொல்லி விட்டனர். கல்யாணம் ஜாம் ஜாம்னு நடந்தது. கட்டுச் சாதக் கூடை வைத்தவுடன் சம்பந்திகளோடு என்னையும் அனுப்பிவிட்டார்கள். புக்ககத்தில் நுழைந்து சிறிது நேரத்துக்கெல்லாம் என் கணவர், ரகசியமாக என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போய்விட்டார். உறையின்மேல் ‘வாசுதேவன் 140 விநயநகர்’ என்று எழுதியிருந்தது. அது என் கையெழுத்துத்தான். சந்தேகமே இல்லே. அதில் எழுதியிருந்ததாவது: ‘பிரியமுள்ள வரப் போகும் கணவருக்கு. உங்களுக்கு என்னைப் பார்த்தவுடன் பிடித்துவிடும் என்று நினைக்கிறேன். அப்படிப் பிடித்துவிட்டால் தயவுசெய்து என் பாட்டியிடம் பேத்திக்கு மூக்குக் குத்த வேண்டாம் என்று சொல்லிவிடவும். இவ்வளவு தைரியமாக முன்னுடியே கடிதாக எழுதுவதற்கு மன்னிக்கவும். மற்றவை நேரில். இப்படிக்கு, லதா,

– ஸ்ரீமதி கே. சரோஜா

ஓ! ஜகத்ரக்ஷகா!

கோமதிசுவாமிநாதன்

போலீஸ் இன்ஸ்பெக்டர்
வேப்பேரி போலீஸ் ஸ்டேஷன்
சென்னை—7

ஐயா,

வணக்கம். இன்று காலை ஒரு ஜேப்படி (பிக் பாக்கெட்)க்காரரை வெற்றிப் பெருமிதம் கொள்ள நான் உதவியிருக்கிறேன் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காலை எட்டரை மணி சுமாருக்கு நெடுஞ் சாலையில் உள்ள பாங்கி ஒன்றுக்குப் போய் என் கணக்கிலிருந்து ஐம்பது ரூபாய்களை— (புதிய ஐந்து ரூபாய் நோட்டுக்களாகப் பத்து) வாங்கி அங்கேயே என்னுடைய சாதாரண பருத்தித் துணிச் சட்டைப் பையில் (வெளி உலகுக்கு விளம்பரம் செய்யும் டெரீன் சட்டை அல்ல) போட்டுக் கொண்டு ஐந்நூறு ரூபாய் செலவுகளை எப்படி அந்த ஐம்பது ரூபாய்க்குள் அமுக்கித் திணிப்பது என்ற யோசனையில் லயித்து வெளியே வந்தேன். புரசவாக்கம் மார்க்கெட்டுக்கு எதிர்த்தாற் போல் உள்ள நடை பாதையில் அந்தக் கலகலப்பான காலை வேளையில். சுமார் முப்பது மீட்டர் தூரம் நடந்திருப்பேன். அந்த வரிசையில் சில கடைகள் திறந்திருந்தன. இடையிடையே சில கடைகளின் பூட்டுக்கள் சொந்தக்காரர்களின் வருகையை எதிர் பார்த்துத் தொங்கித் தவம் செய்து கொண்டிருந்தன.

அப்படித் திறக்கப்படாத கடை ஓரமாக வந்து கொண்டிருக்கும்போது முதுகுப் பக்கத்திலிருந்து ஓர் இதமான குரல் ஒலித்தது: ''சார்! உங்க முதுகிலே ஏதோ அசிங்கமாக இருக்கு சார்! துடைச்சுக்குங்க!'' என்ற வார்த்தைகள் அந்தக் குரலில் மிதந்து வந்தன. திரும்பிப் பார்த்தேன். இடது பக்கத்துப் பின் தோள்பட்டைக்குக் கீழே யாரோ வெகு கவனமாக எச்சில் துப்பி யிருந்தார்கள். காக்கா ; கைங்கர்யமில்லை. இந்த விஷயத்தை வெகு சிரத்தையுடன் என் காதில் புகுத்திய கனவானையும் பார்த்தேன். சுமார் முப்பத்தி ஐந்து வயதிருக்கும். சாம்பல் நிறக் கால் சட்டை. வெள்ளை அரைக் கை மேல் சட்டை. ஒதுக்கிவிடப்பட்ட தலை. ஒரு சராசரி மனிதன்! பழுப்பு நிறம். என் முதுகைத் தேடிப் பிடித்து எச்சில் துப்பியவனை அங்கேயே நின்று சபிக்க வேண்டும் என்று ஆசைதான். ஆனால் அவகாசம் இல்லாத குறை. எத்தனையோ வேலைகள் காத்திருந்தன. ''அடடா! சரி! பக்கத்துத் தேங்காய்க் கடையில் கொஞ்சம் நார் வாங்கித் துடைத்துக் கொள்கிறேன்'' என்று இரண்டடி நடந்தேன்.

''அசிங்கமா யிருக்கு சார்! துடைச்சுக் குங்க சார்!'' என்று சொல்லி அந்தப் பரோபகாரக் கனவான் கீழே குனிந்து, வெகு அக்கறையுடன் இந்தப் பணிக்காகவே காத்திருப்பது போலக் கிடந்த ஓர் அநாதைக் கடுதாசித் துண்டை எடுத்துக் கொடுத்தார். நம் விஷயத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்ளும் முன் பின் தெரியாத அந்தக் கனவானின் மனம் புண்ணுக நாம் அலட்சியப் படுத்த அனுமதிக்கக் கூடாது என்ற மனிதாபிமான உணர்ச்சிதான் என் மனத்தில் அந்தக் கணத்தில் மேலோங்கி நின்றது. அவர் குனிந்து பொறுக்கி எடுத்துக் கொடுத்த காகிதத்தைக் கவனத்துடனும் மரியாதையுடனும் கையில் வாங்கிக் கழுத்தைத் திருப்பிக் கண்களை முதுகுப் பக்கம் பதித்து துடைத்துக் கொள்வதில் முனைந்தேன். அந்தக் கனவான் என் வந்தனத்துக்காகக் கூடக் காத்திராமல் தம் பணி முடிந்தது என்ற நிம்மதியுடன் எங்கோ போய் விட்டார்.

நான் துடைத்துக் கொண்டு பத்தடி தூரத்தில் உள்ள தேங்காய்க் கடைக்குப் போய் ஒரு தேங்காயைப் பொறுக்கி விலை நிர்ணயம் செய்துவிட்டு, சட்டைப் பைக்குள் விரலை விட்டேன்! விரல்கள் உள்ளே போனவாறே திரும்பி விட்டன! பை காலி.

அரை விநாடி ஒரு ஷாக்! அடுத்த அரை விநாடியில் ஞானோதயமும் நிம்மதியும் கிட்டின. நான் பாங்கிலிருந்து வெளிவந்த பிறகு அடுத்த இரண்டு மூன்று நிமிட அவகாசத்தில் எனக்கு ஒரு அடி தூர இடைவெளியில் வந்து நின்ற ஒரே கனவான் அந்தப் பரோபகாரக் கனவான்தான். நான் கழுத்தை வளைத்துத் துடைத்துக் கொண்ட நேரத்தில் அந்தக் கனவான் தன் உதவிக்கான கூலியை என்னிடம் வாய் திறந்து கேட்கச் சங்கோசப்பட்டுக் கொண்டு அவராகவே என் சட்டைப் பையிலிருந்து சுவாதீனமாக எடுத்துக் கொண்டு போய்விட்டார் என்று தெரிந்து கொண்டேன்! பக்கத்தில் நின்று கொண்டிருந்தவர்களிடம் விஷயத்தைச் சொல்லி விசாரித்த போது அந்தக் கனவான் எதிர் சாரியில் உள்ள சந்து ஒன்றின் வழியாக வேகமாகப் போனார் என்று சொன்னார்கள். வேறு யார் முதுகிலாவது அசிங்கத்தைப் பார்த்து விட்டு உதவி செய்ய விரைந்தாரோ, என்னவோ?



ஒரு விஷயம்! அந்தக் கனவான் வெகு சிறந்த கலைஞன்! அவர் கலைத் திறமைக்கு நான் சிரம் தாழ்த்துகிறேன். அவரை நேரில் சந்தித்துப் பாராட்ட வேண்டும் என்ற அவாவும் உண்டு. ஒருகால் அவர் எதிர்பாராத விதமாக, அவர் விரல்கள் சரியாக வளைந்து நிமிராத காரணத்தினால் கலாரசனையற்றவர்களின் கைகளில் அகப்படுவதன் மூலம் உங்கள் காவல் நிலையத்துக்கு வந்து சேர்ந்தால் எனக்குத் தகவல் கொடுங்கள். நான் நேரில் வந்து அவரை உங்களுக்கு அறிமுகம் செய்துவிட்டுத் திரும்புகிறேன். போலீஸ் காவலர்கள் கலைஞர்களை நன்கு கவனிக்க வேண்டும் என்று நான் ஒன்றும் புதிதாகச் சொல்லப் போவதில்லை.

தங்கள்

சாம்பசிவம்

✲

வேப்பேரி போலீஸ் ஸ்டேஷன்
சென்னை—7
27—9—70

திரு சாம்பசிவம்
சென்னை—7
விவரம்:

தங்கள் 21—9—70 தேதியிட்ட புகார்க் கடிதம்

ஐயா,

கடந்த இரண்டு நாட்களில் எங்கள் இலாக்காவின் கவனத்துக்குள்ளான சில ஜேப்படிக் கலைஞர்களை எங்கள் காவல் நிலையத்துக்கு வர வழைத்து உபசரித்துக் கொண்டிருக்கிறோம். அந்தக் கலைஞர் குழுவில் அனுபவ பூஷணங்களும் ஆரம்ப கிண்டர்கார்டன்களும் கலந்திருக்கிறார்கள் என்று ஊகிக்க இடமிருக்கிறது. தங்களுக்கு மார்க்கெட் வாசலில் உபகாரம் செய்த பரோபகாரக் கனவான் இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கிறாரா என்று தெரிந்து கொள்ளத் தாங்கள் நாளைக் காலை பத்து மணி சுமாருக்கு எங்கள் காவல் நிலையத்துக்கு வந்து சேரலாம்.

ஒப்பம்

பூமி காவலன்

இன்ஸ்பெக்டர்

வேப்பேரி போலீஸ் ஸ்டேஷன்
சென்னை—7
30—9—70

திரு சாம்பசிவம்
சென்னை—7
விவரம்:


தங்கள் 21—9—70 தேதியிட்ட புகார்க் கடிதம்: 28—9—70 அன்று எங்கள் காவல் நிலையத்துக்குத் தங்கள் வருகை — கலைஞர்கள் சந்திப்பு.

ஐயா,

28—9—70 அன்று தாங்கள் எங்கள் காவல் நிலையத்துக்கு வந்து எங்கள் விருந்தாளிகளைச் சந்தித்தது நினைவிருக்கிறதா? எல்லோரும் ஒரே மாதிரி முகபாவத்துடன் இருந்தார்களா? அல்லது எல்லோர் முகத்திலும் யோக்கியக் களை கடர் விட்டதா? தாங்கள் நிச்சயமாக யாரையும் குறிப்பிட்டுக் காட்ட முடியாத நிலையில் உதட்டைப் பிதுக்கியதை நான் கவனித்தேன். அத்துடன் நான் வேறு ஒரு விஷயத்தையும் கவனிக்க நேர்ந்தது. எங்கள் விருந்தாளிகளில் சற்று நாகரிகமாக இருந்த ஒரு நபர் முன் நீங்கள் வந்து நின்றபோது அந்த நபர் உங்களை முறைத்துப் பார்த்துவிட்டு, 'யூ பிக்பாக்கெட்! யூ ஸ்கவுண்ட்ரல்! யூ ரோக்!' என்று சீறி எழுந்தார். நீங்கள் கலவரமடைந்து சட்டென்று விலகிப் பின்னால் போய்க் கைக்குட்டையால் உங்கள் முகத்தைத் துடைத்துக் கொண்டீர்கள். அப்படியும் உங்கள் வியர்வை அடங்கவில்லை. எங்கள் நிலையத்தில் எனக்கு இது ஒரு புது அனுபவம். யோசித்துப் பார்த்ததில் எனக்குப் பலவித சந்தேகங்கள் தோன்றுகின்றன. அந்த நபரை அப்புறம் தனியாக விசாரித்தேன். நன்கு படித்த மனிதனாகவும் தோன்றுகிறான், ஆனால் அவனுடைய சீற்றத்தின் காரணத்தைச் சொல்ல மறுக்கிறான். ஆகையால் அதற்கான விளக்கத்தைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். உங்கள் மேல் ஏற்பட்ட எங்கள் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள நீங்கள் உதவுவீர்கள் என்று நம்புகிறேன்.

பூமி காவலன்

இன்ஸ்பெக்டர்



9, ஏமாந்த பிள்ளையார் தெரு
சென்னை—7
2—10—70

போலீஸ் இன்ஸ்பெக்டர்
வேப்பேரி போலீஸ் ஸ்டேஷன்
சென்னை—7
விவரம்:

தங்கள் 30—9—70 தேதியிட்ட கடிதம்

ஐயா,

வணக்கம். சந்தேகத்துக்குட்பட்ட குற்றவாளி ஸ்தானத்தில் நிற்கும் ஒரு நபரின் உணர்ச்சிக்குக்கூட முக்கியத்துவம் கொடுத்து அதை விசாரிக்க விரும்பும் உங்கள் மனிதாபிமானத்தை நான் பாராட்டுகிறேன். உணர்ச்சி வசப்பட்டுக் குரலெழுப்பிய அந்த நபரை, ஏறத்தாழப் பத்து ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு எதிர்பாராத விதமாக உங்கள் காவல் நிலையத்தில் சந்தேகத்துக்குள்ளான குற்றவாளிகளின் வரிசையில் நிற்பதைப் பார்த்தபோது நான் என்னவோ அதிர்ச்சியடைந்தது உண்மைதான்! அவனிடம் நான் ஜேப்படி அடித்ததும் உண்மைதான். ஆனால் அவன் சட்டைப் பையிலிருந்து நான் அபகரித்தது மணிபர்ஸ் அல்ல! கரன்ஸி நோட்டு அல்ல! ஒரு சாதாரணக் கடிதம்! இது காலாவதியான விவகாரம்! ஒரு விஷயம். அந்த நபர் என்னுடன் கல்லூரியில் படித்தவன். பட்டதாரி. கெட்டிக்காரன் என்று பெயர் எடுத்தவன். அவ்வளவுதான்!

நிற்க. அடுத்தாற்போல் இன்னொரு வரிசைக் குற்றவாளிகளைக் கொண்டு நிறுத்தி அவர்கள் முன் என்னை மீண்டும் கவர்னர் போலவோ, மந்திரி போலவோ மரியாதை ஏற்கும் பாணியில் நடக்கச் சொல்ல வேண்டாம்! அவர்களில் எவனாவது ஒருவன் என்னைப் பார்த்து 'அண்ணே! நீ எப்போ வேலூரிலிருந்து வந்தே?' என்று விசாரிக்கப் போக, நீங்கள் என்னிடம் மீண்டும் ஏதாவது விளக்கம் கோரலாம்! நான் இப்போதே சொல்லி விடுகிறேன். என் உறவுக்காரர்கள் பலர் வேலூரில் இருக்கிறார்கள். நான் அடிக்கடி அங்கே போய் வருவதுண்டு.

ஐம்பது ரூபாயின் மதிப்பு கடந்த சில தினங்களில் என் மதிப்பில் மிகவும் குறைந்து விட்டதால் அந்தத் தொகை பறிபோனதில் ஏற்பட்ட வருத்தமும் குறைந்து விட்டது. ஐந்நூறு ரூபாய்களாகப் போகாமல் இருந்ததே என்று என் மனத்தைத் தேற்றிக் கொண்டு விட்டேன்.

தங்கள்
சாம்பசிவம்

✲

11, தேர் ஓடாத வீதி
திருவல்லிக்கேணி
4—10—70

நண்பர் சாம்பசிவம் அவர்களுக்கு:

வணக்கம். இந்தக் கடிதத்தை இன்ஸ்பெக்டர் பூமிகாவலன் என்ற முறையில் எழுதவில்லை. ஒரு நண்பன் என்ற முறையில்தான் எழுதுகிறேன். நேற்று என் கையில் கிடைத்த உங்கள் பதிலை ரசித்துப் படித்த பிறகு உங்களுடைய காவல் நிலையப் பட்டதாரி நண்பருடன் இதமாகப் பேச்சுக் கொடுத்தேன். ஆசாமி ஒரு 'இன்டெலெக்சுவல்'. ஷேக்ஸ்பியரிடத்திலிருந்து மேற்கோள்களை சரமாரியாகப் பொழிந்தார். குறளையும் சிலப்பதிகாரத்தையும் கூட அவர் விட்டு வைக்கவில்லை. ஆனால் எடுத்து வீசிய அத்தனை மேற்கோள்களிலுமே ஏதோ ஒரு சோக நிலையும் ஏமாந்த நிலையும்தான் மேலோங்கி நின்றன. அந்த ஆசாமி மீது எந்த விதக் குற்றமும் ருசுவாகாத நிலையில் அவரை வெளியே அனுப்பத் திட்டமிட்டேன். திரைப் படக் கொட்டகை வாயிலில் பெண்கள் பகுதியில் அர்த்தமில்லாமல் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் என்ற சாக்கில் பொழுது போகாத எங்கள் நிலையக் காவலர் ஒருவர் அவரைப் பிடித்து இழுத்து வந்திருக்கிறார். அந்த நபரிடம் ஏற்பட்ட அன்பினால், அவரை விடுவிக்கச் செய்து, ஒரு வேளைச் சாப்பாடு போட்டு அனுப்பலாம் என்ற மதிப்பால் எழுந்த நல்லெண்ணத்துடன் என் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். சாப்பிட உட்கார்ந்தோம். என் மனைவி உணவுப் பாத்திரத்துடன் பரிமாற உள்ளிருந்து தலை குனிந்தவாறு வந்தாள். அவ்வளவுதான். அந்த ஆசாமி, 'சதி! சூழ்ச்சி! ஆல் ஆர் ரோக்ஸ்!' என்று இரைந்து கத்திக் கொண்டு எழுந்து ஓடி விட்டார். என் மனைவி அவரை யாரென்று கவனிக்காத நிலையில் அவளால் ஒன்றும் விளக்கம் கூற இயலவில்லை. அப்புறம் நான் மாத்திரம்தான் தனியாக உட்கார்ந்து சாப்பிட்டு எழுந்தேன்.

நீங்கள் உங்கள் கடிதத்தில் அந்த ஆசாமிக்குக் கொஞ்சம் மூளைக் கோளாறு உண்டு என்று எழுதியிருந்திருக்கலாம். அப்போது நான் எச்சரிக்கையாக அவரை ஸ்டேஷனிலிருந்து நேராகவே வெளியே அனுப்பியிருப்பேன். பரவாயில்லை. அவருடன் பேசிக்



"டாக்ஸிக்குள் நான் நாலு பேருக்கு மேல் ஏற்றவில்லையே! எதற்கு என்னை ஸ்டேஷனுக்கு வரச் சொல்கிறீர்கள்?"

சின்னச் சின்ன பொம்மை



சின்னச் சின்ன பொம்மை
சிங்கார பொம்மை
என்ன வேண்டும் சொல்லேன்
ஏனோ பேசவில்லை
நியூட்ரின் கேண்டி தருவேன்
நாவல்டியும் தருவேன்
நியூட்ரின் கியூபும் தருவேன்
நீயும் நானும் உண்போம்
நியூட்ரின் என்று சொன்னால்
நீயும் தலையை ஆட்டி
வேண்டும் என்று சொன்னாய்
விந்தை விந்தை கண்டேன்!



HCM-18 A TAM

nutrine

நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட், சித்தூர் (ஆ.பி.)

கொண்டிருந்த சில நிமிஷங்கள் சுவையாக இருந்தன.

இனி நீங்கள் அவரைச் சந்திக்க நேரிட்டால் சற்று ஜாக்கிரதையாகவே இருக்கும்படி யோசனை கூறுகிறேன்.

தங்கள்
பூமி காவலன்

✸

9, ஏமாந்த விநாயகர் தெரு
புரசைவாக்கம், சென்னை—7
7—10—70

நண்பர் பூமி காவலன் அவர்களுக்கு.

வணக்கம். தங்கள் கடிதம். தங்களுடன் அதிக அறிமுகமில்லாத நிலையில் அனாவசியமாக மூன்றுவது ஆசாமியின் கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றி வர்ணிக்க வேண்டாம் என்றுதான் நான் அதிகமாகக் குறிப்பிடவில்லை. ஆனால் அதற்கு இப்போது நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

உங்கள் வீட்டுக்கு வந்து சாப்பிடாமல் ஓடிய விருந்தாளி வரதராஜன் ஒரு சாதாரணப் பைத்தியம் இல்லை! காதல் பைத்தியம். காதலில் தோல்வியடைந்த பைத்தியம்!

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவன் வேலை தேடவில்லை. காதலைத் தேடினான். எங்கள் ஊரில் (அந்த வெளியூர்ப் பெயர் அவசியமில்லை!) என் பக்கத்து வீட்டுப் பெண் சியாமளா மீது இவனுக்கு ஒரு கண். ஆனால் அந்தப் பெண் இவன் பக்கம் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. அதை இவன் உணரவுமில்லை. தன்னை அவள் தீவிரமாகக் காதலிக்கிறாள் என்று நம்பி ஏமாந்து கொண்டிருந்தான்.

இடையே ஒரு திருப்பம். அந்தப் பெண் யாரோ ஜகத்ரட்சகன் என்ற தடியனுக்கு ஒரு காதல் கடிதம் எழுதியிருக்கிறாள். அது தபாலில் சேரு முன் அவளுக்குத் தெரியாமல், அவள் விட்டுச் சென்ற புத்தகத்திலிருந்து இவன் கைக்குக் கிடைத்தது. அவ்வளவுதான்! துர்வாசனானான்! நரசிம்மாவதாரம் எடுத்தான்.! இந்திரா காந்தி ஆனான்! 'தன்னை விரும்பாத பெண்ணை யார் மணந்துகொள்கிறான் பார்க்கலாம்!'' என்று சவால் விடுத்தான்! அந்தக் கடிதத்தின் நகலை யார் பெண் பார்க்க வந்தாலும் கொடுத்துக் கலைப்பதாகப் பிரதிக்ஞை செய்தான்.

சியாமளாவின் தகப்பனார் காதில் இந்தச் செய்தி எட்டிற்று. வேதனைப் பட்டார். இந்தச் சிக்கலைத் தீர்க்க என்னிடம் யோசனை கேட்டார்.

யோசனையைச் செயலாகவே மாற்றினேன். கடிதம் அவன் சட்டைப் பையில் இருக்கும் வேளை பார்த்து, ஏழு பரம்பரையாகக் கேடிக் குடும்பத்தில் அவதரித்தவன் போல் கூட்டத்தில் அவன் மேல் மோதி, கடிதத்தை அபேஸ் செய்து அடுத்த வீட்டுக்காரரிடம் கொடுத்தேன். இதைச் சீக்கிரமே தெரிந்துகொண்ட வரதராஜன், தலையைக் கலைத்துக் கொண்டு கதறினான். என்னைப் பழிவாங்குவதாகப் பயமுறுத்தினான். எனக்கென்ன பயம்?

ஆனால் என் மனத்தில் கொஞ்சம் சபலம். கடுதாசியைக் கொண்டு வந்து கொடுத்ததற்காக அடுத்த வீட்டுக்காரர், தம் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் சியாமளாவை எனக்கே கொடுத்து விடுவாரோ என்றுகூட நினைக்க ஆரம்பித்தேன். அந்தப் பெண் கொஞ்சம் அசடு, மாதிரி இருந்தால்கூட அழகாகவே இருப்பாள்!

ஆனால் கடைசியிலே அந்தப் பெண் எங்கோ வெளியூரிலிருந்த ஜகத்ரட்சகன் என்ற பயலைத்தான் கல்யாணம் பண்ணிக் கொண்டாள். வரதராஜன்தான் ஏமாற்றத்தால் பிரமை பிடித்தவன் போல் கொஞ்ச நாட்கள் ஊரில் சுற்றிக் கொண்டிருந்தான். அப்புறம் அவனையும் காணோம். நானும் ஊரை விட்டுக் கிளம்பி விட்டேன். அப்புறம் உங்கள் காவல் நிலையத்தில் பார்த்ததுதான்!

நண்பர்களானோம்! கதை பேசகிறோம்!- வரதராஜன் வாழ்க!

அன்புள்ள
சாம்பசிவம்

✸

வேப்பேரி போலீஸ் ஸ்டேஷன்
சென்னை—7
20—10—70

திரு சாம்பசிவம்
சென்னை—7
விவரம்:

தங்கள் 21—9—70 தேதியிட்ட புகார் கடிதம்

தங்கள் புகார், கண்டுபிடிக்க முடியாத விவகாரம் என்று கருதப்பட்டுத் தள்ளுபடி செய்யப்பட்டது.

பூமி காவலன்
இன்ஸ்பெக்டர்

பி.கு. ஜகத்ரட்சகன் என்று இருந்த என் ஆதி நாள் பெயரைத்தான் காலத்தை ஒட்டிப் பூமிகாவலன் என்று மாற்றிக் கொண்டிருக்கிறேன். நினைவிருக்கட்டும்!

பூ. கா. [ஜ.ர.]



வளர்ப்புப் பிராணிகளைக் கடன்தரும் 'லைப்ரேரி!'

புத்தகங்களை நூலகங்களிலிருந்து வாங்கிப் படிப்பதுபோல் பிராணிகளையும் கடனாக வாங்கி வளர்க்க 'லைப்ரெரி'கள் அமெரிக்காவில் சில இடங்களில் இப்போது ஏற்பட்டுள்ளன.

பாம்பு முதல் சகல பிராணிகளையும் வாரத்துக்கு இவ்வளவு என்கிற கட்டணத்தில் பெற்று வளர்க்கலாம்.

அவற்றை எப்படிப் பராமரிக்க வேண்டும், எந்த வித உணவு தர வேண்டும் என்பதற்கெல்லாம் அந்த 'லைப்ரெரி' தகவல் அளிக்கிறது. சிறுவர் சிறுமியருக்கு மட்டுமின்றிப் பள்ளிகளுக்கும் இந்தப் பிராணிகள் பாட போதனையின் போது உதவக் கடனாகத் தரப்படுகின்றன.

''நஜன்''

இருமலா?

பெப்ஸ்

இருமல் மற்றும் தொண்டைப் புண்களுக்கு எதிராக விந்தைச் செயல் புரிகிறது

லாஸஞ்சைப் போல வாயில் அடக்குங்கள் பெப்ஸ். பாது காப்புடன் இதமளிக்கும் மூலிகைச் சத்துக்கள் விரை விலே வெளிப்படுகின்றன. இந்த அரிய சத்துக்கள் மூச்சுடன் கலந்து உங்கள் தொண்டையையும் சுவாச கோசத்தையும் நெகிழ்த்து கின்றன. இருமலோ, தொண்டைப் புண்ணோ அல்லது ஜலதோஷமோ உங்களைத் தொற்றும்போது பெப்ஸ் சக்தியுடன் இதமளிக்கிறது.



பெப்ஸ்

50 ஆண்டுகளுக்கும் மேலாக நம்பகமான இருமல் நிவாரணி



★ இக்குறிப்பிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது

★ "வரலாறு காணாத வகையில் அரசு ஊழியர்களுக்கு வாரி வழங்கிய வள்ளல்" எனப் பாராட்டப்பட்டுள்ளார் தமிழக முதல்வர் திரு கருணாநிதி. பிரதியுபகாரத்தை எதிர்பாராது கொடுப்பவனே வள்ளலாக முடியும். மக்களின் வாக்குகளையே நம்பி வாழும் அரசியல்வாதி பொதுமக்களிடமிருந்து திரட்டிய வரிப் பணத்தைக் கொண்டு குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் வாரி வழங்குவது வள்ளன்மை ஆக முடியாது. மேலும் விலைவாசிகள் ஏகத்தாறுக வரலாறு காணாத வகையில் உயர்ந்திருக்கையில் ஊதிய உயர்வு அளிப்பது வள்ளன்மையாகுமா? நன்கொடையா தந்து விட்டார்? அக்காலத்து அரசர்கள் யாருக்கு வாரி வழங்கினாலும், அவர்கள் தம்மால் உதவி பெற்றவரின் தயவை நம்பி வாழவில்லை. இக்காலத்திலும்



பலர் அப்படித் தங்களுக்கு ஒருவிதப் பயனும் எதிர்பாராது கல்விக்காக வாரி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் இன்று நடந்திருப்பது என்ன? ஒரு சாராருக்குக் கொடுத்த ஊதிய உயர்வினால் உடனடியாக விலைவாசிகள் ஏறப் போகின்றன. ஊதிய உயர்வால் ஆகும் அதிகச் செலவுக்காக அரசு புது வரிகள் போடக்கூடும். இதனால் துன்பப்படப் போவது கடைசியில் ஏழைகளே. இவ்வாறு ஒரு சாராருக்கு ஊதிய உயர்வைக் கொடுத்து வள்ளல் எனப் பெயர் பெறுவதைக் காட்டிலும் விலைவாசிகளைக் குறைத்து எல்லா மக்களுமே பயனடைவதற்கான வழிகளை ஏன் செய்யக் கூடாது? கலைஞரைப் பாராட்டும் சுவரொட்டிகளின் அருகே காணப்படும் (மக்களின் நல்வாசியைக் கோரும்) அண்ணாவின் படம் போட்ட சுவரொட்டி, வாரி வழங்கிய வள்ளல் தன்மைக்கு அரசியல் நோக்கம் உண்டோ என ஐயுறச் செய்கின்றது.

சென்னை — 30
6—1—71 வெ. பிரணாத்

பயிற்றுமொழி விஷயத்தில் தமிழக அரசு ஒருதலைப்பட்சமாக முடிவு செய்துவிட்டு, அம்முடிவை மற்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள் மீது திணிப்பது எவ்வளவு விவேகமற்ற காரியம்?

நம் மாநிலத்தில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஏராளமாய் உள்ளனர். அவர்களும் இம்மாநிலம் வளமடையப் பாடுபடுபவர்களே. அவர்களின் குழந்தைகள் தமிழில் தான் பயில வேண்டுமெனக் கட்டாயப்படுத்தினால் அது என்ன நியாயம்? அவர்களுக்குத் தங்கள் தாய்மொழியின் மீது பற்றில்லை என்பது அரசின் முடிவா? அல்லது அவர்களின் தாய்மொழியைப் புறக்கணித்துச் சிறுபான்மையினரை ஒடுக்க வேண்டுமென அரசு முடிவெடுத்துள்ளதா? மற்ற மொழியினரும் அவரவர் தாய்மொழியில் பாடபோதனை வேண்டுமெனக் கேட்டால் — அரசும் பல்கலைக் கழகமும் அவ்வசதி செய்துதர முன்வருமா?

இவ் விஷயத்தில் சிறுபான்மையினரின் அடிப்படை ஜீவாதார உரிமைகளை அரசு பறிக்க முயலுகின்றது. திராவிட நாடு கோரியவர்கள் இன்று இம்மாநிலத்தில் மற்ற திராவிட மொழியினரை இரண்டாந்தரக் குடிமக்களாக்கப் பார்க்கிறார்கள்.


அனைத்து மொழியினருக்கும் பொதுவான திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். அவரவர் விருப்பப்படி பயிற்று மொழியை (தமிழ் அல்லது ஆங்கிலம்)த் தேர்ந்தெடுக்கும் உரிமையை அளிக்க வேண்டும்.

3—1—71 இராதா ரெட்டி

மாணவர்கள் மீண்டும் மொழிக் கிளர்ச்சியைத் தூண்டுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக, கல்லூரிகள் திறப்பதை இன்னும் பதினைந்து நாட்கள் ஒத்திப்போடச் சென்னைப் பல்கலைக் கழகம் முடிவு செய்திருப்பதனையறிந்த எவரும் அதிர்ச்சிக்குள்ளாகாமல் இருக்க முடியாது. போதனமொழி குறித்த பிரச்னையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்தரத் தக்க ஒரு நல்ல முடிவினை எடுப்பதை விடுத்துக் கல்லூரிகளை மூடிவிடுவதால் என்ன லாபம்? மீண்டும் பொங்கல் கழித்து, கல்லூரிகள் திறக்கப்படும் போது, மாணவர்கள் கிளர்ச்சியில் இறங்கினால், பல்கலைக் கழகத்தினர் கல்லூரிகளை மீண்டும் மூடி விடுவார்களா? கல்லூரிகள் திறக்கப்பட்டவுடன், ஆசிரியர்கள் பாடத் திட்டத்தினை முடிப்பதற்காகப் பாடங்களை விரைவாக நடத்தியாக வேண்டும். (மாணவர்களுக்கு விரைவாக நடத்தினால் புரிகிறதோ இல்லையோ? அதைப் பற்றிக் கவலையில்லை)— ஆக இவற்றால் இறுதியில் பலியாடுகளாவது மாணவர்கள்தாம்.

ஒரு தீமையை அகற்றி நன்மை விளையச் செய்தால் அது சீர்திருத்தமாகும். பல்லாண்டுகளாக நல்ல பலன் அளித்து வந்துள்ள ஒரு நடைமுறையை மாற்றுவது சீர்திருத்தமல்ல, விஷப் பரீட்சை.

புத்தமங்கலம்
2—1—71 இரா. சேதுராமன்



Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31

Managing Editor: T. Sadasivam



ASP/AS-19

நீலோபர் 3 மாதங்களில் நீந்த ஆரம்பித்தாள். 4 மாதங்களில் அவளுடைய பிறப்புஎடை இரட்டிப்பாகியது! வாளிப்பான அவளுடைய அழகிய கைகளையும் கால்களையும் தாய்மார்கள் நின்று ரசித்தார்கள். இந்த மோகினியின் பெரிய இரகசியம்: ஒரு விசேஷமான குழந்தை உணவு.





அறிமுகப்படுத்திய இரண்டாண்டுகளுக்குள் அமுல்ஸ்ப்ரே இந்தியாவிலேயே உச்ச விற்பனையுள்ள குழந்தை உணவாகி விட்டது. விசேஷமான ஊட்டத்தை அளிப்பதற்காக, அது ஒரு விசேஷ செய்முறைப்படி, விசேஷமான ஆக்கமுறையில்(ஸ்ப்ரே டிரையிங்) தயாரிக்கப் படுகிறது. ஆம், உங்களுடைய அருமைக் குழந்தைக்காக, சீரணிக்க எளிதான அமுல்ஸ்ப்ரே சம விகித ஊட்டச் சத்தை வாரி வழங்குகிறது: அவசியமான வைட்டமின்களும் கனிப் பொருள்களும்; மூளையும் உடலும் நன்கு வளர, அதிகமான தரம் மிகுந்த புரதம்.

அமுல்ஸ்ப்ரே

தாய்ப் பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது.



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

